பதிவு எண் 2041

KUDI ARASU.

தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா / வெளி நாடு 1½ அணா }

குடி அரசு

வருட சந்தா ...	ரூ 3—0
6 மாத சந்தா ,, ...	ரூ 1—12
வெளிநாட்டிற்கு ,, ...	ரூ 4—0

வாரப்பதிப்பு.

ஆசிரியர்: ஈ. வே. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு	அ. 12
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு	ரூ. 2
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்	

வால்யூ 4. | ஈரோடு, விபவ ௵ சித்திரை மீ 24உ (6—5—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 2.

இனாம்! இனாம்

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனா இனாம்.

எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் சித்திரவேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன்பேனா இனாம் அனுப்பபடும். கடியாரம் விலை ரூ 4-12-0. 5வருஷம் உத்தரவாதம் உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

இங்கிலீஷ் கரஸ்பாண்டன்ஸ் டிபார்ட்மெண்ட்

5—மீ இங்கிலீஷ்கோர்ஸ்

புது ஆரம்பம்! முந்துங்கள்!!

100—மாணவர்களுக்கு மேல் எடுக்கப்படமாட்டாது.

வயதாகி விட்டதென்று நினைக்க வேண்டாம். ஆர்க்ரைட் என்னும் மேதாவி 50-வது வயதில் ஆங்கில இலக்கணம் படிக்க ஆரம்பித்தார். 5மீ கோர்ஸ், ஜூனியர், சீனியர் இம்மூன்று கோர்ஸ்களையும் முடித்து பாஸ் பண்ணினவர்கள் டாக்டர், இன்ஜினியர், லாயர் முதலிய தொழில் படிப்புக்கும் இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய இடங்களில் மேலான படிப்புகளுக்கும் எடுக்கப்படுகிறார்கள். டை கோர்ஸ்களை தாங்கள் செய்யும் தொழிலுக்கு யாதொரு இடையூறின்றி தபால் மூலம் படித்து தாங்கள் விரும்பும் தொழிலுக்குப் போகலாம். ஏராளமான நற்சாட்சி பத்திரங்கள். முதலாவது 5 மாத இங்கிலீஷ் கோர்ஸில் சேருங்கள். ரூ. 5—0—0 (முழுக்கோர்ஸ்) அயல்நாடுகளுக்கு வி. பி. மூலம் அனுப்பப்படமாட்டாது. ஒவ்வொரு கோர்ஸ் முடிந்ததும் உயர்ந்த சர்டிபிகேட் கொடுக்கப்படும். தமிழ் தெரிந்த எவரும் சேரலாம்.

டைரக்டர்,

கேம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூட்,

நாகூர்

டேபில் டைம்பீஸ் இனாம்!!!

எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலையின் பேரில் ...க்கூடிய ஒரு அழகான டேபில் டைம்பீஸ் இனாமாக சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். மூன்றுங்கள் விலை ரூ. 7-8-0 தபால் கூலி பிரத்தியேகம்.



வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் இதற்கு 8-8-0 முன் பணம் அனுப்பவேண்டும்.

தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி மதராஸ்.

முன் விலை ரூ. 14 இப்பொழுது ரூ 7.
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கடியாரங்கள்

மேற்கண்டபடி எந்தஷேப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உயர்ந்தது. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொருகடியாரத்திற்கும் ரால்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச்சேர்த்து அனுப்பப்படும். 5வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras

மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ௵ ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும், தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில் எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார் இன்ஜினியரிங்வொர்க்ஸ்,
மைலாப்பூர், மதராஸ்.

நூதன ஜெர்மன் எலக்டிரிக் விளக்கு.

இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப் பறித்துக்கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளான ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்கக் கும்பலாகக்கூடி விடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும். குறைந்த விலை 4—8—0, தபால் செலவு 0—6—0.

தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி. மதராஸ்.

இனாம்! இனாம்!

சாரவிவேகி சதாநந்தன் சம்பாஷணை 'கிழவன் குமரனானன்' இவ்விரண்டு கதைகள் அடங்கிய புத்தகம் தங்கள் விலாசம் தெரிவித்தால் இனாமாக அனுப்புவோம்,

ஸ்ரீ சாது இரத்தினசற்குரு புத்தகசாலை,
பார்க் டவன் போஸ்டு, சென்னை.

கணித சோதிடம்

பரிசுத்த கணிதப்படி கணிதஞ்செய்து பலன் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆருடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னரென்று மவகை சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூல்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாகாமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலையாவது கடிதம் எழுதும்போ நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுகம் செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

இனும்! இனும்!! இனும்!!!
எங்கள் லேஹியமானது ஸ்ரீ கொக்கோக மஹாமுனிவரால் அருளிச் செய்யப்பட்டதல்லவென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனும்.
ஸ்ரீ கோக்கோக மஹா முனிவர் அருளிச்செய்த அசல்

சிந்தாமணி லேஹியம்.

(அயகாந்த செந்தூரம்.)

இந்த லேகியத்தில் 196 விதக் கடைச் சரக்குகளும், வித்துகளும், யூனானி மிஸ்ரிகளும், பொன் அம்பர், பாதம் பருப்பு, பிஸ்தா, அக்ரோட், சல்கூஜா பருப்புகளும், அவைகளுடன் மலை மூலிகைகளைக் கொண்டுவந்து இயந்திரத்தின் வாயிலாய்க் கொடுத்து அதன் மூலமாய் வரும் சஞ்சீவியின் சத்தை ஏராளமாகச் சேர்த்து பசு நெய், பசும் பால், மலைத் தேன் முதலியனவும் உறவாக்கி, கை பாகம், செய்பாகம் தவருமல் செய்துள்ளோம். ஆகார விஷயத்தில் யாதும் கிர்ப்பந்தமில்லை. எல்லா காலத்திலும் எல்லா ஊரிலும் எந்த சீதோஷ்ண நிலைமையிலும் மேற்படி லேகிய செந்தூரத்தை சாப்பிடலாம். சாப்பிடுவதற்கும் வாய்க்கு அல்வாவைக் காட்டிலும் அதிக ருசியுள்ளதாயிருக்கும் என்பதையும் அறிவித்துக் கொள்ளுகிறோம். இதற்கு பத்தியம் இல்லை.

இந்த லேகிய செந்தூரத்தை சாப்பிடுவதனுல் உண்டாகும் குணங்கள்.

1. நித்திரையிலும் பெண்களோடு பேசிக்கொண்டிருக்கும்போதும் நினைத்தபோதும் உண்டாகும் துரிதஸ்கலிதம் என்னும் கொடிய வியாதியை தலையெடுக்கவொட்டாமல் அடித்துவிடும்.
2. தளர்ந்து துவண்டு மெதுவுபட்ட இராஜ கருவிகளாகிய நரம்புகளை முறுக்கேற்றி கெட்டிப்படுத்தி கைகால் இடுப்பு முதலியவைகளுக்கு அதிக பலத்தைக் கொடுத்து இல்லறத்தில் அபரிமிதமான பிரியத்தைத் தரும்.
3. கிழத் தன்மையைப் போக்கி இளமையைத் திருப்பித்தரும்.
4. சரீரமானது பத்தரைமாற்றுப் பசும் பொன்னைப்போல் பளபளப்பைத் தரும்.
5. ஞாபக சக்தியை அதிகப்படுத்தி இன்பரசத்தை ஊட்டும்.
6. இன்னும் மேக சம்பந்தமான குன்மங்கள், சூலை, அண்டவாதம், குடல்வாதம், ஆண், பெண் குறிகளிலுண்டாகும் மேகங்கள், பாரிசவாய்வு, ஓடுவாதம், அஜீர்ணம் முதலியவையும் காற்ருய்ப் பறந்து உடம்புக்கு சுகத்தைக் கொடுக்கும்.

நண்பர்களே! இந்த லேகியமானது 50 வருட காலமாய் இந்தியா, பர்மா, சிலோன் ஐக்கிய மலாய் நாடுகள், ஜாவா, மோரீஸ், நேட்டால் முதலிய பல தேசங்களில் நிகரற்ற தென பிரசித்தி பெற்றது. நூற்றுக் கணக்கான சுதேச வைத்தியர்கள், ராஜாக்கள், ஜமீன்தார்கள், லாயர்கள், தேசாபிமானிகள், ஸ்கூல் உபாத்தியாயர்கள், வர்த்தகர்கள், தலைமை கங்காணிமார்கள் முதலிய கனதனவான்கள் நமது லேகியத்தை புசித்து ஆயிரக்கணக்கான நற் சாட்சிப் பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

ஒரு மண்டலம் 48 நாள் சாப்பிடக் கூடிய லேகிய செந்தூரம் டப்பி ஒன்றுக்கு ரூபாய் 5. வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் முன்பணம் அனுப்பும்போது தபாற் செலவையும் சேர்த்து அனுப்ப வேண்டுமென்ற நிரம்பவும் தாழ்மையாய் கேட்டுக் கொள்ளுகிறோம். எமது விலாசம்: ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
பிரும்ம சமாஜ கட்டடம், ஜி. டி. மதராஸ்.

முந்துங்கள்! முந்துங்கள்!!

'இந்திய-மாதா'

மிஸ். காதரைன் மேயோ என்னும் அமெரிக்க மாது தன் இந்திய—சுற்றுப்பிரயாணத்தில் கண்டவைகளையும், கேட்டவைகளையும் கொண்டு பெரும் பிரட்டாக நம்மையும் நம் சகோதரிகளையும் தூஷித்து எழுதியிருக்கும் புரட்டுப் புராண புஸ்தகத்தின் சுத்த மொழி பெயர்ப்பு:

இதை ஒவ்வொரு இந்தியரும் வாசித்து, அயல் நாட்டார் நம்மை எவ்வளவு இழிவுபடுத்தத் தயாராயிருக்கிறார்களென்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

பெரிய புஸ்தகம்உயர்ந்த பைண்டு.

புஸ்தகத்தின்பேரில் பாரத மாதாவின் படம் கண்ணைக் கவரும்படியாக பல கலர்களில் அச்சிடப் பட்டிருக்கிறது.

இங்கிலீஷ் பதிப்பு ரூ. 8—0—0 ஆக விற்கப்படுகிறது. தமிழர்கள் படிக்க வேண்டும் என்ற உத்தேசத்துடன் அசல் விலைக்கே விற்கிறோம். முன்பணம் ரூ. 1—8—0 அனுப்பிப் பதிவுசெய்து கொள்ளுங்கள்.

விலை ரூ. 1—8—0.

முன்பணம் அனுப்புவோருக்கு தபாற்செலவு இனும்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,
Book-Depot, சென்னை.

சிரிப்பு! சிரித்து சிரித்து வயிறு சிரிப்பு!
புண்ணாய் விட்டதென்று ஒருவர் எழுதுகிறார்.

முத்துமாமா.

நேயர்களே! இந்தக் கதையைப் படித்து விட்டால் நீங்கள் சாப்பிடும் போதும் சிரிப்பீர்கள், தூங்கும்போதுங்கூட சிரிப்பீர்கள். வேண்டுவோர் 4½ அணு ஸ்டாம்பு அனுப்பவும். எந்த தேசத்து ஸ்டாம்பாயிருந்தாலும் அனுப்பலாம்.

வாஸன் புஸ்தகசாலை,
97, அண்ணுபிள்ளைத் தெரு, மதராஸ்.

முந்துங்கள்!

விலை ரூ. 3-8-0 தான் ரூ. 3-8-0 தான்
110 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி



சாமான்களின் விவரம்.

18 காரட் ரோல்டு கோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனு 1; 18 காரட் ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; ஷை சர்ட் பொத்தான்கள் செட் 12; ஷை கல்லிழைத்த புருச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; நேர்த்தியான முகம் பார்க்கும் கண்ணுடி 1; அழகிய தந்த சீப்பு 1; மடிப்புள்ள கத்தி 1; நேர்த்தியான கத்தி 1; காமினேஷன் நூதன சாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பேன்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1; பலரக பென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12; மணிபர்ஸ் 1; ஜெர்மன் இங்கி புட்டி 1; இங்கி மாத்திரைகள் 12; செண்ட் புட்டி 1; தேசிய டிரான்ஸ்பர் படங்கள் 12; அழகிய பலரக சேப்டி பின்கள் 25 ஆக 110 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி 1-க்கு 3—8—0. P. K. மூர்த்தி கம்பெனி
தபால் பெட்டி 119, மதராஸ்.

தமிழ் புக்கீப்பிங்.

விலை ரூபாய் 1.

கணக்கு வைக்கும் முறையை நன்கு போதிப்பது. ஒற்றைப்பதிவு, இரட்டைப்பதிவு இரண்டு பாகங்களுமடங்கியிருக்கின்றன. அநேக வியாபார இரகசியங்களையுமுடையது. வியாபாரிகள், மாணக்கர்கள், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் அவசியம்.

தேவி ஆஸ்ரமம்,
திரௌபதையம்மன் கோவில் வீதி,
புதுச்சேரி.

'சேலம் மாம்பழம்'

விற்பனைக்கு தயாராகிவிட்டது, விலை சரசம்.

தினசரி மார்க்கட் நிலவரத்திற்கு என்னுடைய சொந்த பார்வையின்மேல் பொறுக்கி எடுத்து ஜாக்கிறதையாய் பாக் செய்தனுப்பப்படும். அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.

செடிகள், விதைகள் கேட்லாக் இனும்.

ச. கோ. இ. காசிமீரு சாயபு,
ஹெட்நர்சரி அண்டு பழவியாபாரம், சேலம்.
தந்தி விலாசம்:— "ஸ்டோர்," சேலம்.

மனுஸ்மிருதியும் ஸ்ரீ. ராஜகோபாலாச்சாரியும்

கைவல்ய சாமியார் எழுதியது

'குடி அரசு' வாரமொருதரம்வெளி வருவதால் அதைக் குற்றம் சொல்லுகிறவர்களை உடனுக்குடன் சமாதானப்படுத்த முடிவதில்லை. எல்லாருக்கும் சமாதானம் சொல்லிக்கொண்டே வரும் காலதாமதத்திற்குப் பொறுத்துக்கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறோம். 'மனுசட்டத்தைச் சண்முடித்தனமாகக் கண்டிக்கிறார்கள்' என்று ஸ்ரீ. ராஜகோபாலச்சாரியார் எழுதுகிறார். இருதய மற்ற வீண்யுக்தி வாத மாத்திரமயுள்ள பல ஆச்சாரிகளினால் உண்டான அநியாயக் கொடுமைகள் இந்த நூற்றாண்டிலும் திருத்தப்படாமல் இந்த 20ம் நூற்றாண்டிலும் இருக்கவேண்டுமென்று இந்த ஆச்சாரியாரும் நினைத்தால் நம் நாட்டு ஆச்சாரிகளின பரம்பரை வாசனை இவரையும் விட்டு நீங்கவில்லையே என்று நினைத்து துரோணாச்சாரியையும் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். நூறு பசு மூளையை விட ஒரு பசு இருதயம் விசேடமென்பது உலகஉபகாரம் செய்த பெரியவர்களின் வாக்கு. கருணைப்பிரவாகவள்ளல் ராமானுஜாச்சாரியின் மரபினரென்று சொல்லிக்கொள்ளும் இவர்கள் மனக்கருணையை விட்டு விட்டு புத்திவன்மையால் தங்கள் செல்வாக்கையே நிலை நிறுத்த சக்தியை எல்லாம் செலவு செய்து வந்ததினாலேயே தென்தேசம் இத்தனை சீர் குலைவுக்குக் காரணமாயிற்று.

ஏகலைவனென்னும் வேடனுக்கு வில்வித்தை கற்றுக்கொடுக்க துரோணாச்சாரி மறுத்து விட்டார். ஏகலைவன் துரோணாச்சாரியைப் போல் ஒரு சிலை செய்து வெம்பக்கூடத்தில் வைத்து அவரையே குருவாக நினைத்து எல்லா வில்வித்தையும் கற்றுக்கொண்டான், இதைத் தெரிந்த துரோணாச்சாரி தன் மகனான அஸ்வத்தாமாவிற்கும் சிஷ்யனான அர்ச்சுனனுக்கும் விரோதியாய் வந்துவிடாதபடி ஏகலைவனுடைய வில்திறமை பிரயோஜனமில்லாமல் போக தந்திரமாக அவன் குரு பக்தியை பரிசோதிப்பவர்போல் அவன் கை விரலை தக்ஷிணையாக வாங்கிக்கொண்டார். அதோடு அவன் வில்லையும் எறிந்து விட்டுப்போய்விட்டான். துரோணாச்சாரி ஏகலைவனுக்கு வில் வித்தை கற்றுக்கொடுக்க வில்லை. அவனுடைய மனோசக்தியால் கற்றுக்கொண்டான். அவன் கற்றுக்கொள்ளக் காரணமாக விருந்தது துரோணாச்சாரிதான். இவன் அவன் திறமைக்குச் சந்தோஷப்பட்டு முதல் சிஷ்யனாக அங்கீகரிக்காமல் அவன் மேல் அருளை கொண்டு அவனை [illegible] குருதக்ஷிணையாக பெருவிரலை வாங்கி அவன் முன்னேற்றத்தையே பாழ்பண்ணின மனப்பான்மையை விட்டு துரோணாச்சாரியார் நீங்கவில்லை என்றால் மனு சட்டத்தைப் பற்றின கவலையை விட்டு ராஜகோபாலாச்சாரி எப்படி நீங்குவார்.

உலகில் ஒரு மதமும் மானிட வர்க்கத்தின் பெருமையை இந்து மதத்தைப் போல அவ்வளவு உயர்ந்தபடியில் போதிப்பதில்லை என்று சொன்ன சுவாமி விவேகானந்தர் உலகில தாழ்ந்தோர் எளியோர் இவர்களுடைய கழுத்தில் இந்து மதத்தைப்போல எந்த மதமும் ஏறி மிதிப்பதுமில்லை; மதத்தின் குற்றமில்லாவிட்டாலும் இந்து மதத்திலுள்ள ஆசாரிகளும் சாஸ்திரிகளும் ஆகிய வெளி வேஷக்காரர்களே பாரமார்த்திகம் வியாவகாரிகம் என்ற கொள்கைகளின் வழியாய் கொடுமை செய்வதற்கு எல்லாவித தந்திரங்களையும் சிருஷ்டித்தார்கள்; குரூர சுபாவத்தையுடைய ஒரு ஜன சமூகம் எளியவர்கள் தாழ்ந்தவர்கள் இவர்களின்மேல் அடிமேல் அடியாக அடிக்கிறார்கள். ஆனால் அடி எங்கிருந்து வருகின்றதென்று எளியவர்கள் அறியார்கள். ஒவ்வொரு ஜீவராசியும் ஆத்மாவின் பெருக்கமே என்று இந்து மதஸ்தனுக்கு இந்து தர்மம் உபதேசிக்கையில் இருதயக் குறைவால் இரக்கமின்மையால் ஆணவத்தால், தன் லாபத்தால், அநுபவ ஞானக் குறைவால், உண்டாயிருக்கும். ஆஷாடபூதி வேடமும், இருதயப் புரட்டும், செய்து, வைதீக கொடுமைக்கும், நிஷ்டூரத்திற்கும் பலமாய் பிடிக்கப்பட்டு கீழே வீழ்ந்து கிடக்கும் நம் தேசத்து லட்சக்கணக்கான ஜனங்களை கைதூக்கிவிட உங்கள் மதத்திலிருக்கும் வைதிக கொடுமைகளை எடுத்து விடுங்கள், அப்பொழுது உங்கள் மதமே உயர்ந்தது'' என்றார் சுவாமி விவேகானந்தர். அவைகள் நம்மெல்லாருடைய முன்னால் பிரத்தியட்சத்திலிருக்கிறது. இந்த கொடுமைகளுக்கு மூலங்களாக விருந்து ஜன சமூகங்களுக்குக் கற்பிக்கப்பட்ட நூல்கள் ஒழியவேண்டுமென்றே நாங்களும் சொல்லுகிறோம். இதனால் இந்து தர்மம் கெடாது. இந்து தர்மத்தை மூடிக்கொண்டு துன்பமும் கொடுமையுமான மூடக்கொள்கைகளின் ஆபாசங்களை தீர்த்தால் இந்து தர்மமும் பிரகாசிக்கும்.

மனுதர்மம், பாரதம், ராமாயணம் முதலியவைகள் வைதிக மதத்தால் ஜனசமூகங்களை தாழ்த்தவும் கொடுமை செய்யவும் உபயோகப்பட்டிருக்கின்றனவேயொழிய ஜனசமூகங்களை ஒன்று சேர்க்கவும் மனத்தூய்மைக்கும் இதுவரையிலும் ஏதாவது நன்மையும் உண்டு பண்ணினதுண்டா? இந்த இதிகாசங்கள் எதற்காக ஏற்பட்டதோ அதன் கருத்தின் ரகசியத்தையாவது இந்துசமூகம்சேர்த்து கொள்ள முடிகிறதா? வேதாந்தமான வைதிக மதத்திற்கு உடன்பட்டது சுருதிகளே பிரமாணமென்பதும் மற்றதெல்லாம் தியாஜ்யம் என்பதும் இந்து மசம நிச்சயமாக விருக்கையில் புராண மதம் ஒழிய வேண்டுமென்று நாங்கள் சொன்னால் எங்களை ஏன் குற்றம் சொல்லுகிறார்கள் நம் சமயமாகிய இந்து மதம் தவிர மற்ற சமயங்களில் மறுமைக்காக கடவுளை வழிபட அரசனுக்கும் குருவுக்கும் குடிகளுக்கும் ஒரே விதமான உரிமை. இந்து மதத்தில் பார்ப்பானைத்தவிர வேறு யாருக்கு அவ்வுரிமையில்லை. மறுமைக்காக பார்ப்பானையே வழிபட வேண்டும். இந்து மதத்தில் பார்ப்பானைத்தவிர மற்றவர்களுக்கு கடவுளைப் பூசிக்கும் ஆலயங்களிலும், சுயமரியாதையுடன் படிக்கத்தக்க சமய நூல்களிலும், கல்வி கற்றுக்கொள்ளும் சமய நூல்களிலும், கல்வி கற்றுக் கொள்ளும் பாடசாலைகளிலும் எவ்வளவோ வித்தியாசம் கற்பிக்கப்பட்டிருக்கிறதே. அதற்கெல்லாம் மனுச் சட்டமும் அதைச் சம்மதித்த இதிகாசங்களுமே காரணமென்கிறோம் இவைகள் தான் நாம் இன்றைக்கு அனுபவித்துவரும் துன்பங்களுக்கு காரணமென்றும் சொல்கிறோம். மனு கண்டதை எழுதினாரா? கேட்டதை எழுதினாரா? இபற்றை மாறுதலேமனுச் சட்டமாயிற்று என்பவைகள் எப்படியிருந்தாலும் மனுஎழுதினது ஞாயமா? அவை சமூகத்தில் ஆசாரமாக விளங்குவது சரியா? [illegible] அத்தனை பேரையும் வேசிமகன் ஒழுக்கமில்லாதவன் ஆசாரமில்லாதவன் என்று எழுதி வைத்திருக்கிறதே. இதைமனு எழுதினால் தான் என்ன? அதற்கு முன் இருந்தவர்கள் ஏற்படுத்தினால் தானென்ன? பார்ப்பான் கர்மத்தை விட்டாலும்பாதகமில்லை. பிராயசித்தத்தால் சுத்தியடைகிறான். க்ஷத்திரியன் கர்மத்தை விட்டால் மலம், பிணம் இவைகளைத் தின்னும் கடபூத மென்னும் பேயாய்ப் பிறக்கிறான். வைசியன் கர்மத்தை விட்டால் [illegible] சாப்பிடுகிற மேம்ராஜ்யோதிகன் என்னும் பேயாகவும் சூத்திரன் பாப்பானுக்கு ஸ்மிருதியில் விதித்த ஊழியனாயில்லாவிட்டால் சீலைப்பேனைத்தின்னும் பேயாகவும் பிறக்கிறான் என்று எழுதியிருக்கும் மனுசட்டத்தின அர்த்தத்தைச் சொன்னால் சீலைப்பேனைத்தின்னும் பேயாய்ப் பிறப்பதற்கு பயந்தவன் பாப்பானின் ஊழியனாக விருக்கட்டும். எங்களை திட்டி அவன் மறைவிலே வாழட்டும். சுயமரியாதையை அழித்து விடுவதாக அந்த அடிமைகள் வீரம் பேசுவதிலுள்ள மனுஷத் தன்மை என்ன ?

தற்காலம் மனுதர்மசாஸ்திரம் இந்து சமூகத்தில் ஆதிக்கம் பெற்றிருக்கிறதா? இக்கேள்விக்கு இரண்டுவிதமாகவும் பதிலளிக்கலாம். பண்டைக் காலத்திலிருந்த கல்வி முறை, குடும்பவாழ்க்கை சமூக க்ஷேமலாப முறைகள், இவற்றை நிராகரிக்காதிருக்கும் இந்துக்களிடை அது அந்த அம்சங்களில் வேதவாக்குபோல் ஆதிக்கம் பெற்றிருக்கிறதென்று ஆச்சாரி சொல்லுகிறார். நம் தேசத்தில் ஒரு பார்ப்பானுடைய குடும்பவாழ்க்கையில் பண்டைக் காலத்து கல்வி முறை குடும்பவாழ்க்கை முறை சமூக க்ஷேமலாப முறைகள் இல்லையென்றும் எல்லாம் இங்கிலீஷ் படிப்பும் இங்கிலீஷ் வாழ்க்கையும், வெங்காயச்சாம்பாரும்,காப்பி சோடா, பிஸ்கட், சாக்லெட் பப்ரமெண்டும் சமூக க்ஷேமலாபங்களைக் கெடுக்க தன் லாபத்தில் மாத்திரம் மனுச்சட்டம் வேதவாக்காகக்காட்டுகிறார்கள் என்று தான் சொல்லுகிறோம். வழக்கங்களும் எண்ணங்களும் மாறிப் போனதின் பயனை இந்து சமூக முறையில் அந்தந்த விஷயங்களிலெல்லாம் மனுதர்மசாஸ்திரத்திற்கு ஆதிக்க மேதுமில்லை அந்த விஷயங்களில் அது அடியோடு புறக்கணிக்கப் படுகிறது என்று ஆச்சாரி சொல்லுகிறார். வாஸ்தவம் பார்ப்பார்கள் உண்பதில், உடுத்துவதில், வேலைக்குப் போவதில்,பணம் சம்பாதிப்பதில், உத்தியோகம் ஏற்பதில், தனக்குச் சௌகரியமென்று தோன்றும் உலக விவகாரங்களிலெல்லாம், மனுவைத்தள்ளிப் விட்டார்கள். கோவில், சத்திரம், ஆஸ்டல், பள்ளிக்கூடம், வீதி, தேர், திருநாள்,சொத்துரிமை,மற்ற விவகாரங்கள் இத்தனையிலும் மனுவைக் புறக்கணிப்பதில்லையே பார்ப்பார்கள் என்று தான் நாங்களும் சொல்லுகிறோம் மனுதர்மசாஸ்திரத்திற்கு எந்தெந்த விஷயங்களில் மதிப்பளிக்கப் பட்டிருக்கிறதோ அந்த விஷயங்களை சற்றும் மாறுபடாததாகவோ மாறுதல் செய்யப்படாததாகவோ இருக்கவேண்டியிருக்கிறதென்று ஆச்சாரிசொல்கிறார். இந்த இடத்தில் தான் இவர் பாப்பான் பாப்பானாகவே யிருக்கிறார். பாப்பான் நடப்பதில் மனுச்சட்டத்திற்கு மதிப்பில்லை. மற்றவர்கள் நடப்பதில் மனுச்சட்டத்திற்கு மதிப்பு கொடுத்தே தீரவேண்டும். இதை நினைத்துத்தான் மனுச் சட்டத்தை சிலவிடத்தில் மாறுதல் செய்யப் படாததாக விருக்கின்றதென்று ஆச்சாரி சொல்லுகின்றார். மனுச்சட்டம் ஒரு இடத்தில் ஒரு மாதிரியாகவும் இன்னொரு இடத்தில் இன்னொரு மாதிரியாகவும் ஏன் இருக்கக வேண்டு மென்றே நாங்களும் கேட்கிறோம்.

பண்டைக் காலத்துப் பெண்கள் கூடா ஒழுக்க முடையவர்களாக இருந்தார்கள் என்று நாங்கள் சொல்லவில்லை. எந்தவித அவசியத்தை முன்னிட்டும் சொல்லமாட்டோம். பண்டைக்காலத்துத் தமிழ் நாட்டுப் பெண்களின் வீரச்செயலும் அவர்களின் உத்தம வாழ்க்கையும் ஒழுக்க நிர்ணயமும் நிறைந்து கிடக்கும் தமிழ் நூல்களும் பரம்பரைக் கதையும் தனிப்பட்ட ஒவ்வொரு பெரும் குடும்பத்திலிருந்து உத்தம வாழ்க்கை நடத்திய பெண்களின் சரித்திரங்களும் ஒவ்வொரு ஊரிலும் தினமும் பேசப்படுவதும் தமிழ் நாடெல்லாம் நிறைந்து கிடப்பதும் யாவருமறிவர். மனுஸ்மிருதியில் பெண்கள் கற்பும் கட்டுமில்லாதவர்களென்று எழுதப்பட்டிருக்கிறதே! இது ஞாயமா? இது தர்மசாஸ்திரமாகுமா? மிஸ் மேயோ புஸ்தகத்தைக் குற்றம் சொல்லுகிறவர்கள் இந்த தர்மசாஸ்திரத்திற்குப் பரிந்து ஏன் வரவேண்டும் என்றே கேட்டோம். கேட்டதை விட்டுவிட்டு எங்களை ஜன

இதன் தொடர்ச்சி 22-ம் பக்கம் பார்க்க.

திருக்குறள் ஐய வினாக்கள்.

தமிழ் நிலையுணர்ந்த பெரியார்காள்!

தமிழ் நாடும், சிறப்பாக உலகமும் உயர்வடையவேண்டுமாயின், எங்கும் "தமிழ் மொழி" அதன் மெய்த் தத்துவத்தோடு போதிக்கப்படல் வேண்டும். அதற்காக எங்கணும் "மெய்க் கல்விக் கழகங்கள்" ஏற்படல் வேண்டும். அங்கு கண்டிப்பாக மேல்தர நிலைக்குரிய 'தொல்காப்பிய இலக்கணமும்' மெய்ச் சைவத்தை புணர்த்தி உயிர்கள் யாவிற்குமே தொண்டாற்றப் புகட்டும் தமிழ் மறைபாம் 'திருக்குறள் இலக்கியமும்' போதிக்கப்பட்டாலொழிய மெய்யொளி தெளிவு காண்ட லியலாவே யியலா. நிற்க, அப்படிப்பட்ட இரு புத்தகங்களிலும் எக்காலத்திலோ ஆரியர்களால் சிற்சில குறிப்பிட்ட இடங்களில், சில சொற்களும் எழுத்துக்களும் பொருளும் திருத்தியும் மாற்றப்பெற்றும் உள்ளதெனவெளிக்காட்டப் புகு மடியவனின் திருக்குறள் ஐய வினாக்களை மட்டும் அறிவித்துக்கொள்ளுகின்றேன். ஆகவே, பொருளறிந்த பெரியார்கள் இவ்வைய வினாக்களுக்கு விடை பகர்வீர்களாக!

1. "ஐந்தவித்தானாற்றல் அகல் விசும்புளார் கோமா, னிந்திரனே சாலுங்கரி' இதில் "இந்திரன் சாட்சி" தமிழ்மொழி தத்துவத்திற்குப் பொருந்துமா? பொருந்துமானால் தெளிவாய் விளக்குக! பொருந்தாதெனின் அச்சொல்லிற்குப் பதில் எச்சொல் பொருந்தும்? மேலும் வள்ளுவப் பெருமான் 1330 குறள்களிலும், "வாய்மை, கற்பு, ஊக்கம்" முதலிய அரும் பொருள்களுக்கு உதாரணத்தை கூறத் தெரியாமலா? இரண்டே குறள்களில் மட்டும் 'ஆரியக்கதைகளை கூறியுள்ளார்? இஃதுதன் உண்மையைப் பரமனே அறிவன்.

2. மடியிலா மன்னவனெய்து மடியளந்தான், றாஅயதெல்லா மொருங்கு" இதில் "அடியளந்தான்" என்பது மூவரில் ஒருவர். (மடியிலாது) நெறிமுறை ஒழுக்கங் குன்றாது தன்னுயிர்போல் மன்னுயிர்காத்து அறக்கடவுளை வணங்கும் ஓர் உத்தம சத்ய அரசனுக்கு கிடைக்க வேண்டிய பாக்யம் மூன்றிலொன்று தானா கிட்டும்? இல்லவே இல்லை; இது படுமோசம். ஆகவே இஃதையும் மேற்குறிப்பிட்டபடி விளக்குக.

3. தலைப் பெரியார் காமத்துப்பாலிலே கூட ஒரு கொச்சைப் பதமும் பச்சையாக கூறாதவர் 'கல்லாதான்சொற் காமுறுதல் என்ற குறளில் மட்டுமா கொச்சைப்பதம் பகன்றிருப்பார்? இது சுத்த இழிவேயாகும். ஆகவே இதனை முன்போற் தெளிவாய் விளக்குக!

4. "மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான் பிறப்பொழுக்கங் குன்றக்கெடும்" இதில் "பார்ப்பான்"

5. "பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த, நன்மை பயக்குமெனின்" இதில் 'பொய்மை"

6. "அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய், நின்றது மன்னவன் கோல்" இதில் 'அந்தணர்"

7, ஆபயன்குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர், காவலன் காவானெனின்" இதில் 'அறுதொழிலோர்'

8, ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று, சூழினுந் தாமுந்துறும்" இதில் 'ஊழ்'

9. "மேற் பிறந்தாராயினும் கல்லாதார் கீழ்ப் பிறந்துங், கற்றாரனைத்திலர் பாடு" இதில் 'மேல்' 'கீழ்'

10. "இருமை வகைதெரிந்தீண்டறம் பூண்டார், பெருமை பிறங்கிற்றுலகு" இதில் 'இருமை'

11. "வகுத்தான் வகுத்தவகை யல்லார் க்கோடி, தொகுத்தார்க்குந் துய்த்தலரிது" இதில் 'வகுத்தான்' வகுத்தவகை, தொகுத்தார்'

12. "பரிந்தோம்பிப் பற்றற்றமென்பர் விருந்தோம்பி வேள்வி தலைப்படாதார்" இதில் 'வேள்வி'

13. செவியுணவிற் கேள்வியுடையார், அவியுணவி னான்றாரோடொப்பர்" இதில் 'அவியுணவு'

14. நல்லாறெனினுங் கொளறீதுமேலுலகம் இல்லெனினு மீதலே நன்று" இதில் 'மேலுலகம்'

15. "அகரமுதல வெழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றேயுலகு" இதில்பூராவிற்கும்.

இவைகளில் 4 முதல் 15 வரையுள்ள குறள்களில் குறிப்பிட்டுள்ள சொற்களுக்குப் பொருள்மட்டும் முதன் மூன்றைப்போலவே தெளிவாய் விளக்குக!

16. "அழுக்கற்றகன் றாருமில்லை அஃதிலார், பெருக்கத்திற் றீர்ந்தாருமில்" இதில் "ஃ" சரியா? சரியானால் பொருள் பொருந்துமா? இல்லையானால் எந்த எழுத்து இருத்தல் வேண்டும்.

17. "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கலானென்றாங், கைம்புலத்தாறோம்பறலை" இதில் "தென்புலத்தார்" என்பதின் மெய் பொருளென்னை? தெளிவாய் விளக்குக.

குறிப்பு:—திருக்குறள் "தமிழ் மறையாகத், தமிழ் மொழியிலேயே யிருப்பதால், மேற் கூறிய ஐய வினாக்களுக்கு விடைபகர்வோர். 1. 'தமிழ்மொழி நுட்பம்' 2. 'தொல்காப்பியம்' 3. 'திருக்குறளின் முன்பின் குறள் வெண்பாக்கள்' முதலியவற்றின் ஆதாரங்களைக்கொண்டுமட்டும் தெளிவு படுத்துதல் வேண்டும். மற்றேனையாவும் இந்நூற்கு மிதற்குப் பொருந்தாதென்பதுமாகி,

தே. தி. க. மு. நித்யானந்த மடிகள்

தென் இந்திய மருத்துவ சங்கம்

21—4—28 ஆம் நாள் மாலை 5 மணிக்கு சங்க நிலையத்தில் சிறுத்தொண்டநாயனார் குருபூசை நடைபெற்றது. சங்க தலைவர் பண்டித எஸ் எஸ் ஆனந்தம் அவர்களின் உருவப்படத்தை சங்கத்தில் திரு. மதுரை முத்து முதலியார் அவர்கள் திறந்து வைத்தார். அப்போது பண்டிதர் சித்த வைத்தியத்திற்காகவும் மருத்துவ குலத்தாருக்காகவும் செய்தியாகங்களைப்பற்றி விரிவாகப் பேசினார். பின்னர் இசைப்புலவர் R. U. நாயுடு அவர்களால் யாழ், சாரங்கி, சிதாரா, நீர்க்கிண்ணத்திசை (ஜலதரங்கம்) முதலிய இன்னிசைக்கருவிகள் வாசிக்கப்பட்டன.

பின்னர் தமிழ்ப் புலவர் சோமசுந்தர முதலியாரால் சிறுத்தொண்டர் கதைப் பிரசங்கம் நடைபெற்றது.

பின்னர் பண்டிதர் ஆனந்தம் அவர்கள் சிறுத்தொண்டர் குருபூசை இன்னதெனபதுபற்றி பல" எடுத்துக் காட்டுகளோடு பேசவந்திருந்த மருத்துவகுல சிறுவர் சிறுமிகளுக்கு புத்தகம் சற்பலகை சிற்றுண்டி முதலியவை அளித்தார் வந்திருந்தோர்கட்கு பூ பழம் சந்தனம் முதலியன வழங்கப்பட்டு கூட்டம் 9 மணிக்கு இனிது கலைந்தது.

காரியதரிசி.

இலங்கைக்குச் செல்கிறார்கள்.

இவ்வூர் (பட்டிவீரன்பட்டி) பிரபிரபல பல ஸ்ரீமானும் சட்டசபை அங்கத்தினரும் மந்திரிகட்சியின் பிரதமஸ்தம்பமும் நாடார் மகா ஜனசபை உபதலைவருமான ஸ்ரீமான் W. P. A. சௌந்திர பாண்டிய நாடார் அவர்களின் திருக்குமாரர்களான S. தினதயாளமூர்த்தி S. ராஜசேகரபாண்டியன் ஆகிய இரண்டு பேர்களையும் கண்டி டிரனிட்டி காலேஜில் சேர்ப்பதற்காக மே மாதம் முதல் வாரத்தில் ஸ்ரீமான்கள் W. P. A. சௌந்திரபாண்டிய நாடார் M. L. C. அவர்களும் மதராஸ் லா காலேஜ் ஸ்ரீமான் சிவராஜ் M. L. C. அவர்களும் புறப்படுகிறார்கள். முதல் முதல் நாடார வகுப்புக்கே ஓர் வழிகாட்டியாய் இருப்பதைப் பற்றி நாம் பெருமகிழ்ச்சி அடைவதோடு நம்மவர் இனியாவது நம் குல மக்களை இலங்கை முதலிய அன்னிய நாடுகளுக்கு கல்வி பயின்று வர அனுப்பி வைப்பார்களென்று எல்லாவல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

"நாடார்தொண்டர் மகாநாடு"

சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் முதலியவைகளை நிலை நிறுத்தும் பொருட்டு ஸ்தாபனமாகி யிருக்கும் நாடார் தொண்டர் படையின் முதலாவது மகாநாட்டை வருகிற ஆடி மாதத்தில் அருப்புக்கோட்டையில் நடை பெறப் போகும் 12-வது நாடார்மகாநாட்டில் தினங்கள்மூன்றில்சௌகரியமான ஓர் நாளில் அவ்வூர் நமது தேவஸ்தான ஆலயத்தில் நடத்துவ தென்று தீர்மானித்திருக்கிறது. ஷை மகா நாட்டிற்கு கொண்டு வரும் எல்லா தீர்மானங்களையும் 30—6—28உ க்குள் முன்னதாக விஷயாலோசனைக் கூட்டத்தில் வைத்துத் தீர்மானிப்பதற்காக நாகப்பட்டணம் நாடார் தொண்டர்படை ஆபீசுக்கு அனுப்பிவிட வேண்டுமென்றும் மகாநாடு நிச்சயமாய்க்கூடும் இடமும் நேரமும் பேப்பர்கள் மூலமாயும் நோட்டீஸ்கள் மூலமாயும் அறிவிக்கப்படும் என்றும் நாடார் தொண்டர் படை செக்ரடரி எஸ். கே. ராமசாமி நாடார் நாகப்பட்டணத்திலிருந்து அறிவிக்கிறார்.

நடுவு நிலைமையும் திருவள்ளுவரும்.

கட்டுரை 13.

திரு. சாமி சிதம்பரனார் எழுதுவது.

பொதுவாக மக்களியல்பை நோக்குவோமாயின் யாவருக்கும் பகைவர் சிலரிருப்பார்கள். நண்பர் சிலரிருப்பார்கள். பகையும் நட்புமற்ற நொதுமலருமிருப்பார்கள். பகைவர்கள் கேடுசூழ்வார்கள்; நண்பர்கள் நன்மை புரிவார்கள்; நொதுமலர் நன்மையுஞ் செய்யார்; தீமையும் ஆற்றார். பகைவர்க்குத் தீங்கு செய்ய முயல்வதும் நண்பர்க்கு நன்மை புரியத் தொடங்குவதும் நொதுமலர்க்கு ஒன்றுஞ் செய்யாமல் வாளாவிருப்பதும் இயற்கை. மேற்கூறிய பகைவர், நண்பர், நொதுமலர், ஆகிய முத்திறத்தார்மாட்டும் ஒரு தன்மையாக நடந்து கொள்ளுதலே நடு நிலைமையாகும். இத்தன்மையை உலக இன்பத்தில் ஆவலுடைய எவரும் பெறுதலரிதாகும். அம்மூவர் பாலும் ஒரு தன்மையாக நியாய முறைப்படி நடந்துகொள்ளும் இயல்பைப் பெற்று விட்டால் அதுவே மிகவும் சிறந்த நன்மையாகும். இதனை "பகைவர், நொதுமலர், நட்பினர் என்னும் மூவர் பாலும் ஒரு தன்மையாக நடக்கப்பெறின் அத்தகைய நடு நிலைமை என்று சொல்லுகின்ற ஒரு அறமே நன்மையாகும்" என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.

இவ்வுலகில் அல்லும் பகலும் இடைவிடாது துன்புற்றுப்பொருளீட்டுவோர் அனைவரும் தமது பிள்ளைகளுக்கென்றும் பேரன்மார்களுக்கென்றுமே பொருள் சேர்ப்பதைக் காண்கின்றோம். தமது நலத்தையுங் கருதாமல் உடுத்தாமலும் உண்ணாமலும் பொருள் சேர்ப்பவரையுங்காண்கின்றோம். எதைக்கருதிப் பொருள் சேர்த்தாலும் நல்வழியில் சேர்க்கவேண்டும். பிறர்க்குத் துன்பஞ் செய்யாமல் நடு நிலைமையிற் சேர்க்கும் பொருளினாலேயே தாம் எண்ணியவதை எய்தக் கூடும். நடு நிலை தவறித் தீய வழியால் வரும் பொருள் தம் காலத்திலேயே தம்மை விட்டு நீங்கி விடும். இப்பொழுதுஞ் சில குடும்பங்களின் செல்வம் தலை முறை தலைமுறையாய் அழியாமலிருப்பதைக் காண்கின்றோம். நடு நிலை தவறாமலிருந்து பொருளீட்டியவனது செல்வமே தலை முறையாக அழியாமலிருப்பதாகும். நடு நிலை தவறிப்பொருளீட்டியவனது செல்வமே சேர்ந்தவனுக்கும் அவன் பின்னோருக்கும் பயன் படாமல் அழிந்து போகக்கூடியதாகும், இதனை "நடுவுநிலைமையுடையவர்கள் செல்வம் எப்பொழுதும் அழியாமல் அவர்கள் பிள்ளை பேரன் முதலிய வழித்தோன்றல்களுக்குத் துணையாக நிலைத்து நிற்கும்" என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

பொறுப்புள்ள நிலையை யடைந்துள்ள யாரும் இந்நடுவு நிலைமையைக் கைக்கொண்டொழுக வேண்டும். நடு நிலை தவறி ஒரு சார்பாக நடப்பார்களானால் அதனால் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் உண்டாகும் இடுக்கண் எண்ணைத் தொலையாததாகும். காட்டாக ஒரு அறவுரைத்தலைவரை (நியாயாதிபதி) எடுத்துகொள்வோம். அறவுரைத்தலைவர் ஒருவர் நடு நிலைதவறிப் பொருளாசை மேலிட்டு வழக்காளிகளிடம் பொருள் வாங்குந் தொழிலை மேல் கொள்வாராயின் அதனால் உண்டாகும் தீமையை யாரே அளவிட்டுக் கூறவல்லார். கொலை முதலிய கொடுங் குற்றஞ் செய்தவர்கள் அறத்தலைவருக்குப் பொருள்கொடுப்பதால் குற்றமற்றவராகவும் ஒரு குற்றமும் நினைத்தும் செய்து மறியாத ஏழை மக்கள் பொருளில்லாத காரணத்தால் குற்றவாளிகளாகவும் ஆகக்கூடுமன்றோ. அறத்தலைவர் வழக்காளிகளிடம் பொருள் வாங்கிய செய்தியை அவருக்கு மேலுள்ள தலைவர் அறிந்தால் அறத்தலைவரின் பாடு பெரும்பாடாக முடியுமன்றோ? இதனை உலகத்தாரறிந்தால் அவ்வறத்தலைவரைக்கண்டபோதும் காணாதபோதும் இழித்துப்பேசி நகையாடுவார்களென்றோ? இத்தகைய அறத்தலைவர்களை நினைக்கும்போது நமது நெஞ்சம் நடுங்குகின்றதன்றோ? இந்நாளிலும் நடு நிலை தவறி நடக்கும் அறத்தலைவர்கள் பலரைப் பற்றியும் அவர்கள் ஆராய்ந்து ஒரு சார்பாக முடிவு கூறிய வழக்குகளைப்பற்றியும் கேள்வியுற்றிருக்கலாம். இத்தகைய பழிகாரர்கள் எவ்வளவு படித்துப்பட்டமும் பதவியும் பெற்றிருப்பினும் அவர்களை அறிவற்ற கயவர்களென்று தான் கூறவேண்டும். எத்துணைப்பெரு நன்மை விளைவதாயினும் நடுவு நிலை தவறுவதனால் வருஞ்செல்வத்தை அடியோடு அகற்ற வேண்டும். அதுதான் நடு நிலைமையும் அறிவுடைமையுமாகும். இதனை "தீங்கு சிறிது மின்றி நன்மையையே தருமாயினும் நடுவு நிலை தவறுவதனால் வருஞ் செல்வத்தை அப்பொழுதே கொள்ளாமல் தள்ளவேண்டும்" என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

பிறப்பினால் எவருக்கும் நல்ல குணமோ அல்லது கெட்ட குணமோ வருவதில்லை. நல்ல குணமும் கெட்ட குணமும் அவரவர்களின் நிலைமையினாலும் செய்கையினாலும் பழக்கத்தினாலும் மற்றவர்களின் கூட்டுறவினாலுமே யுண்டாகும் ஆகவே கெட்ட குணமுடையவர்கள் தங்கள் பிள்ளைகளையும் தீய வழியிலேயே பழக்குவதால் அவர்கள் கெட்டவர்களாகக் காணப்படுவார்கள். நல்ல குணமுடையவர்கள் தங்கள் பிள்ளைகளையும் நல்வழியியேலே நடக்கச்செய்வதால் அவர்கள் நல்லவர்களாகக் காணப்படுவார்கள். "தந்தை எந்த வழியோ மைந்தன் அந்த வழி. தாயெவ்வழியோ சேயவ்வழி" என்று கூறும் உலக வழக்க மூதுரையும் நமது கொள்கையை வலியுறுத்தும் இதனை "இவர் நடுவு நிலைமையுடையவர் இவர் நடுவு நிலைமையில்லாதவர் என்பதை அவரவர்களின் வழித்தோன்றல்களாலறிந்து கொள்ளலாம்" என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

இரவும் பகலும் மாறி மாறிவருவதுபோல் உலக வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் கலந்திருக்கின்றன. வறுமையும் செல்வமும் விரவியிருக்கின்றன. வறுமையின் முடிவு செல்வம். செல்வத்தின் முடிவு வறுமை. இன்பத்தின் முடிவு துன்பம்; துன்பத்தின் முடிவு இன்பம். ஆகவே உலகவாழ்க்கையில் உள்ள யாவருக்கும் வறுமை வருவதும் செல்வம் இயல்பு. சிலர் தமக்குச் செல்வம் வந்த காலத்தில் ஊமையராகவும் செவிடராகவும் நொண்டிகளாகவும் முடவர்களாகவும் மாறுபட்டு கண் தெரியாது இறுமாந்து யாவருக்குந் துன்பஞ்செய்வதைக் காண்கின்றோம். பெரும் பொருள் படைத்த சிலர் தங்கள் பொருளையிழந்து விட்டால் வயிற்றின் கொடுமையால் தீய செய்கைகளைச் செய்வதையுங் காண்கின்றோம். தமக்கு இன்பம் வரினும் துன்பம் வரினும் வறுமை வரினும் செல்வம்வரினும் உறுதியுடன் நடுவுநிலைமையினின்றும் மாறுபடாமலிருக்குந் தன்மை மிகவும் பெருந்தன்மையாகும். அத்தகைய பெருந்தன்மையுடையவர்கள் கோடியில் ஒருவராகத்தான் காணப்படுவார்கள். அவர்கள் தான்நடுவுநிலையாளராவர். எக்காலத்திலும் நடுவு நிலைமை தவறாமலிருப்பதுதான் அறிவுடையவர்களுக்கு அழகாகும். இதனை, "வறுமையும் செல்வமும் இல்லாதனவல்ல; எப்பொழுதும் இயற்கையாக வரக்கூடியன. மனத்திற்குற்றமில்லாத நடுவு நிலைமையே அறிவுடையவர்களுக்கு அழகாகும்" என்று திருவள்ளுவர் கூறுவதனாலறியலாம்.

தீயசெய்கைகளைச் செய்தவர் அழிந்து போவதை கண்கூடாக அறிகின்றோம். அது போலவே நடுவு நிலைமை தவறி நடப்பவர்களும் கெட்டு விடுவார்கள். ஒருவர் கெட்டதற்கு முன்னறிகுறி நடுவு நிலைமை தவறுதலேயாகும். நடுநிலை தவறி நடந்த பேரரசுகளெல்லாம் அடியோடு தொலைந்து குடியரசானதை நாமனைவரும் நேரேயறிந்திருக்கின்றோமன்றோ ? இதனைத்திருவள்ளுவர், ஒரு ஆசிரியர் மாணவனுக்குப் பாடஞ் சொல்லுவதைப் போல உலகினர்க்குத் தெளிவாகக் கூறுகின்றார் அதனை "ஒருவன் தன் நெஞ்சம் நடுநிலையினின்றுந் தவறி, நன்மையல்லாத செயலைச் செய்யப் புகுமாயின் அப்பொழுதே அவன் கெட்டு விடுவான் என்பதை அறிக" என்று கூறுகிறார்.

நடுநிலை திறம்பாமல் வாழ்ந்தவர்கள் தங்கள் செல்வங்களையிழந்து வருந்த நேரிட்டாலும், அவர்களுக்கு அழிவுண்டாகாது. இல்லாரை என்னுவர் என்பது அவர்களுக்குப்பொருந்தாத மொழியாகும். நடுவு நிலை தவறிநடந்த செல்வமுடையவர்கள் வறியரான பின் எள்ளப்படுவதைப் போல நடுவு நிலைமைதவறாதவர்கள்செல்வராயிருந்த காலத்தில், அவர்கள் நடந்து கொண்ட நேர்மையையும் நடு நிலைமையையும் பாராட்டி வறியரானாலும் செல்வரைப் போலவே சிறப்புச் செய்யப்படுவார்கள். இதனை "நடுவுநிலைமை தவறாமலிருந்து நன்மை செய்தவனுடைய வறுமையை உலகம் வறுமையாகக் கொள்ளாது." என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

நடுவு நிலைமைக்கு நிறைகோலை உதாரணமாகக் கூறலாம். நிறைகோல் எவ்வாறு நடுவில் நின்று இரு பக்கத்துப் பொருளையும் ஏற்றத்தாழ்வின்றிப் பிரிக்கின்றதோ அது போலவே அறிஞர்களும், பகைவர்களுக்கும், ஒரு தன்மையாக நீதி வழங்க வேண்டும். இந்த நடு நிலைமை இக்காலத்துப் பள்ளிக்கூட ஆசிரியர்களிற் பெரும்பாலோர் தம்மிடம் இல்லைஒரேவகுப்பிற் பயிலும் மாணவர்கள்யாவர்பாலும் ஒருதன்மையாக்நடந்து கொள்ளாமல் மதத்தினாலும், சாதியினாலும், ஒரு சார்பு பற்றி நடப்பதைக் கேள்வியுறுகின்றோம். கண்கூடாகவும் காண்கின்றோம். இத்தகைய அறிவற்ற ஆசிரியர்கள், தங்களுக்கு விருப்பமுள்ள மாணவர்கள் திறமையற்றவர்களாயினும், அவர்களுக்கு ஆராய்ச்சியில் (பரீக்ஷையில்) மிகுந்த எண்ணிக்கை (மார்க்கு)களைக் கொடுத்து மேல் வகுப்புகளுக்கு மாற்றிவிடுவதையும், தங்களுக்கு வேண்டாதவர்கள், எவ்வளவு திறமையுள்ளவர்களாயிருப்பினும், அவர்களுக்கு ஆராய்ச்சியில் குறைந்த எண்ணிக்கைகளைக் கொடுத்துமேல்வகுப்புக்குப் போகாமல் தடுப்பதையும் கேட்டுமிருக்கின்றோம், கண்டுமிருக்கின்றோம். இத்தகைய ஆசிரியர்களில்லாத பள்ளிக்கூடமே நமது தமிழ் நாட்டில் இல்லையென்று துணிந்து கூறலாம். இதுமட்டோ, பல்கலைக்கழக ஆராய்ச்சிக்காரர்களுங்கூடப் பொருளாசையால் நடு நிலை தவறி நடப்பதாகக் கேள்விப்படுகின்றோம். இது உண்மையோ பொய்யோ வென்று துணிந்துகூற முடியாது. ஆனால் மேற் கண்டவாறு பொருளாசையாலும், மத வேறுபட்டாலும், சாதிவேறுபாட்டாலும், நடுவு நிலைமைதவறி நடக்கின்ற ஆசிரியர்கள் உண்டு என்று துணிந்து கூறலாம். "தான் சமனாக நின்று, தன்பால் வைத்த பொருளை வீக்கந் தாக்கமின்றி இரு பிரிவாக்கும் துலாக்கோலைப்போல, நடுவு நிலைமையிலிருந்து, ஒரு சார்பாகத்தவறி நடக்காமலிருப்பதே அறிவுடையவர்களுக்கு அழகாகும்" என்று திருவள்ளுவர் கூறும் அறவுரையை அறிந்திருப்பார்களாயின் அவ்வாறு நடப்பார்களா என்று கேட்கின்றோம். இத்தகைய அறத்தை எல்லோரும் அறியும்படி செய்ய வேண்டியது தமிழர் கடமையாகும்.

இவர் நடுவு நிலைமை தவறாதமனத்தவர், இவர் நடுவு நிலைமை தவறிய மனத்தவர் என்பதை அவ

(இதன் தொடர்ச்சி 19-ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீ வரதராஜுலுவின் குளறல்.

"ஜஸ்டிஸ்" பத்திரிகை எழுதுவது.

நம் நாட்டு மக்களிற் பெரும்பாலோருக்குத் தம்மை யறியாமலே மண்ணீரல் பெருத்திருக்கிறது என்று பல வைத்திய நிபுணர்கள் கூறக்கேட்டிருக்கிறோம். மாயவரத்தில் கூட்டப்பட்ட கூட்டத்தில் சில சுயராஜ்யக்கட்சி மேதாவிகள் பேசிய பேச்சுகளைப் பார்த்ததிலிருந்து மண்ணீரல் பெருத்தவர்கள் போக மண்டை வீக்கங்கொண்ட கனவான்களின் பெயர்களை யெல்லாம் கண்டு பிடித்தெழுதிக்கொடுக்கும்படி அவ்வைத்திய நிபுணர்களைக் கேட்டுக்கோள்ளவேண்டும் என்ற பேரவா நமக்கு உண்டாகிறது. அவ்வாறு அவர்கள் உதவி செய்தார்களானால் நமக்கு அத்தகைய தலைக்கனமுடையோர்களைக் கண்டு பிடித்து வெளியிலிழுத்து விடவேண்டிய தொந்தரை மீதியாகும். நமது வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப் படுமோ படாதோ அறியோம். ஆயினும் அவ்வாறு ஒரு அட்டவணை தயாரிக்கப்படுமானால் அதில் முதற் பேர்வழியாக 'தமிழ் நாடு' வைத்திய வரதராஜுலுவே தோன்றி மிளிர்வார் என்பதில் நமக்கு சந்தேகமே கிடையாது. என் மயிலை சீமான் ஒருவர் இருக்கிறாரே என்று கேட்கலாம். அது உண்மையே யாயினும், அவருடன் பிறந்ததாகிய வகுப்புக்கர்வம் ஒன்றில் வேண்டுமானால் அவர் வைத்திய நாயுடுகாரைவிட மேலோங்கி நிற்கலாமே யொழிய மற்ற எத்துறையிலும் நாயுடுகார் சீமானை விழுங்கி ஏப்பம் விட்டுவிடக்கூடிய அபார சக்தியுடையவர் என்பதை மறக்கக்கூடாது. கர்வம் தலைக்கேறி மண்டைக்கனம் கொண்டவர்களில் ஐயோ! நாயுடுகாரும் ஒருவராவார் என்று நாம் மேலே கூறியதற்கு அவரது மாயவரம் சொற்பொழிவே போதிய சான்றாகும். சரக்கு அதிகமில்லாவிட்டாலும் எவ்விதத்திலாவது பத்திரிகைகளில் 'தலைவர்' என்று பெயர் சூட்டப்பட்டு அற்பமாகிய பெருமையை யடைய வேண்டுமென்று கருதும் அறைகுறைப் பேர்வழிகளைப் போலவே திரு நாயுடுகாரும் தான் ஒரு பழுத்த தேசியவாதியென்றும், தாம் உறங்குவது முதல் உண்டு கழிதல் ஈறாக நினைப்பதெல்லாம் தேசத்தைப் பற்றியும் தேச மக்களின் நன்மையைப் பற்றியும் தான் என்றும் தானே வாய் கொள்ளாமற் பெருமையாக கூறிக்கொண்டிருக்கிறார். இது மட்டுமா? தானே சர்வக்ஞரென்றும், நடைபெறுகிற விஷயங்களில் தானறியாத தொன்றில்லை யென்றும் பகடி யடிக்கிறார். இப்பகடி வேஷத்தை விடாமலே தொடர்ந்து நடித்து மிகுந்த பிரயாசையுடன் தான் உண்மையிலேயே ஒரு பெரிய மேதாவியாகி விட்டதாகக் கனவு கண்டு வருகிறாராதலால் நாட்டிலுள்ள கட்சிவாதங்களைப்பற்றித் தாரதரம் கூறத் துவங்கி யிருக்கிறார். நெருப்புக்கோழிகள் மணலுக்குள் தலையை நுழைத்துக்கொண்டு உலகம் அஸ்தமித்து விட்டதாக நினைத்துக்கொள்வது வழக்கம் என்று கூறுவதுண்டு. அவ்வாறு நினைத்துக்கொள்ளக்கூடாது என்று அவைகளை யாராவது கட்டாயப்படுத்த முடியுமா? இல்லை. அவ்வாறு நினைப்பது அறியாமை யென்று அறிந்து கொள்ளுஞ் சக்தி அவைகளுக்குண்டா? அதைப்போல் திரு நாயுடு தனக்குக் குருட்டுக்கண் இருப்பதையறியாமல் ராஜவிழி விழிக்கச் செய்யும் முயற்சிகளைக் கண்டு பொது மக்கள் எள்ளிநகைபாடுகிறார்கள் என்பதை யறியும் சக்தியற்றிருந்தால் அது அவரது குற்றமாகுமோ? ஆகாது.

இருந்தாலும் திரு நாயுடு அவர்களின் உண்மையான மாற்றை யறிந்து கொள்ளாத இரண்டொருவர் இன்னும் நாட்டில் இருந்தாலும் இருக்கலாமாகையால் அவர்களுக்கும் உண்மை தெரியவேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன், திரு நாயுடு அவர்கள் மாயவரத்தில் உளறிய திருவுளறல்களில் சிலவற்றை ஈண்டு தருகின்றோம். "தற்கால அரசியல் நிலைமை" என்பதே திரு நாயுடு அவர்கள் பேச எடுத்துக் கொண்ட பொருளாகும். அதைப்பற்றி அவர் பேசியிருப்பதைப் படித்தாலே அப்பொருளைப்பற்றி அவருக்கு அணுவளவுந்தெரியாது என்பது நன்கு புலனாகும். மேலும் தானும் "தலைவர்" என்று அவர் கனவு கொண்டிருக்கும் அக்கனவு நிலைக்குக்கூட அவர் தகுதியற்றவர் என்பதும் விளங்கும். ஸைமன் கமிஷன் எதிர்ப்பைச் சரிவர நடத்த முடியாதபடிக் குறுக்கிட்டு நிற்கும் தடைகளைப் பற்றிப் பேச ஆரம்பித்து

"நாம் மேலெடுத்துப் போட்டுக்கொண்டிருக்கும் (பஹிஷ்கார) வேலையோ மிகவும் கடினமானது; அதற்கிருக்கும் தடைகளோ பல; அவற்றில் முதற்பெருந்தடையாக நிற்பது நமது மாகாணத்திலும் ஒரு மந்திரிசபை நிருவப்பட்டு நிலைத்து வரும் அவமானமே. அரசாங்க உத்தியோகஸ்தராயிருந்தாலும் சுயமரியாதையுடன் மந்திரி வேலையை வகித்துவர முடியாதென்று கண்டு கொண்டவுடனே துணிவுடன் தம் வேலையை ராஜிநாமா செய்த திரு. எ. அரங்கநாத முதலியாரையும், ஆரோக்கியசாமி முதலையும் நான் போற்றுகிறேன். அவர்கள் காலி செய்த இடங்களை ஏற்றுக் கொண்ட புது மந்திரிகளது இழிதகைமை அன்னியஆட்சியால் மக்கள் பால் உண்டாகும்அடிமைபான்மையை நன்றாக விளக்குகிறது. இரண்டாவதாகவுள்ள தடையென்னவென்றால், ஜஸ்டிஸ் கட்சியார் தம் வகுப்புத் தாழ்வைப் புலப்படுத்திக் கொண்டதாகும். அக்கட்சித் தலைவர் மந்திரி சபையை யாதரிக்க ஒப்புக்கொண்டு அதற்குக் கைம்மாறாகத் தனது கட்சியைச் சேர்ந்த ஒருவருக்குச் சட்ட அங்கத்தினர் பதவி யளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அவ்வேலைக்கு வரப்போகிறவருடைய தராதரந் தெரிந்து வேலை கொடுக்கப்பட வேண்டுமென்ற கண்ணியமான முறை அந்தத் தலைவரதுபுத்திக்குப் புலப்படவில்லை போலும்"

என்று திரு நாயுடு திருவாய்மொழிந்திருக்கிறார். மந்திரி சபை கலைந்து நிற்பதற்கும் பொது மக்கள் கமிஷனை பஹிஷ்கரிப்பதற்கும் என்ன சம்பந்த மிருக்க முடியுமென்பது ஒருபுறமிருக்க-இதர மாகாணங்களிலும் மந்திரிகள் இல்லாதுபோய் விடவில்லை-திரு நாயுடு கூறுவன உண்மையை யொட்டியிருக்கிறதா என்று தான் கேட்கிறோம். திரு நாயுடு போற்றிப் புகழ்கிற இரண்டு மாஜி மந்திரிகளின் விஷயத்தை முதலில் கவனிப்போம். "சுயமரியாதையுடன் மந்திரி வேலையை வகித்துவர முடியாதென்று கண்டு கொண்டவுடனே" அவர்கள் ராஜிநாமா செய்து விட்டார்களா? சுயமரியாதையுணர்ச்சியினால் தான் அவர்கள் ராஜிநாமா செய்தார்கள் என்று திரு நாயுடு வேண்டுமானால் பகடியடிக்கலாம். ஆனால் நடந்த உண்மையென்ன? அந்த இரண்டு மாஜி மந்திரிகளுக்கும் எந்த நாளிலாவது சட்டசபையிலுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களின் ஆதரவிருந்ததுண்டா? சட்டசபையில் புரட்டிப் புரட்டித் தோற்கடிக்கப்பட்ட பிறகும், முதல் வரவு செலவுத் திட்ட மசோதா நிறைவேறிய காலத்தில் பல திட்டங்களைக் குறைத்து அவர்களைக் கண்டித்த பிறகும், அட்டையைப்போல் மந்திரி ஸ்தானத்தில் ஒட்டிக்கொண்டிருந்தது தான் அவர்களது சுயமரியாதைத் தத்துவமோ? நம்பிக்கையில்லாத தீர்மானம் கொண்டு வரப்பட்டு அதற்கு ஆதரவாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் 5௰ பேர் ஓட் கொடுத்தும் எதிரிடையாக முப்பதே பேர் ஓட் கொடுத்துமிருக்க அதன் பின்னும் பூலோகமோ கைலாசமோ என்று ஒன்றுந் தெரியாதவர்கள் போல் மந்திரி ஸ்தானங்களில் அசையாமல் உட்கார்ந்து கொண்டிருந்தது தான் திரு நாயுடு போற்றிப் புகழும் சுயமரியாதைத்தத்துவமோ? இந்தச் சுயமரியாதை வீரர்கள் தான் திரு நாயுடுவுக்குப் போற்றிப் புகழ அகப்பட்டார்களோ? மாஜி மந்திரிகளின் தாசர்கள் அவர்களுக்குத் 'தியாகி' ப்பட்டங்கள் வாங்கியளிக்க எடுத்துக்கொள்ளும் வீண் பிரயாசையில் திரு நாயுடுகாரும் கலந்து கொண்டு யாரை இனி ஏமாற்ற முடியாதென்பதை அறிந்துகொள்ளட்டும்.

இனி, ஜஸ்டிஸ் கட்சித் தலைவரைப் பற்றித் திரு நாயுடுகார் உளறியிருப்பது அவரது உண்மையான சரக்கையே வெளிப்படுத்துவதாகும். வாய்க்கு வந்தபடி வகை தொகை தெரியாமல் கேட்டோர் அருவருக்குமாறு உளறிவழிந்திருக்கிறார். சட்ட அங்கத்தினர் பதவியைப் பெறுவதற்காக மந்திரி சபையை ஆதரிக்கிறோமென்று திரு. நாயுடுகார் கூறியது போல் உளறுவது வீண் பொய்மை யாகும் என்று எத்தனையோ முறை விளக்கியிருக்கிறோம். கோயமுத்தூர் தீர்மானம் ஜஸ்டிஸ் கட்சி அங்கத்தினர்களை மந்திரி பதவியேற்கக் கூடாதென்று மட்டும் கட்டுப்படுத்தியதாகும் என்பதை நாயுடு நன்கறிந்திருக்க வேண்டும். அப்படியின்றி முட்டுக்கட்டை போடவேண்டு மென்று முட்டுக்கட்டை போட்டுக் குதிரை முட்டை வாங்குவதோ, அல்லது இரட்டையாட்சி யென்பதனாலேயே அதை உடைத்து விடவேண்டுமென்று வாய் வேதாந்தம் பேசுவதோ அத்தீர்மானத்தின் கருத்தாகாது. திரு. வெங்கட்டராமசாஸ்திரியாருக்குச் சட்ட அங்கத்தினர் பதவி கிடைப்பதற்கு முன்பேயே, கட்சி முறையில் நாங்கள் மந்திரி உத்தியோகம் ஏற்கா விட்டாலும், எங்களுக்கு விரோதமாக வேலை செய்து எங்கள் பகைமையைக் கோர நினைக்காத எந்த மந்திரி சபையையும் நாங்கள் எதிர்க்க மாட்டோ மென்றும் தெளிவாகக் கூறியிருக்கிறோம். அப்படியிருக்க எம் கட்சித் தலைவர் சட்ட அங்கத்தினர் பதவிக்காக மந்திரிசபையை யாதரிக்க ஒப்புக்கொண்டு வாக்களித்தார் என்றாவது வாக்களிக்க நினைத்தாரென்றாவது திரு. நாயுடு கூறியது அறிவீனத்திலும் வடிகட்டின அறிவீனமேயாகும். இது கிடக்க, சட்ட அங்கத்தினர் பதவி பார்ப்பனரல்லாத ஒருவருக்கே கிடைக்கவேண்டுமென்று நாம் பல ஆண்டுகளாய்க் கிளர்ச்சி செய்து வந்தது திரு. நாயுடுவுக்குத் தெரியாதா? அப்படித் தெரிந்திருந்தால் அக்கிளர்ச்சிக்குக் கைகூலி வாங்கும் இழிமனப்பான்மை தான் அடிப்படையாகும் என்று நாயுடு சொல்லுகிறாரா? திரு. நாயுடு இவ்வாறு ஜஸ்டிஸ் கட்சியாரைத் தாக்குவதற்குக் காரணம் யாதாயிருக்க வேண்டும் என்பதை நாம் ஒருவாறு ஊகிக்கலாம். அவருடைய பேச்சிலேயே அடிமைப் பான்மை அன்னிய ஆட்சியின் ஆதிக்கத்தால் விளையுங்கேடு என்று அவர் கூறியிருக்கிறார். அது உண்மையானால் பார்ப்பன ஆட்சியின் ஆதிக்கத்தின் கீழ் பன்னூற்றாண்டுகளாக அகப்பட்டுஉழன்றுவரும் திரு. நாயுடுவைப்போன்ற வாமனர்களின் அடிமைப்பான்மை எத்தகையதா யிருக்கவேண்டும் என்பதை வாசகர்களே ஊகித்துக்கொள்ளலாம். இந்த அடிமைப்பான்மையின் தூண்டுதலால் தான் திரு. நாயுடு இவ்வாறு ஜஸ்டிஸ் கட்சியைக் குறித்து அறிவிழந்து கண் மண் தெரியாமல் உளறியிட்டிருக்கிறார். ஆயினும் அவருக்கு ஒரு எச்சரிக்கை செய்கிறோம். அது என்னவென்றால், மைலாப்பூர் சீமான்கள் போடும் கூச்சலுக்குத் திரு. நாயுடுகாரு இப்பொழுது ஒத்துத் தாளம் போடுவதனால் தற்காலிகமாக அவரை எவ்வளவுக்கு மேற்படி கூட்டத்தார் தூக்கிவைத்துப்

(இதன் தொடர்ச்சி 19-ம் பக்கம் பார்க்க)

வரதராஜுலு வண்டவாளம்.

"திராவிடன்" எழுதுவது:

வைத்தியர் வரதராஜுலுவின் கூலிப்பிரசாரத்தையும், அவர் வண்டவாளத்தையும் "ஜஸ்டிஸ்" பத்திரிக்கை வெட்டவெளிச்சமாக்கிவிட்டது. ஆக்கிவிடவே, செய்வதினெனத் தெரியாமல் வரதராஜுலு வழக்கம்போல் பழைய தேசிய பாட்டைப்பாடுகின்றார். அம்மட்டோ! தாம் சிறைசென்ற தன்மையையும், குருகுலப் போராட்டம் நடத்திய வீரத்தையும், ஜஸ்டிஸ் கட்சியை 12 ஆண்டுகளாய் எதிர்த்து வந்த பெருமையையும் தாமே புகழ்ந்து பேசிக்கொள்கிறார். இவைகளைப் பற்றிப்புகழ பாவம் வேறு எவரேனும் மின்சார வைத்தியருக்கு அகப்படவில்லை போலும்!

வைத்தியர் ஜஸ்டிஸ் கட்சியை "12 ஆண்டுகளாய் எதிர்த்துப் போராடி வந்திருக்கின்றேன்" என்று பெருமையை பாராட்டிக்கொள்வது ஒரு தாசி "நான் இன்று நேற்று விபசாரம் செய்து வருகின்றேன். 12 வருடகாலமாய் விபசாரம் செய்துவருகின்றேன்" என்று சொல்லும் முட்டாள் தனத்தை ஒத்திருக்கின்றது. வைத்தியர் வரதராஜுலு 12 ஆண்டுகளாய் பார்ப்பனக் கூலியாய் இருந்து கொண்டு ஜஸ்டிஸ் கட்சியைப்பார்த்து குரைத்து வருவதை யார்தான் அறியமாட்டார்கள்! இந்த வெட்கத்தைவெளியில் இவர் சொல்லிக்கொள்ள வேண்டுமா? சிறிதுகாலம் வைத்தியர் அடையாறு அம்மையாரின் திருவடிகளின்கீழ் "ஹோம் ரூல்" பிரசாரகராய் இருந்ததையும், பிறகு வளர்த்த கடா மார்பில் பாய்வதுபோல் வளர்த்த அம்மையாரை கீழே கவிழ்த்துவிட்டு, மயிலை ஐயங்கார் பிரசாரகராய் மாறியதையும் நாம் மறக்கவில்லை. விபீஷணன் தன் எதிரிகளோடு கூடிக்கொண்டு குலத்ரோகியாய்-உடன் பிறந்த அண்ணன் துரோகியாய்-நடந்து கொண்டமையால், "ஆழ்வார்" பட்டம் பெற்று இலங்கைக்கு அரசனானான் அத்தன்மைத்தேதான் திரு. தண்டபாணிப் பிள்ளையவர்கள்,

> "இதற்குக் காரணம் தாங்கள் (வரதராஜுலு) ஆதியில் மிக ஏழ்மையாய் இருந்து ரூ. 3-க்கு மளிகை கடையில் சம்பளத்திற்கிருந்து பின் படிப்படியாக மேலே வந்து, அசகாயமாய் யாரும் புரட்டாத தேசிய சொந்தப்புரட்டின் பேரில் மோட்டார் வாகன மேறும் வரையில் வந்துவிட்டதினால் ஊழியத்திற்குறிய நன்றி செலுத்துவதை தாங்கள் மறந்து விட்டீர்கள். நான் ஆதியிலும், ஏழையில்லை. இப்பொழுதும் பணக்காரன் இல்லை. கௌரவமான குலத்திலும், குடும்பத்திலும், சமயத்திலும், சைவத்திலும் நல்ல சிதம்பர க்ஷேத்திரத்திலும் பிறந்து மிதமான நிலபலன்களும் வீடுவாசல்களும், பொன் பொருள்களும பெற்றிருக்கின்றேன். ஊழியத்திற்குத்தான் நான் முதன்மையாக நன்றி செலுத்துகின்றேன். தாங்கள் ஊழியர் என்பதற்காகவே ஆதியில் வரதராஜுலு காப்புநிதிக்கு அரும்பாடுபட்டு என்னாலானதை வசூல்செய்து தங்கள் மனைவியாருக்கு அனுப்பி யிருக்கின்றேன். ஸ்ரீ பவானிசிங்கும் கும்பகோணத்தில் ரூ. 800-க்கு மேலாக வசூல்செய்து தங்களுக்குக் கொடுத்திருக்கின்றனர் ஸ்ரீ டி. எஸ். சொக்கலிங்கம் பிள்ளையின் தமயனாரும் தாங்கள் சிறையிலிருந்து ஆதியில் வெளிவரும் வரையில் தங்கள் மனைவிக்கு மாதம் ரூ. 10 வீதம் அனுப்பி உதவி செய்துக்கொண்டு வந்தனர். இவ்வாறு வண்டி ஓடமேறுவதும், ஓடம் வண்டி யேறுவதுமான உலகில் தாங்கள் பெருமையாய்ச்சொல்லிக்கொள்ளும் விசேஷம் எனக்கு விளங்க வில்லை,"

என்று கூறியுள்ளபடி வெறும் உடுமலைப்பேட்டை திரு. வரதராஜுலு 12 வருஷம் ஜஸ்டிஸ் கட்சியைக் குரைத்த குல துரோகத்தால் "டாக்டர்" என்ற பொய்ப் பட்டம் பெற்றார். "மின்சாரசம்" என்ற ஒரு மருந்தால் தேசிய வியாபாரியானார். இதை வைத்தியர் வரதராஜுலு அறிவுடன் நினைத்து பார்ப்பாராயின் "நாங்கள் ஜஸ்டிஸ் கட்சியுடன் 12 வருட காலமாய் எதிர்த்துப் போராடி யிருக்கின்றேன்" என்று மானத்துடன் சொல்லிக் கொள்ளவும் முடியுமோ? ஆனால் பார்ப்பனக் கூலிகளுக்கு மானமேது? சுய மரியாதை உணர்ச்சி ஏது?

வைத்தியர் தம் குருகுலப் போராட்டத்தைப்பற்றி வானமளாவப் பேசுகின்றார். இதைப்பற்றி பேசுதல் "சலுப்பன் வீட்டுக் கோழி தானே விலங்கிட்டுக் கொண்டது போல்" வைத்திய வரதராஜுலு தன் வண்டவாளத்தை தானே வெளிப் படுத்திக்கொண்ட கதையாக முடியும். குருகுலப்போரில் வைத்தியர் என்ன செய்தார்? முதலில் மணலைக் கயிறாகத்திரித்து விடுவது போல் துவக்கினார். இறுதியில் பார்ப்பனர்கள் திருவடிகளில் வீழ்ந்து சரணமடைந்தார். இதைத்தான் நாம் கண்டோம். இது உண்மையா அல்லவா என்று கேட்கிறோம். இவர் போராட்டத்தால் 'உள்ளதும் கெட்டதடா நொள்ளைக்கண்ணா' என்பதுபோல் குருகுலத்தில் பார்ப்பன வருணாச்சிரம ஆட்டம் வலுப்பட்டதேயன்றி ஒரு சிறிதேனும குறைந்ததா? மற்றும் வைத்தியர் குருகுலச் சத்தியாக்கிரகம் என்னவாயிற்று? அதற்காக வசூலித்த பணம என்னவாயிற்று? குருகுலபோராட்டத்தில் பார்ப்பனரல்லாதாரைக் காட்டிக் கொடுத்து முதுகு காட்டி ஓடிய வைத்தியர் கீழே விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற மல்லன்போல் ஏன் வெட்கமின்றி சுயமரியாதை யிழந்து இன்னும குருகுலத்தைப்பற்றிப் பேசவேண்டும்?

வைத்தியர் தாம் சிறைக்குச் சென்றதாயும், அவ்வாறு சென்றதைப்பற்றி புகழ்ந்தும் பேசிக் கொள்கின்றார். வைத்தியர் ஒருவர்தானா சிறைக்குச் சென்றார்? ஆயிரக்கணக் கானவர்கள் சென்றிருக்கின்றார்கள். அவர்களெல்லாம் அற்பத் தனமாய் தம்மைத்தாமே புகழ்ந்து பேசிக் கொள்ளவில்லை. சிறை சென்றதற்காகவாவது வைத்தியருக்கு மதிப்பு கொடுக்கலாமோவெனின் அதுவும் இல்லை. ஏனெனின் தென்னாட்டில் சிறைசென்றவர்களெல்லாம், திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர், திரு. சிதம்பரம்பிள்ளை, திரு. கார்குடி சின்னையாபிள்ளை, திரு. எஸ். ராமநாதன் முதலியோர், பார்ப்பனர் சூழ்ச்சிகளைக்கண்டித்து நம்முடன் ஒத்துழைக்க, வைத்தியர் மட்டும் தேசியம் தேசியம் என்று மயிலை ஐயங்கார்களிடம் தொங்கிக்கொண்டிருக்கின்றார். எனவே இத்தகைய வைத்தியர் தேசியம், தேசியம் என்றால் யார்தான் நகைக்க மாட்டார்கள்? இவர் தேசியம் பார்ப்பனக்கூலிப் பிரசாரம் என்று யார்தான் சொல்லமாட்டார்கள்?

இனி வைத்தியர், இரட்டை ஆட்சி போகவில்லையே என்று கண்ணீர் விடுகின்றார். திரு. அரங்கநாத முதலியாரையும், திரு. ஆரோக்கியசாமி முதலியாரையும் புகழ்கின்றார். இரட்டை ஆட்சி போகவில்லை என்பதைப் பற்றி வைத்தியர் விடும் கண்ணீர் நீலிக்கண்ணீர் என்பதை ஒரு மூடன்கூட அறிவான். இரட்டை ஆட்சி நீடூழிவாழும் பொருட்டு திரு. சத்தியமூர்த்தியை மந்திரி உத்தியோகம் ஏற்றுக் கொள்ளும்படி தம் அப்பன் வீட்டு சொத்து போய்விடுவது போல அவசர மவசரமாய்த் தந்தி கொடுத்த வைத்தியர் இன்று இரட்டை ஆட்சி ஒழியவில்லையென்று கண்ணீர் விட்டால் யார் இவரை நம்பப்போகிறார்கள்? மணிக்கொருமுறை, வினாடிக்கொருமுறை மாறும் வைத்தியர் நீலிக்கண்ணீர் விடமாட்டாரா? மற்றும் வைத்தியர் மந்திரி வேலையில் இல்லாத மேற் கூறிய இரு முதலியார்களை துவக்கத்தில் இகழ்ந்தார். இப்பொழுது புகழ்கின்றார். இவ்வாறு குட்டிக்கரணம அடித்ததற்கு காரணம் என்ன? இரு முதலியார்கள் தாமாக வேலையை விட்டார்களா? அதுவும் இல்லை. நாம் முன் எழுதியபடி கவர்னரால் கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ளப்பட்ட பிற்பாடன்றோ இவர்கள் மந்திரி வேலையை விட்டார்கள்? இவர்கள்தான் மின்சார வைத்யருக்குத் தேசிய மந்திரிகள் போலும். பளா! பளா! தேசியம் என்பதென்ன? அதன் பொருள் என்ன? என்பது தேசியம்! தேசியம்! என்று கூக்குரலிடும் வைத்தியருக்குத் தெரியுமா? தேசியம் என்பது மின்சாரசம்? பார்ப்பனர்கட்கு தாசானுதாசம் பாடுவது என்று வைத்தியர் நினைத்திருக்கின்றார் போலும்! நல்ல அறிவு!

இனிச் சட்ட மெம்பர் உத்தியோகத்திலும் வைத்தியர் வாய் வைக்கின்றார். வைத்தியருக்கு சட்ட மெம்பர் உத்தியோகத்தைப்பற்றி என்ன தெரியும்? ஐயங்கார்கள் சொல்லிக் கொடுத்ததை அப்படியே வாந்தி எடுக்கின்றார் பாவம். இவர் அறியாமைக்காக நாம இரங்குகின்றோம். திவான் பகதூர் கிருஷ்ண நாயர் சட்ட மெம்பர் பதவிக்கு எவ்வகையில் யோக்கியதை குறைந்தவரென்று கேட்கிறோம். படிப்பிலா, அனுபவத்திலா, அறிவிலா, அல்லது வேறு எவ்வகையில்? ஒரு பார்ப்பனன்கூட திவான் பகதூர் கிருஷ்ணா நாயர் உத்தியோகம் பெற்றதைப் பற்றி குறைகூற முற்படவில்லை. அவ்வாறாக

இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க.

வைக்கம் வீரருக்கு

எமது வேண்டுகோள்

சாமி சிதம்பரனார் எழுதியது

பெருமை நிறைந்த தலைவர்களே! வணக்கம் பல. இக்கடிதத்தில் எழுதும் செய்திகளை நன்றாக ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருமாறு வேண்டுகின்றேன். நீங்கள் அல்லும் பகலும் இடைவிடாமல் உழைத்துவரும் சுயமரியாதை இயக்கத்தைத் தமிழ் நாடு முழுவதும் ஆவலோடு வரவேற்பதுடன், தங்களுக்கும் அளவுகடந்த நன்றி பாராட்டுகின்றதென்பதை எடுத்துக் காட்டுவது மிகையாகாதெனக் கருதுகின்றேன்.

நமது நாட்டு மக்கள் இன்னும், தங்கள் உரிமையெண்ணத்தினால் எதையும் ஆராந்து முடிவுக்குவர ஆற்றலற்றவராய், யார் வந்து எதைக் கூறினாலும் அதன்படி கேட்கும் நிலையிலிருக்கின்றனரென்னுஞ் செய்தி உங்களுக்குத் தெரியாததன்று. உதாரணமாக நீங்கள் ஒரு ஊருக்குச் சென்று விரிவுரை நிகழ்த்தினால், ஆங்குள்ள மக்கள் அனைவரும், திரு நாயக்கர் கூறுவது உண்மை தான் என்று கூறிச் சுயமரியாதைக்கொள்கையில் ஈடுபடுகின்றனர். பின்னுஞ் சில நாள், கழித்து ஒரு சங்கராச்சாரியோ, அய்யங்காரோ, ஆச்சாரியாரோ, அய்யரோ, சாஸ்திரியாரோ வந்து, “நாயக்கர் செய்வது ‘நாஸ்திகமத பிரசாரம்’ நீங்கள் அதைப் பின்பற்றினால் நரகத்தையடைவீர்கள். ஆகையால் கடவுளால் சொல்லப்பட்ட வேதங்களுக்கும், புராணங்களுக்கும், ஸ்மிருதிக்கும் கட்டுப்பட்டு நடக்கவேண்டும்” என்று பிரசாரம் செய்வார்களானால் குறைந்தது முக்காற் பங்கான பாமர மக்களாவது அதில் ஈடுபடுகின்றனர். இவ்வுண்மை நீங்களறிந்ததேயாகும்.

அன்றியும் இப்பொழுது எல்லாப் பார்ப்பனர்களும், சநாதன தர்மப் பிரசாரம் என்ற பெயரால் பார்ப்பனீயப் பிரசாரம் செய்ய ஆரம்பித்திருக்கின்றனர். அப்பிரசாரம் இமயம்முதல் குமரிவரையும் நடைபெறுகின்றது. அதற்கான எல்லாவசதிகளும் பார்ப்பனர்கள் வசமிருக்கின்றன. ஆகையால் அவர்கள் பிரசாரத்தை எளிதில் பாமரமக்களிடையில் பரப்பமுடியுமென்பதை என்போன்றவர்கள் நம்புகின்றனர். நீங்களும் நம்பக்கூடுமென்றே நினைக்கின்றேன்.

இந்த நிலையில் உங்கள் சுயமரியாதைக் கொள்கையை எவ்வாறு தேசத்தில் நிலைக்கச் செய்வது என்பதைப்பற்றியே என்போன்ற சிலர் அல்லும் பகலும் ஆழ்ந்த ஆராய்ச்சியிலிருக்கின்றனர். இன்றைக்கு நீங்களும், கைவல்ய சாமிகளும் (நீடூழி வாழவேண்டும்) இல்லாவிட்டால் என்போன்றவர்கள் என்ன செய்வார்கள்? எண்ணாத எண்ணங்களையெல்லாம் எண்ணி எண்ணி நெஞ்சந்தான்புண்ணடைவோம். ஆதலால் உங்களைப்பின்பற்றி நிற்கும் தொண்டர்களுக்கு நீங்களே ஒரு வழியைக்காட்டி விடவேண்டும். இதற்கு நான் ஒரு யோசனை கூறுகின்றேன். தங்கள் மனத்திலும் இவ்வெண்ணமிருக்கக் கூடும் என்று நம்புகின்றேன்.

நமது சுயமரியாதைக் கொள்கைகளை உலகமுள்ளளவும் நிலைத்திருக்கச் செய்வதற்காக ஒரு ஸ்தாபனத்தை, தமிழ் நாட்டில், எங்கேயாவது வசதியான இடத்தில் ஏற்படுத்த வேண்டும். அந்த ஸ்தாபனத்திலிருந்தே, ‘குடி அரசு’ பத்திரிகையும், ‘திராவிடன்’ போன்ற தினசரிப் பத்திரிகையும் வெளிவரவேண்டும். நமது இயக்க சம்பந்தமான புத்தகங்களும் ஏராளமாக எழுதி வெளியிடவேண்டும். இவற்றுடன் பழைய தமிழ் நூல்களிலும், பிற்காலத்துச் சான்றோர்களாகிய, ஆழ்வார்கள், நாயன்மார்கள் தாயுமானார், இராமலிங்கசுவாமிகள் முதலியவர்களின் நூல்களில் நமது கொள்கைக்கு ஆதரவாகவிருக்கும் செய்திகளை வெளியிடவேண்டும். பழைய தமிழர் மதத்தை வெளிப்படுத்த வேண்டும். ஸ்தாபனத்திலுள்ள தொண்டர்கள் அடிக்கடி நாடு முழுவதுஞ் சுற்றி உறக்கத்திலிருக்கும் மக்களைத்தட்டி யெழுப்பவேண்டும். ஆகையால அத்தகைய ஸ்தாபனமொன்றை ஏற்படுத்த நீங்கள்தான் முன்வரவேண்டும். நீங்கள் முயன்றால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை என்ற துணிவுடையேன்.

மேற்கூறிய யோசனை, பொதுவாக நமது தமிழ் நாட்டிலுள்ள எல்லாத் தொண்டர்கள் மனதிலும் நிலவிக்கொண்டிருக்கின்றதென்று நான் நினைக்கின்றேன். தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரையிலும் எல்லாத் தொண்டர்களும் இவ்வாறுதான் எண்ணுகின்றனர். இக்கடிதத்தைத் தங்கள் அபிப்பிராயத்துடன் ‘குடி அரசில்’ வெளியிட்டு, மற்றவர்களின் அபிப்பிராயத்தையுமறிந்து ஆவன செய்ய வேண்டுகின்றேன். தங்கள் பதிலை எதிர்பார்க்கும் ஊழியன்,

சாமி சிதம்பரன்.

மதம் என்பது என்ன?

அமெரிக்காவில் “எங்கர்சால்” என்பவர் நிகழ்த்திய சொற்பொழிவு.

திரு. ரா. சௌரிராஜன் மொழிபெயர்த்தது.

முடிவற்ற கடவுள் எல்லாப் பொருள்களையும் படைத்து அவற்றை அடக்கி ஆளுகிறார் என்றும், அப்படி அவரால் சிருஷ்டிக்கப்பட்டவைகள் அவரிடத்தில் நன்றியுள்ளவைகளாகவும் அடங்கியும் இருத்தல்வேண்டுமென்றும், அக்கடவுள் சில விஷயங்களைக் கோருகிறார் என்றும், எம்மனிதன் இக்கோரிக்கைகளுக்குஇணங்கி நடக்கிறானோ அவனே பக்தியுள்ளவனென்றும் சொல்லப்படுகிறது. இவ்வித மதமே எங்கும் இருந்துவருகிறது.

அநேக நூற்றுக்கணக்கான வருடங்களாகபலவித மனிதர்கள், கடவுள் நைவேத்தியத்தைக் கேட்கிறார் என்றும், பெற்றோர்கள் பிள்ளைகளைக் கொன்று பலியிட்டால் அவருடைய மனம் குளிருமென்றும் நம்பினார்கள். பிறகு, அவர் மாடு, ஆட்டுக்குட்டி, புறா, முதலியவற்றின் உதிரங்களால் சமாதானம் அடைந்து விடுகிறார் என்றும், இவ்வித பலிகளுக்குப் பதிலாக அவர் மழை, சூரிய வெளிச்சம், தான்யம் முதலியவற்றைத் தருவதாகவும் எண்ணப்பட்டது. இவ்வித பலி ஒன்றும் கொடுபடா விட்டால் இந்தக் கடவுள் கொள்ளை நோயையும், பஞ்சத்தையும வெள்ளத்தையும் பூகம்பத்தையும் அனுப்புவதாக நம்பப் பட்டது.

அநேக வருடங்களாகக் கடவுள் மனிதனுடைய பிரார்த்தனையைக்கேட்டு பதிலளித்தா ரென்றும், அவர் பாவங்களை மன்னித்தாரென்றும், உண்மையாக நம்புகிறவர்களுடைய ஆன்மாக்களைக் காப்பாற்றினாரென்றும், நம்பப் பட்டு வந்தது. இப்போது எழும் வினாக்களாவன:—

மதமானது ஏதாவதொரு கொள்கையின்மேல் காணப்பட்டதா? கடவுளைப் போன்றதொரு பொருள் இருக்கிறதா? உன்னையும் என்னையும் படைத்த கர்த்தா அவர்தானா? குழந்தைகளைக் கொல்லுதல், ஆடு வெட்டல், மாடு வெட்டல், முதலியபலிகளெல்லாம் காணப்படாத கடவுளின் தயவை சம்பாதித்ததா?

முதலாவது, முடிவற்ற கடவுள் குழந்தைகளைப் படைத்தாரா? அவர் எதற்காக அவலட்சணமானவர்களையும் துணையற்றவர்களையும் படைத்தார்? எதற்காக அவர் குற்றவாளியையும் மூடனையும் பைத்தியங் கொண்டவனையும் உண்டாக்கினார்? தவறான படைப்புக்காக முடிவற்ற அறிவும் சக்தியையுமுடைய கடவுள் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்ல முடியுமா? தவறுதல்கள் கர்த்தாவினுடையதா?

இரண்டாவது, எல்லையற்ற பொருளான கடவுளா இந்த வையகத்திற்கு தலைவர்? அதிபதிகள், அரசர்கள், சக்ரவர்த்திகள் அரசிகள் ஆகியவர்களை அவரா சிருஷ்டித்தார்? உலகத்தில் நடக்கிறயுத்தங்களுக்கும் அதில் சிந்தப்படும் அநேக மாசற்றவர்களின் உதிரத்திற்கும் அவரா காரணம்? நூற்றுக்கணக்கான வருடங்களாயிருந்த அடிமைத் தனத்துக்கும், சவுக்கால் அடிக்கப்பட்ட மனிதர்களுக்கும், தாயாரிடமிருந்து குழந்தைகளைப்பிடுங்கி விற்றதற்கும, குடும்பங்களைப் பிரித்து அழித்ததற்கும் அவரா உத்திரவாதி? கொடூரமானவர்கள் தைரியமானவர்களை அழிக்கவும், சண்டாளர் புண்யர்களை ஒழிக்கவும் இந்தக் கடவுளா இடங் கொடுத்தார்? கொடுங்கோல் மன்னர்கள் தேசபக்தர்களுடைய இரத்தத்தைச்சிந்தும் படியாக இக்கடவுள் விட்டிருந்தாரா? விரோதிகள் தம்முடைய தாசர்களைச் சித்திரவதை செய்யும்படியும், நெருப்பிட்டுக்கொளுத்தவும் இக்கடவுள் பார்த்திருந்தாரா? ஆகையால் இப்பேர்ப்பட்ட தொரு கடவுள் எதற்குப் பிரயோஜனம்? ஒழுங்கான தொரு மனிதன் சர்வவல்லமை பெற்றிருந்தும விரோதிகள் சிநேகிதர்களைச் சித்திரவதை செய்ய இடந்தருவானா? அற்பமான தொரு பிசாசு கூட சிநேகிதனை வெறுத்தது விரோதிகளை நேசிக்காதே. எங்கும் வியாபித்திருக்கிற கடவுள் இவ்வுலகத்தை ஆள்கிறாரென்றால், புயல் காற்றுகளுக்கும், பூகம்பங்களுக்கும், கொள்ளை நோய்களுக்கும், பஞ்சங்களுக்கும், நாம் என்ன காரணம் சொல்லக் கூடும்? மனிதர்களை வருத்தும் ஆயிரக்கணக்கான வியாதிகளுக்கு நாம் என்ன காரணம் சொல்லக்கூடும்? மனிதர்களைக் கொல்லும் மிருகங்களையும் பாம்புகளையும் கடவுளா உண்டுபண்ணினார்? தாழ்ந்த ஜீவன்களைக் கொன்று தின்னும பிராணிகளைக் கடவுளா படைத்தார்? மற்ற மிருகங்களைக் கொல்லுவதற்காக மூக்கையும், வலிமையான பாதங்களையும், பற்களையும் கூறிய நகத்தையும் இரக்கம் பொருந்திய கடவுளா உண்டுபண்ணினார்? மிருகங்கள், திக்கற்றவர்களையும் எளியவர்களையும் கொல்ல வேண்டுமென்பதா கடவுளின் எண்ணம்? பிற உயிரைக் கொல்லும் ஒரு உயிரைப்பற்றி நினைத்துப்பாருங்கள்? நரபலியைப்பற்றி நினைத்துப் பாருங்கள். இரத்தம் ஆறு போல் ஓடியதை நினைத்துப் பாருங்கள்.

இக்கொள்கைகளின்படி முடிவில் மதம் என்பது என்ன? பயம் நிறைந்ததே மதம்.

“தி—ன்”

மனு அதர்ம சாஸ்திரம்.

மனு அதர்ம சாஸ்திரத்தைக் கொளுத்த வேண்டுமா கூடாதா வென்பதுபற்றி பெருத்த கிளர்ச்சி நாடெங்கும் ஏற்பட்டிருக்கின்றது. நமது நாடு மூட பழக்க வழக்கங்களுக்கும் மிருகத்தனமான கொள்கைகளுக்கும், அறிவிலாச் செய்கைகளுக்கும் சாதிக் கொடுமைகளுக்கும் இரையாயதற்குக் காரணம் மனு அதர்மசாஸ்திரத்தைப் போன்ற பாழும் நூல்களைப் பின் பற்றி நடந்து வந்ததுதான் என்பதிற் சந்தேகமில்லை. ஒரு நாட்டின் பாழிற்குக் காரணம் அந்த நாட்டிலுள்ள போலி நூல்களேயாகும் என்பதை நாம் கூறத் தேவையில்லை. நாம் எவ்வளவு நாட்கள் வரை இந்நூல்களுக்கு இடந்தருகின்றோமோ அது வரை நமது வாழ்க்கை புனிதப்படாதுஎன்பது திண்ணம். மனு அதர்ம சாஸ்திரமானது ஏதோ சில சில சுயநலமிகளால் எழுதப்பட்டதே யன்றி எந்தச் சுயமரியாதையுள்ள மனிதராலும் அது எழுதியிருக்கப்படமாட்டாது என்பது நாம் கூறாமலே வாசகர்கள் அறிந்து கொள்ளலாம். நமக்கு மானம், வெட்கமிருப்பின் அந்நூலை நாம் கண்ணாலும் பார்க்கக்கூடாது. பெண்களை அடிமைகளாக கருதுவதற்கும், விபசாரம் செய்வதற்கும், சாதி வித்தியாசத்தைக்கிளப்பி நாட்டில் பூசல்களை விளைவிப்பதற்கும் இப்பெரும் அதர்மசாஸ்திரமே காரணமாகும். சென்ற வாரம் திரு லாலாஜீ கோயமுத்தூர் சென்றிருக்கையில் தீண்டாமை முதலியவற்றைக் குறித்தும், தற்கால அரசியல் நிலைமையைக் குறித்தும் ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினர். அது போழ்து மனு அதர்ம சாஸ்திரத்தைக்குறித்தும் அவர் சில வார்த்தைகள் கூறியிருக்கின்றார். லாலா ஜீயைப்போன்ற பெரியார் இப்பாழும் நூலை ஆதரிப்பதென்றால் நாம் என்ன சொல்லுவது. நமது பெரியார் அந்நூலைத்தாம் ஆதரிப்பதோடு நில்லாமல் அதைக் கொளுத்துபவர்களைக் கண்டிக்கவும் முற்பட்டு விட்டது வேடிக்கையான விஷயமாகும்.

அவர் இச்சாஸ்திரத்தைப்பற்றிச்சொல்லுகையில், மனு பண்டைக் காலத்தில் பெண் ஒழுக்கமற்றவர்களாக இருந்தார்கள் என்று சொல்லவில்லை யென்றும், பெண்களுக்கு கல்வியும், சமத்துவ நிலையும் அளிக்கப்பட்டிருந்ததுஎன்றும் சிற்சில இடங்களில் மாறுபாடான கருத்துகளிருப்பினும் அவை அவர் அனுபவத்திலிருந்தவையானதால் அவ்விதம் எழுதியிருக்க வேண்டும் என்றும் அந்நூல்களுக்கு மாறுபாடுஇன்றதெனினும் அதைஎரித்தல் பயனில்லை, அந்த சாஸ்திரத்தை எரிப்பதைக் காட்டினும் நம்மையேநாம்எரித்துக் கொள்ளலாம் என்றும் கூறினர்.

இவ்விதமான மொழிகளும் லாலாஜியின் வாயில் இருந்து வந்ததே என்பதைக் காண எமக்குமீண்டும் மீண்டும் துக்கமேற்படுகின்றது. இந்த மனு அதர்மசாஸ்திரத்தில் கூறியுள்ள சிலவற்றை மட்டும் நாம் இங்கு எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறோம்.

"மாதர்கள் கற்பு நிலையின்மையையும், நிலையா மனமும், நம்பிக்கையின்மையும், இயற்கையாக உடையாராதலால், கணவரால் காக்கப்பட்டிருப்பினும் அவர்களை விரோதிக்கிறார்கள்." (அதி 9—சு, 11)

மாதர்களுக்கு இந்த சுபாவம் பிரமன்சிருஷ்டித்த போதே யுண்டானதென்றறிந்து ஆடவர்கள், அவர்கள் கேடுறாமல் நடப்பதற்காக மேலான முயற்சி செய்ய வேண்டியது" (அதி 9—15)

"மாதர்களுக்கு ஜாதகர்ம முதலியவை மந்திரத்தோடு கிடையாது; இவர்களுக்கு மனசுத்தியும்கிடையாது; பாவத்தைப்போக்குகிற மந்திரோபதேசமுமில்லை. ஆகையால் பொய்யைப்போல் அபரிசுத்தர்ளாயிருக்கிறார்கள்." (அதி. சு 17)

"மாதர்கள் பெரும்பாலும்விபசாரதோஷமுள்ளவர்கள் என்று அனேக சுருதிகளிலும், சாத்திரங்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றன, அதற்கு திருஷ்டாந்தமாக அந்த விபசாரத்துக்குசுருதியில்சொல்லிய பிராயச்சித்தத்தைக் கேளுங்கள்."(அதி 9—சு. 18)

"ஒருவன் தன்னுடைய தாய்க்கு மானச விபசாரம் நேரிட்டதாக அறிந்து அதற்குப் பிராயச் சித்தம் செய்கிறான். தன் தாயானவள் கற்பின்றி அயலான் வீட்டுக்குப் போய் அந்த பர புருஷனைப் பார்த்து யாதாவது மனதினால் ஆசைப்பட்டிருந்தால் அந்த ஆசையினால் உண்டான ரேதஸ்ஸை என் பிதா தனது ரேதஸ்ஸினால் பரிசுத்தம் செய்யக்கடவன். இதுவே மாதர்கள் நிலையில்லா மனமுடையார் என்கிறதற்கு திருஷ்டாந்திரம்." (அதி 9—சு. 19)

மனு அதர்ம சாஸ்திரத்திலுள்ள மேற்கூறிய சுலோகங்களை நமது பெரியார் நன்கு அறிந்தும் பெண்களைப் பற்றி இழிவாக மனு சொல்லவில்லை என்று சொல்லுகிறார். இதை விடப் பெண் உலகத்திற்கு என்ன வேண்டும்! பார்ப்பனப் பெண்கள் விபசாரம் செய்தாலும், என்ன அக்கிரமங்கள் செய்தாலும் அது பிராயச் சித்தம் செய்தால தீர்ந்து விடுமாம். ஏனையோர் அவ்விதம் செய்தால் அவர்கள் தாசிகளினும் இழிந்தவராகக் கருதப்படுவதோடு அவர்கட்குத் தண்டனையும் விதிக்கப்படுமாம். பார்ப்பனர்கள் செய்யும் கொலைகளுக்கும் கொள்ளைகளுக்கும் யோக்கியமற்ற செய்கைகளுக்கும் பிராயச்சித்தம் உண்டு. ஆனால் ஏனையோருக்கு தண்டனை தான்பிராயச்சித்தம். என்ன கொடுமை! இதுவா மனுவின் தர்ம சாஸ்திரம். நமது பெண்களைக் குறித்தும் பார்ப்பனர்களைத் தவிர இதர சமூகத்தினரைக் குறித்தும் இம்மனு அதர்ம சாஸ்திரத்தில் கூறியிருப்பதைவிட ஸ்ரீமதி மேயோ தமது "இந்தியத்தாய்" என்னும் நூலில் என்ன அதிகம் எழுதிவிட்டார் என்பது என்போன்றார்க்கு விளங்கவில்லை. மிஸ் மேயோ எழுதியதைவிட ஆயிரம்மடங்கு அதிக அபாண்டங்களுள்ள இந்நூலைப்பற்றி முதலில் கிளர்ச்சி செய்தார்களா? குப்பைக்காரன் என்று மனுவை அழைத்தார்களா? அழைக்கிறார்களா? சும்மாட்டு ஒருவர் நம்மைக் காலால் உதைத்தால் பட்டுக்கொள்ளலாம், அப்பொழுது சாத்விக முறையைக் கையாள வேண்டும், அந்நிய நாட்டு ஒருவர் கையால் தொட்டால் அயோக்கியத்தனம், அக்கிரமம என்று வீணாக பிதற்றுவதுடன் தொட்டதற்காக பதில் அடிப்பது என்பதானது மடத்தனமாகும். மிஸ் மேயோவின் 'இந்திய மாதா' என்னும் புஸ்தகங்களை நெருப்பில் வைத்துக் கொளுத்தலாமாம். ஆனால், அதைவிட மோசமான இந்த அபத்தக் களஞ்சியத்துக்கு தகனக் கிரியை செய்தல் பெரும்பாபமாகுமாம். ஸ்ரீலஜபதிராய் மிஸ் மேயோவிற்குப் பதில் எழுத முற்பட்டு விட்டார். ஆனால் மனுவின நூலோ? அதற்கு யார் பதிலிறுப்பது? பதிலிறுக்க எவரும் இல்லை. ஆதலின் கொளுத்துதல் தான் மேல். மிஸ் மேயோ எழுதியிருக்கும் நூலில் பல உண்மைகள் இருக்கின்றன, ஆனால் மனுவின் நூல் முழுவதும் அபத்தக் களஞ்சியம். தேசீயத் தலைவரும், இதர அரசியல் வாதிகளும் முதலில் இந்நூலைப் பறிமுதல் செய்துவிட்டு, அல்லது கொளுத்தி விட்டுப் பின்னர் மிஸ் மேயோவைப்பற்றிக் குறைகூறுவது அறிவுள்ள செய்கையாகும். 'தேச பக்தன்

தஞ்சை ஜில்லா பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை மகாநாடு.

இம்மகாநாடு திருவாரூரில் மே மாதக் கடைசியில், விடுமுறை நாளில் கூடுகிறது. அது போழ்து தொண்டர் மகாநாடும் பிற மகாநாடுகளும் கூடும். நமது நாட்டுக்கல்வி, கைத்தொழில், விவசாயம் வியாபாரம், சுகாதாரம் முதலிய அபிவிருத்திக்கென பொருட் கண்காட்சி ஒன்று மகாநாட்டுத் தேதியிலிருந்து ஒரு வாரம் வரையில் திறந்து வைக்க ஏற்பாடாகி இருக்கிறது. பொருட்காட்சிக்கு பண்டங்கள் அனுப்பி பரிசுபெறஎவருக்கும் உரிமையுண்டு பத்திரிகைகள்புத்தகங்கள் முதலியன சேகரஞ் செய்துகண்காட்சியில் வைக்கப்படும். உரிமையாளர் கவனிப்பார்களாக.

தொண்டர்களாய் பதிவு செய்து கொள்ள விரும்புவோரும், பண்டங்கள் அனுப்ப இடங்கள் வேண்டுவோரும்,பிறவிபரம்விரும்புவோரும், மே மாதம் 15 க் தேதிக்குள் மனுச்செய்து கொள்ள வேண்டும்.

வரவேற்புக்கழக காரியதரிசிகள்.

நாவுக்கரசு நற்சபை ஆண்டு விழா.

இவ்விழா இவ்வாண்டு சித்திரைத்திங்கள் 13,14 ம் நாள் பிற்பகல் ஆ. முத்துப்பட்டினம் சித மு. நா. ரா ஆவர்கள்பங்களாவில்திருநெல்வேலிதிருவாளர், க. சுப்பிரமணிய பிள்ளை எம். ஏ.எம். எல் அவர்கள்தலைமையில்இனிதுநடைபெற்றது. ஆயிரக்கணக்கான ஆடவர்பெண்டிர் வந்திருந்தது குறிப்பிடத்தக்கதுபல அறிஞர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். காரியதரிசி,

கோ. தா. செட்டிபாளையம் தமிழ் மாணவர்கள் சங்க ஆண்டு விழா.

கோ. தா. செட்டிபாளையம் தமிழ் மாணவர் சகம் ஆறாவது ஆண்டு நிறைவிழாவானது கோயமுத்தூர் தாலூக்கா போர்டு பிரசிடெண்டு ஸ்ரீமான் V. C, பழனிச்சாமி கவுண்டர் அவர்கள் தலைமை யின் கீழ் 29-4-28-தேதி கொண்டாடப்பட்டது. பாடசாலை மாணவர்களாலும் கல்வியாளர்களாலும் அனேக விஷயங்கள் அருமையாக உபன்யாசிக்கப்பட்டன.

R. N. கல்யாணசுந்தர கவுண்டர்.

லாலுகுடி தாலுக்கா
பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை மகா நாடு.
அறிக்கை.

இம்மகாநாடு 1928ஞு ஜுன்மீ 9, 10ம் நாட்கள் (விபவஞு வைகாசிமீ 27, 28) சனி, ஞாயிறு இரண்டு தினத்திலும் லாலுகுடியில் நடைபெறும்.

சமயம், சமூகம், மொழி, அரசு முதலான எல்லா இயல்களிலும் நம்மவர் முன்னேறி சுயமரியாதையோடு வாழவேண்டுமென்பது பற்றி ஆலோசித்து பல முடிவுகள் செய்யப்படும்.

"குடியரசு" ஆசிரியர் வைக்கம் வீரர் உயர் திருவாளர் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்கள் தலைமை வகிப்பார்கள். "திராவிடன்", ஆசிரியர் உயர் திருவாளர் ஜெ. எஸ். கண்ணப்பர் அவர்கள் நமது சுயமரியாதைக் கொடியை உயர்த்துவார்கள்.

நன்கொடையாளர்கள் ரூ. 5-க்கு மேலும் வரவேற்புகழகக் கட்டணம் ரூபாய் 3-0-0ம் பிரதிநிதிக் கட்டணம் ரூ. 1-0-0. செலுத்த வேண்டும். காணவருபவர்களும், பெண் மக்களும், எவ்வித கட்டணமும் செலுத்தவேண்டியதில்லை. மகா நாட்டில் கலந்துகொள்ளவும், செய்யப்படும் முடிவுகளில் வாதிக்கவும் நன்கொடையாளர், வரவேற்புக்கழக உறுப்பினர், பிரதிநிதிகள் ஆகியவர்களுக்கே உரிமை உண்டு. அவர்கட்கே இட வசதியும் உணவு வசதியும்செய்து கொடுக்கப்படும்.

தாலுக்கா ஜில்லா தமிழர்களைச் சிறப்பாகவும், தமிழ்நாட்டுத் தமிழ் மக்களைப் பொதுவாகவும், 20—5—1928-க்குள் கிடைக்கும்படி மகா நாட்டில் செய்விக்கவேண்டிய தீர்மானங்களை எழுதியனுப்புவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பொதுக்கூட்டத்தில் இரண்டு தினங்களிலும் பிற்பகல் 6 மணிக்கு நாட்டுத்தலைவர் பலர் நமது இயக்கங்களைப்பற்றிய சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். பார்ப்பனரல்லாதார்களின் நன்மையை நாடி உழைக்கும் வட நாட்டு, தமிழ் நாட்டு எல்லாத்தலைவர்களும் விஜயம் செய்வார்கள்.

எல்லாப் பார்ப்பனரல்லாதாரும், எங்களுடன் ஒத்துழைத்தும், மன,மொழி, மெய்களாலும் பொருளாலும், பேருதவி புரிந்தும் ஆதரித்தும் சிறப்புற நடத்திவைக்கவேணுமாய்க் கோருகிறோம்.

பா. கி. இராஜா சிதம்பர ரெட்டியார்
மு. செல்லப்பெருமாள் நாட்டார்
நா. சு. மு. செல்வக் கணபதி செட்டியார்
அ. பொன்னம்பலனர்
மகாநாட்டு அமைச்சர்கள்

ஸ்ரீ சென்னிமலை ஆண்டவர் சந்தனபிஷேக மகோற்சவம்.

நிகழும் விபவஞு சித்திரைமீ 22-உ வெள்ளிக்கிழமை சித்திரா பௌர்ணமி பூர்ணசந்திரோதயத்தில் ஸ்ரீ சென்னிமலை ஆண்டவருக்கு சந்தனபிஷேக மகோற்சவம் அதிவிமரிசையாக நடைபெற்றது.

ஒரு நிருபர்.

பார்ப்பனீயம் ஒழிந்த ஓர் பிரபல கருமாதி.

கும்பகோணத்தைச் சேர்ந்த மேலக்காவேரியில் வசிக்கும் ரிட்டயர்டு ஸ்டேஷன் மாஸ்ட்டர் சீமான் மா. ச. விஸ்வலிங்கம் பிள்ளையவர்களின் தர்ம பத்தினியார் ஸ்ரீமதி பாலாம்பாள் அம்மாள் அவர்கள் காலஞ்சென்றதைக் குறித்து செய்யப்பட்ட கருமாதி 1-5-28-ல் காவேரிக்கரையில் மிகவும் சிறப்பாய் நடைபெற்றது. ஸ்ரீமான் மு. முருகய்ய தேசிகரும் பெருவையாறு ஸ்ரீமான் எஸ். என். தேசிகர் அவர்களும் இந்தக்கருமாதியை தமிழ் முறைப்படி சிறப்புறநடத்தி பூர்த்தி செய்வித்தனர். ஏழைகளுக்கு தானங்களும் வழங்கப்பட்டன. பந்துமித்ரர்களுக்கு போஜனம் அளிக்கப்பட்டது வந்திருந்தவர்களில் முக்கியமானவர்கள், ஸ்ரீமான்களான எம். தெண்டபாணி பிள்ளை, எஸ். வி. லிங்கம் பிள்ளை, பரியலூர் என். சோமசுந்தரம் பிள்ளை, ராமய்யா பிள்ளை, பாலக்காடு வி. ரா. வி. கல்யாணசுந்தரம் பிள்ளை, ஆண்டிராமாபுரம் அண்ணாமலைப்பிள்ளை, மன்னார்குடி விஸ்வநாதம் பிள்ளை, நன்னிலம் சுப்பிரமணிய பிள்ளை, பட்டுகோட்டை தியாகராஜ பிள்ளை, திருத்தாபூண்டி ராஜரெத்தினம் பிள்ளை, நாகப்பட்டினம் நாகலிங்கம் பிள்ளை, தஞ்சாவூர் தர்மலிங்கம் பிள்ளை, சிதம்பரனூர் செல்லகணபதி பிள்ளை, சீர்காழிவடிவேல் பிள்ளை, முதலியோரும் இன்னும்வருமாவர் ஸ்ரீதண்டபாணிபிள்ளை, இக்கருமாதிக்கு வந்திருப்பதை யறிந்த பார்ப்பனர்களில் ஒருவராவது டி கருமாதி நடக்கும் இடத்திற்கு சமீபத்திலேயே வாரதது மிகவும் குறிப்பிடத்தக்க சம்பவமாகும் இம்மாதிரியே பிராமணரல்லாதார் பலரும் தங்கள் தங்கள் வீட்டில் நடக்கும் சுபா சுப காரியங்களை பார்ப்பனர்களை ஒழித்து செய்யவேண்டு மென்ற முடிவு செய்துக் கொண்டுபோயினர்.

G. முருகேசம்பிள்ளை, மாயவரம்.

மாத்தரை மருத்துவ குல சங்கம்.

இச்சங்கமானது மாத்தரை மருத்துவர்களின் முன்னேற்றத்தின் பொருட்டு சென்னையில் மருத்துவ ஞாயிறுபிரகாசம் திரு. பண்டிதர் எஸ். எஸ். ஆனந்தம்பிள்ளையவர்களின் தலைமையின் கீழ திருவிழ்ப்பள்ள மருத்துவ குல சங்கத்தின் நோக்கங்களை அனுசரித்து 1928ஞு பிப்ரவரிமீ 12ம் தேதி மாத்தரையிலுள்ள மருத்துவர்களின ஒற்றுமையாலும், திரு. ரா. சுப்பிரமணியம் அவர்களின பேருக்கத்தின் பயனாலும் ஸ்தாபிக்கப் பெற்று பிரதி ஞாயிறுதோறும் பொதுவாக கல்வி சுகாதாரம் சுயமரியாதை ஒழுக்கம் முதலிய விஷயங்களைப்பற்றி கல்வியறிவுடையவர்களைக் கொண்டுசிற்சில சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பெற்று குல முன்னேற்றத்தின் பொருட்டு மிகவும் கவனஞ் செலுத்திவருவதுடன் மருத்துவ குல சிறுவர்களின் கல்வியபிவிர்த்தியின் பொருட்டுச் சங்கத்தின் சார்பாக இராப்பள்ளிக்கூடமொன்று ஏற்படுத்தி சிறுவர்களுக்கு கல்வி கற்பிக்கத் தக்க ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

காரியதரிசி.

அருப்புக் கோட்டையில் சுயமரியாதை உதயம். பார்ப்பனீயம் ஒழிந்ததிதி

இவ்வூர் பிரபல ஜவுளி வியாபாரியும் சாலியர் மகாஜன சங்க வைஸ்பிரஸிடெண்டுமான திருவாளர் த. வ. ரு. ச. ராமலிங்கம் அவர்கள் சுமார் 12 வருஷகாலம் பார்ப்பனீயத்துடன் நடத்தி வந்த தம்தகப்பனரின் சிரார்த்தத்தை இவ்வருடம் 3-4-28-ல் பார்ப்பனீயத்தை அறவே ஒழித்து ஏழைமக்களுக்கு சமபந்தி போஜனம் அளித்து மூடப் பழக்கமான சிரார்தம் நடத்துவது வெறும் புரட்டு என்றும், அது உழைப்பில்லாமல் ஜீவிப்பதற்காக பார்ப்பனர்களால் ஏற்படுத்திக் கொண்ட கட்டுப்பாடு என்றும், இதுபோன்ற இன்னுமநேக மூடப்பழக்க வழக்கங்கள் நம்நாட்டிலும் குறிப்பாய்நம சமூகத்திலும் அதிகமிருப்பதால் இவைகளை ஒவ்வொருவரும் அறவே ஒழித்து சுயமரியாதையோடு வாழவேண்டு மென்றும பேசினதுடன் சிரார்த்தத்தை முன்னிட்டு 'திராவிடன' பத்திரிகைக்கு நன் கொடையாக ரூபாய் ஒன்று அனுப்ப தீர்மானித்திருக்கிறார்.

எஸ். எம். கே. சங்கரநாராயணன்

பார்ப்பனீயம் ஒழிந்த திதி.

இவ்வூர் சுய மரியாதை சங்க அங்கத்தினரும், யூனியன் சானிடெரி மேஸ்திரியுமான சாம்பசிவம் அவர்களின் தாயார் முதலாவது ஆண்டு திதி 30-4-28-ல் நடந்தது. அதற்குப் பார்ப்பனப் புரோகிதர் ஷையார் வீட்டில் சுமார் 2 மணிநேரம் காத்துக் கொண்டிருந்தும், அவர்கள் சூழ்ச்சி ஒன்றும் பலிக்காமல், இரண்டொருவரிடம் மதம் போச்சு, சாஸ்திரம் போச்சு, என்று ஆற்றிக்கொண்டு, வீடுபோய்ச் சேர்ந்தார்கள். சுய மரியாதை சங்க அங்கத்தினர்களாலும், திருவாளர் சாம்பசிவம் அவர்கள் குல வாத்தியாரினாலும் திதி நடத்தப்பட்டு, சமபந்தி போஜனம் அளிக்கப்பட்டு ஏழைகளுக்கு கதராடை வழங்கப்பட்டு திதி இனிது முடிந்தது.

என். சுப்பையா.

இனாம்! இனாம்!
ஸில்க் அங்க வஸ்திரம்.
பிரைஸ் சீட்டு.

என்ற இந்த சீட்டை ரூபாய் 1 விலைகொடுத்து வாங்கினவர்களுக்கு ஒரு ரூபாய் விலையுள்ள 5 சீட்டு அனுப்பப்படும். டி சீட்டு 5-ம் விற்று ரூபாய் 4-ம் சீட்டின் டேப்ளிகேட்டும் அனுப்பினவர்களுக்கு 4 ரூபாய் பொறமான ஒரு சிறந்த ஸில்க் அங்கவஸ்திரம் இனாம் அனுப்பப்படும். நண்பர்களே, கவனியுங்கள் டி சீட்டு 5-ம் விற்று தாங்கள் கொடுத்த ரூபாய் ஒன்றும் எடுத்துக்கொண்டு மீதம் ரூபாய் நாலும் எங்களுக்கு அனுப்பிவிடவேண்டும், ஆகவே தாங்களுக்கு ஒரு நஷ்டமுமின்றி சிறந்த ஸில்க் அங்கவஸ்திரம சீக்கிரத்து உழைப்பிற்கு உத்தரவாதமுள்ளது இனாம் அடைப்பதை கவனியுங்கள். எட்டணா ஸ்டாம்புடன் இன்றே எழுதவும். 'ஜவுளி கேட்லாக் இனாம்' மானேஜர்,

எம். ஆர். வீவிங் பாக்டரி,
கோட்டார், திருவாங்கூர்.

திருச்சி ஜில்லாவில்
சுயமரியாதைப் பிரசாரம்.

திருச்சி ஜில்வா லாலுகுடி தாலூகா சுயமரியாதை மகாநாடு சமீபத்தில் நடக்கப் போவதை உத்தேசித்தும், திருச்சியில் சுயமரியாதை ஜில்லா மகாநாடு நடக்கப் போவதை உத்தேசித்தும் திருச்சிஜில்லா சுயமரியாதைத்தொண்டர்கள் கேட்டுக் கொண்டபடிக்கு இம்மாதம் 3ம் தேதி முதல் 6 தேதி வரை திருச்சி ஜில்லாவில் சுயமரியாதைப் பிரசார சுற்றுப்பிரயாணம் செய்ய திரு நாயக்கர் 2ம்தேதி இரவு ஈரோட்டிலிருந்துபுறப்பட்டு 3ம் தேதி காலை திருச்சிக்குவந்து திருவாளர்கள் விஸ்வநாத பிள்ளை, திருச்சிசேர்மெனும் சட்ட சபை மெம்பரும் ஜில்லா போர்டு உபதலைவரும் பிரபல வக்கீலுமாகிய டி. எம். நாராயணசாமிபிள்ளை, தமிழ் பண்டிதர் மு. நடேசமுதலியார், வக்கீல்வேதாசலம்பிள்ளை, கலிய பெருமாள் நாயுடு, முத்துசாமிபிள்ளை, கி கலிய பெருமாள் நாயுடு நாசிம்மலுநாயுடு முருகதாஸ் ராவணதாஸ் முதலியவர்களுடன் பகல் 4 மணிக்கு திருச்சியிலிருந்து லாலுகுடி வந்து சேர்ந்தார்கள், அவர்களை லாலுகுடி மகாஜனங்களும் சுயமரியாதை சங்கத்தலைவர் ஆகிய திருவாளர்கள் செல்வக்கணபதிசெட்டியார ஆ பொன்னம்பலம் முதலிய பல கனவான்களும் ஊருக்கு ஒருமயில் தூரத்திலிருந்தே வரவேற்று யாவருக்கும் மாலை சூட்டி ஜே கோஷத்துடன் நெடுக ஒவ்வொரு இடங்களிலும் மாலைகளும் சந்தன தாம்பூலம் கல்கண்டு முதலியவினியோகத்துடன் கோதண்டராம செட்டியார் சத்திரத்திற்கு அழைத்துச் சென்று அங்கு சிற்றுண்டிவழங்கியதும்நேரே சிவன்கோயிலுக்கு முன்னர் மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபடி மீட்டிங்கு ஸ்தலத்திற்கு ஆடம்பரத்துடன் அழைத்துச் சென்றதும் பெரிய கூட்டத்தினிடையே ராவணதாஸால் சுயமரியாதை கீதம் பாடப்பட்டு திரு வேதாசலம் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் மகாநாடு துவக்கியது, திரு வேதாசலம் அவர்கள் அரைமணிக்கதிகமாகவே நாயக்கரை புகழ்ந்து பேசியபிறகு திரு நாயக்கருக்கு ஏற்படுத்திஇருந்த உபசாரப் பத்திரம் காரியதரிசி திரு பொன்னம்பலம் பிள்ளை அவர்களால் வாசித்துக் கொடுக்கப்பட்டது. உபசாரப் பத்திரம் வருமாறு:—

தமிழ் நாட்டின் ஒப்பு உயர் வற்ற மாபெருந்தலைவா.

தங்களுக்கு இரண்டாமுறையாக இந்நகருக்கு அழைக்கும் பெரும் பாக்கியமளித்த இறைவன் திருவருளைப் போற்றி தங்கள் இணையடிகளுக்கு மனமுவந்த வணக்கஞ் செலுத்தி வரவேற்கின்றோம்,

நம்மவர்களின் முன்னேற்றத்திற்கேஇராப்பகலாய் ஓய்வின்றி யுழைக்கும் பெரியோய்!

தாங்கள் "குடியரசு" "திராவிடன்" மூலம் செய்யும் உபதேசத்தால் தமிழ் மக்கள் கண்விழித்து பார்ப்பனர்களின் சூழ்ச்சிகளையும் புராணம், இதிகாசம், ஆகமம், வேதம், என்ற போல் செய்திருக்கும் கட்டுப்பாடுகளையும் உடைத்தெறிய வேலைசெய்து வருகின்றனரென்பது உலகறிந்ததே.

உண்மை யுணர்ந்த உறவோய்! தமிழ் மக்களுள் தங்கள் பழக்க வழக்கத்தால் ஆங்கிலத்தையே படித்தும், பேசியும் வருகின்றவரும் ஏனைய வெளி நாட்டாரும் இவ்வியக்கத்தினை அறிந்து உய்ய அஞ்சா நெஞ்சத்துடன் ஒரு (ரிவோல்ட்) ஆங்கில வாரப்பத்திரிகையும் நடத்த முன் வந்த தங்கள் தீரச் செயலினைப் போற்றுவதுடன் தங்களிடம் என்றும் மாறாத நன்றி அறிதலையும்உடையோம், சுயமரியாதை இயக்கத்தால் தேசீயம்போச்சென்று பொய்யழுகைபழும் தமிழ்நாட்டுச் சுயநலப் போலி தேசீய வேஷப் பார்ப்பனர்களும் அவர்களைச் சேர்ந்த கோடரிக் காம்புகளும் தங்கள் மனம் போன வழியே நடந்து அதனால் செல்வாக் கற்று இறக்குந் தருவாயில் காங்கிரஸின் போரால் மீண்டும் நமது புனித இயக்கத்தை ஒழித்து விடுவதாய்ச் செய்யும் அட்டகாசங்களையும் மற்றும் அவர்கள் தங்கள் பத்திரிகைகளின்மூலம்செய்யும் அர்த்தமற்ற வீண் முழக்கங்களையும் கண்டு நாங்கள் ஒரு சிறிதும் ஏமாற மாட்டோம் என்று தங்களுக்கு உறுதி கூறுகின்றோம்,

காலத்தை நோக்கி அவ்வப்போது தாங்கள் இடும் பணிகளை முன்னணியில் நின்று எதற்கும் அஞ்சாது உமது ஏவலின் படி இத்தாலூக்கா வாசிகளும் இளைஞர்களும் நடக்கச் சித்தமாயிருக்கின்றோமென்பதை பணிவுடன விண்ணப்பித்துக் கொள்ளுகிறோம்

தன்னலங்கருதாத் தகைபோய்! நினது அதி தீவிர அஞ்சா அமிர்த மொழிகளால், அடிமைகளாக வாழ்ந்து வந்த நம தமிழ்ப் பெருங்குடி மக்களின் அடிமைப் பிணிநீங்கி எல்லா வழிகளிலும் சுயமரியாதைக் கொடி தாங்கி நிற்கச் செய்யும் பேருபகாரத்தை செய்த நினக்கு நீண்ட ஆயுளையும் சர்வ திடகாத்திரத்தையும் அருளுமாறு எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம். இங்ஙனம்

தமிழர் சுயமரியாதை சங்கத்தார்.

திரு நாயக்கர் தககபடி பத்திரத்திற்கு பதிலுரைத்துவிட்டு தனது உபன்யாசத்தை ஆரம்பித்தார்.

கூட்டத்திற்கு சுமார் ஆயிரம் பேருக்கு மேலாகவே கூடியிருந்தார்கள் மகம்மதியர்களும் பார்ப்பனர்களும் ஆதி திராவிடர்களும பெண்களும் மற்றும்ஆண்களும் சுமார் 3 மணி நேரம் வெகு அமைதியாகவும் ஆனந்த பரவசமாகவும் உபன்யாசத்தை கேட்டுக்கொண்டிருந்தார்கள். அங்கு கூடியிருந்த சுமார் 200, 300 பார்ப்பனர்களும் திரு நாயக்கர் சொன்ன ஒவ்வொரு விஷயத்தையும் சரியென்றும் ஆதரிப்பதாகவும் சைகை செய்து கொண்டும் சிறப்பித்துக் கொண்டும் அடிக்கடி கை தட்டிக்கொண்டும் சபாஷ் சபாஷ் என்று சொல்லிக்கொண்டும் கேட்டுக்கொணடிருந்ததும் மிகவும குறிப்பிடத்தகுந்தது. போலீஸ் அதிகாரிகள் பிரசங்கத்தை எழுதிக்கொணடுபோனார்கள்.

கூட்டததில் இருந்த முக்கியஸ்தர்கள்.

திருச்சி ஸ்ரீமான்கள் சேர்மன் டிஸ்டிரிக்ட் போர்டு வைஸ் பிரசிடெண்டு டி எம் நாராயணசாமி பிள்ளை எம் எல் சி வக்கீல் தி பொ வேதாசலம் பிள்ளை பி எ பி எல் மணிவாசகத்தமிழகம் கி ஆ பே விஸ்வநாதபிள்ளை திருச்சி சி அ கா கலியபெருமாள் நாயுடு முத்துசாமிபிள்ளை திருச்சி எஸ் பி ஜ் காலேஜ் தமிழ் பண்டிதர் மு நடேச முதலியார் அரசங்குடி சரவணமுதலியார் கி கலிய பெருமாள் நாயுடு நரசிம்மலு நாயுடு முருகதாஸ் இராவணதாஸ் முதலானவர்களும் பெருவள நல்லூர் மிராஸ்தார் பா கி இராஜ சிதம்பரசெட்டியார் தாலுகா போர்டு உறுப்பினர் மூ செல்வப்பெருமாள் நாட்டார் மாங்குடி ராமச்சந்திரவன்னியர் நகர் ரங்கசாமி முத்து ராஜா தமிழ்ப் பண்டிதர்சிதம்பர முத்துராமையர் பெருவளநல்லூர் மீனாக்ஷிசுந்தர முதலியார் குழந்தைவேல் முத்து ராஜா சதா சிவமுத்துராஜா நமசிவாயம் செட்டியார் பொன்னுசாமி செட்டியார் வைத்தியர் விஸ்வநாதசெட்டியார் கோமகுடி பாண்டு ரங்கம் பிள்ளை கந்தசாமி ஆசாரி தியாகராஜ பிள்ளை பி எ பல்லபுரம் ஆச்சி முத்து முத்துராஜா பெருவள நல்லூர் வீரமகேசர் வைத்திலிங்க அய்யர் பூவாளூர் பா நாராயண செட்டியார மருதப்பசெட்டியார் நடேச முதலியார் முத்துசாமி செட்டியார் சோட்டா சாயப்பு அமீத்கான் சாயபு ஆங்கரை மருதைநாயகம்பிள்ளை லாலுகுடி ஹைஸ்கூல் தலைமை உபாத்தியாயர் முத்துரத்தினம் அய்யர் வக்கீல் சாமி நாதய்யர் இராஜகோபாலய்யர் குளித்தலை எட்மாஸ்டர் ரெங்கசாமி அய்யங்கார் வக்கீல் எல் என் கோபாலய்யர் சிறுதையூர் அப்துல் கபான்கான்சாயபு அப்துல் வகான்சாயபு முகமது யகாத் சாயபு முதலானவான்களாவார்கள்,

நாயக்கர் பேசியதின் முக்கிய தத்துவம் என்னவென்றால் சுயமரியாதைஇயக்கத்தின் தத்துவம் என்னவென்றால் அது ஒரு கொள்கையுடன் போர் தொடுக்க அதாவது மக்கள் பிறவியால் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்பதையும், பொதுஉரிமைகளில் ஒருவருக்கொருவர் வித்தியாசமும் பார பட்சமும் கற்பிப்பதையும்பக்தியின்பேராலும்தேயத்தின் பேராலும் பாமர மக்களை வஞ்சித்து ஏமாற்றி நிரந்தர அடிமையாக்கி வைத்திருப்பதையும் ஒழிக்க ஏற்பட்டதென்றும் இவ்வேலையை எதிர்த்து நிற்பவர்கள் எந்தசமூகத்தினாராலும் எந்த வகுப்பினாராலும் அவர்களுடைய எந்த விதஇடையூறையும் பழிப்பையும் லட்சியம் செய்யாமல் போராடி எதிர்ப்பை தகர்க்க வேண்டும் என்பது தான் நமது தொண்டின் தத்துவம் என்றும் விஸ்தாரமாகவும் மேற்கோள்களுடன் யாரும் சரி என்று ஒப்புக்கொள்ளும்படிபேசினார். பிறகு திரு விஸ்வநாதம்பிள்ளையவர்கள்பேசினார்கள்.

திரு செல்வக்கணபதி செட்டியார் அவர்களால் வந்தனம் சொல்லப்பட்டு உபன்யாசகர்களுக்கும் அக்கிராசனருக்கும் திரு நாராயணசாமி பிள்ளைக்கும் மாலை சூட்டி 9 மணிக்கு கூட்டம் கலைந்தது.

மற்றும் 2, 3 நாள்கள் இந்த பக்கத்திலேயே சுற்றுப்பிரயாணம் செய்து முடிந்ததும் திரு நாயககர் மாயவரம் முதலிய இடங்களுக்கு போய்விட்டு சென்னை வழியாய்ஈரோடு செல்வார்.

ஒரு நிரூபர்



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு

ஈரோடு விபவ-ஞு சித்திரை-மீ 24-உ

'தேசியமும்' சுயமரியாதைப் பிரசாரமும்.

தேசியத்திற்கு விரோதமாக சுயமரியாதை பிரசாரம் நடப்பதாகவும் ஆதலால் "ரத்தம் சிந்தியாவது, தேசபக்தர்கள் புற்றீசல்களைப்போல் உயிர் துறந்தாவது, சுயமரியாதைப்பிரசாரத்தை ஒடுக்கிவிடவேண்டும்" என்றும் "அதற்காக பல ஆயிரம் ரூபாய்கள் காங்கிரஸ் நிதியிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றது" என்றும் 'தமிழ்நாடு' பத்திரிகை எழுதி இருக்கின்றது. மற்றபடி பார்ப்பனப் பத்திரிகைகளோ ஒன்று சேர்ந்து இவ்விஷயத்தில் எதிர் பிரசாரம் செய்ய ஸ்ரீ வரதராஜுலுக்கே வக்காலத்து கொடுத்துவிட்டு யாவருக்கும் தெரியாமல் அடுத்த தேர்தலில் பார்ப்பனரல்லாதார் கக்ஷியைதோற்கடிக்க இரகசியமாக ஜஸ்டிஸ் கக்ஷியைப்பற்றியும் மந்திரிகளைப்பற்றியும் சட்டமெம்பரைப்பற்றியும் குறைகூறி விஷமப்பிரசாரம் செய்துகொண்டிருக்கின்றன. பார்ப்பனர்கள் இஷ்டப்படியும் அவர்களது கூலிகளின் ஆசைப்படியும் அடுத்த தேர்தலிலும் ஜஸ்டிஸ் கக்ஷி தோல்வியடைந்து மந்திரி பதவி வகிப்பதற்கு தகுதியில்லாமல் போய்விட்டாலுங்கூட உண்மையிலேயே நாம் ஒரு சிறிதும் கவலைப்பட மாட்டோம். ஏனெனில் அக்கக்ஷியானது ஆறு வருஷ காலம் மந்திரிப் பதவி ஏற்று அதிகாரத்தில் இருந்த காலத்தில் எவ்வளவு நன்மை அடைய முடிந்ததோ அதைவிட பல மடங்கு அதிகமாகவே அக்கக்ஷியின் வேலையின் பயனாக பார்ப்பனரல்லாத சமூகம் நன்மையையும் விழிப்பையும் சுயமரியாதை உணர்ச்சியையும் அடைந்திருக்கின்றது என்றே தைரியமாய்ச் சொல்லுவோம். அதுபோலவே இனியும் ஒரு மூன்று வருஷ காலத்திற்காவது அக்கக்ஷி மந்திரி முதலிய அதிகார பதவியில் இல்லாமல் இப்போது இருப்பதுபோல் மந்திரிகளையும் சர்க்காரையும் ஆட்டிக்கொண்டு இருக்கும் நிலைமையில் இருக்குமானால் பார்ப்பனரல்லாதாருக்குள் இன்னும் அதிகமான உணர்ச்சி ஏற்படும் என்பதே நமது துணிபு.

உதாரணமாக, திரு. ஏ. ராமசாமி முதலியார் அவர்களுக்கு சட்டசபை ஸ்தானம் கிடைக்கக்கூடாது என்று கருதி திரு. சீனிவாசய்யங்கார் பந்தயங்கூறி தனது கூலிகளைவிட்டு எவ்வளவோ விஷமப்பிரசாரங்களும் சூழ்ச்சிகளும் செய்து தங்கள் கருத்துப்படியே திரு. முதலியாரை தோற்கடித்து தாங்கள் வெற்றி பெற்று விட்டார்கள். ஆயினும் அத்தோல்வியின் பயனாக திரு. முதலியார் சட்டசபையிலிருந்து எவ்வளவு தூரம் பார்ப்பனரல்லாதார் சமூகத்தின் நன்மைக்கு உழைக்கக் கூடுமோ அதைவிட எத்தனையோ மடங்கு அதிகமாக உழைத்து நன்மைசெய்ய முடிந்தது. உதாரணமாக, 1200 பிரதி மாத்திரம் வெளியாகிக்கொண்டு தூங்கிக்கிடந்த 'ஜஸ்டிஸ்' பத்திரிகையை 4000 பிரதிக்கு மேலாக வெளியாக்கி தமிழ்நாட்டையே ஆட்டிவைக்க முடிந்தது; பார்ப்பனரல்லாத வாலிபர்களையெல்லாம் தட்டி எழுப்ப முடிந்தது. பார்ப்பனக் கொடுமையை வெளிமாகாணத்திற்கெல்லாம் வெளிப்படுத்த முடிந்தது. பார்ப்பனர்களின் அரசியல் புரட்டுகளையும் அரசாங்கம் பார்ப்பனர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடந்ததையும் பார்ப்பனர்கள் தேசியத்தின் பேரால் அரசாங்கத்திற்கு உளவாய் இருக்கிறதையும் வெளியாக்க முடிந்தது. பார்ப்பனரல்லா பாமர மக்களும் பார்ப்பனர்களுடையவும் அவர்களது கூலிகளுடையவும் வயிற்றுப் பிழைப்பு தேசியத்தின் யோக்கியதையை உணர முடிந்தது. மற்றும் எவ்வளவோ நன்மைகளும் ஏற்பட்டிருக்கின்றன. அதுபோலவே திரு. பனக்கால் அரசருக்கும் மந்திரி பதவி இல்லாததால் எவ்வளவு நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றது என்பதைப் பற்றியும் நாம அதிகம் சொல்ல வேண்டியதில்லை.

முதலாவதாக, பனக்கால் அரசர் மந்திரி ஆகாத காரணத்தினாலேயே பார்ப்பனர்களின் தேசீயத்தையும், காங்கிரஸ் கொள்கையையும், சுயராஜ்ஜியக் கக்ஷியின் யோக்கியதையையும், அவர்களது முட்டுக்கட்டையின் தத்துவத்தையும் வெளியாக்க முடிந்ததுடன் ஜஸ்டிஸ் கக்ஷியாகிய பார்ப்பனரல்லாதார் கக்ஷியை ஒழிப்பதுதான் காங்கிரஸ் கொள்கை என்பதை காங்கிரஸ்காரர்களின் வாயாலேயே ஒப்புக்கொள்ளச் செய்ததையும பொது ஜனங்கள் உணர முடிந்ததுடன் காங்கிரஸ் என்பதே பார்ப்பனர் பிழைப்புக்கு ஏற்பட்ட சாதனங்களில் ஒன்று என்பதையும் மககள் உணர முடிந்தது. தவிரவும் பனக்கால் அரசர் சட்டசபை அங்கத்தினர் பதவிகூட அடைய முடியாமல் போயிருந்திருந்தமானால் பார்ப்பனரல்லாதார் இயக்கம் இனியும் சற்று முன்னேற்றம அடைந்திருக்கக் கூடும் என்று கூடச் சொல்லுவோம. இதை இப்போது மாத்திரம் சொல்ல வரவில்லை. சென்ற தேர்தலின்போதே நாம் எடுத்துக் காட்டி இருந்திருக்கிறோம். அதாவது "பனக்கால் அரசர் சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்றதில், பார்ப்பனர்கள் பனக்கால் அரசர் சட்டசபை அங்கத்தினராகக் கூடாது என்று எவ்வளவோ முயற்சிகள் செய்து பார்த்தும் பலிக்காமல் தோல்வி அடைந்தார்கள் என்கின்ற ஒரு விஷயத்திற்காக மாத்திரம் நாம் மகிழ்ச்சியடைகின்றோமே யல்லாமல் மற்றபடி "பனக்கால் அரசரின் தோல்வியே நமக்கு நல்ல பலனை அளிக்கும்" என்று பேசியும் எழுதியும் இருக்கிறோம்.

அதுபோலவே வரப்போகும் தேர்தலிலும் திரு. ராமசாமி முதலியாரும், பனக்கால் அரசரும் தோல்வியடைவார்களானால், அது பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்கு எவ்வளவோ வெற்றியளிக்குமே தவிர எவ்விதத்திலும் இடையூறு செய்து விடாது என்று சொல்லுவோம். இது 'சீ இந்தப் பழம் புளிக்கும்' என்று சொல்லும் தத்துவத்தில் சொல்லுவதல்ல என்றும் உண்மையாகவும் அனுபவத்தைக் கொண்டுமே தான் சொல்லுகின்றோம் என்றும் முன்னமேயே நாம் சொன்னது என்றும் வாசகர்கள் உணர்வார்களாக.

நிற்க, தேசீயம் என்பது என்ன என்பது பற்றியும் சிலர் கூப்பாடு போடுவது போல சுயமரியாதைப் பிரசாரத்தால் அந்த தேசியம் எப்படி தடைபடுத்தப்படுகின்றது என்பது பற்றியும் சற்று ஆராய்வோம் தேசீயம் என்கின்ற பதத்திற்கு என்ன பொருள் என்பதை முதலில் ஆராய்வோம்.

முதல் முதலில் ஆங்கிலத்தில் இருந்து தான் இந்த வார்த்தையை நமது மக்கள் பேசத்தெரிந்து கொண்டார்கள். அதாவது ஆங்கிலத்தில் நேஷன். நேஷனல், நேஷனலிசம் என்கின்ற பதங்களின் பொருள்களே தான் தேசம், தேசத்திற்குறியது, தேசியம் என்கின்ற பதங்களாகும். அதாவது ஒரு குறிப்பிட்ட தேச சமூகத்தின் சுயமரியாதையைப் பொருத்த விஷயங்களையே தான் பெரிதும் குறிப்பிடுகின்ற முறையில் அவ்வார்த்தை ஏற்படுத்தப்பட்டதே ஒழிய வேறில்லை. அந்த முறையில் இந்திய தேசீயம் என்பது இந்திய சமூகத்தின் சுயமரியாதையைப் பொருத்ததாகும். இப்பொழுது அரசியல் உலகில் பெரும்பாலும் பிரஸ்தாபிக்கப்படும் தேசியம் என்கின்ற பதத்தில் தேச சமூகத்தின் சுயமரியாதையைப் பொருத்ததோ நன்மையைப் பொருத்ததோவான கருத்துக்கள் ஏதாவது பொதிந்து கிடக்கின்றனவா என்று பார்த்தால் தேசீயம் என்கின்ற பதம் உண்மையான பொருளில் உபயோகப்படுத்தப்படுகின்றதா என்பது நனகு விளங்கும்.

தவிர தமிழ் நாட்டைப் பொருத்தவரை யாராவது தேசீயம் என்பதை எடுத்துக்கொண்டால் தமிழ் மக்களுடைய சுயமரியாதையைப்பற்றியோ நன்மையைப்பற்றியோ ஏதாவதாகவல்ல. எடுத்துக்கொள்ளத்தக்க குறிப்பு அதில் இருக்கின்றதா எனபதும் மிகுதியும கவனிக்கத்தக்கதாகும். எனவே இவ்வாண்டும் அதாவது இந்திய மக்கள் சமூகத்தைப்பற்றியும் தமிழ் மக்களின் சமூகத்தைப் பற்றியும் சுயமரியாதையைப்பற்றியும் சீர்தி

ருத்தத்தைப்பற்றியும் ஒரு சிறிது கவலையும் இல்லாத தேசீயம் என்கின்ற வெறும் வார்த்தையை மாத்திரம் பாமர மக்கள் ஏமாறும் மாதிரி உச்சரித்துக் கொண்டு சிலரின் உத்தியோகத்திற்கும் சிலரின் வயிற்றுப் பிழைப்புக்கும் உபயோகித்துக்கொண்டு உண்மையான தேசீயமாகிய சுயமரியாதையைப் பற்றிக் கவலை எடுத்துக் கொண்டிருக்கும் இயக்கங்களையும் குறை கூறிக்கொண்டு "சுயமரியாதைஇயக்கத்தை ஒழிக்க வேண்டியது தேசீயத்தின் கடமை" என்று சொல்வதில் எவ்வளவு தேசீயத் துரோகம் இருக்கின்றது என்பதை பொர்து மக்களையே யோசித்துப் பார்க்கும்படி வேண்டுகின்றோம். பொதுவாக ஒரு சிறு கூட்டத்தார் பிழைக்கவே அவர்களது சுய நலத்திற்காகவே தேசீயம் என்கின்ற வார்த்தையை உண்டாக்கிக் கொண்டிருப்பதாக சொல்வதில் உண்மை இருக்கின்றதா இல்லையா என்பது இங்கு கவனிக்க வேண்டும். தேசீயம் என்கின்ற வார்த்தையோ, தேசீயம் என்கின்ற இயக்கமோ நமது நாட்டில் ஆரம்பிக்கப்பட்டு இன்றைக்கு சுமார் 40 வருஷங்களுக்கு மேலாகின்றது. இந்த இயக்கம் ஏற்பட்ட பிறகுதான் இதன் பயனாக நமது அரசியல் உத்தியோகங்கள் ஏராளமாக உண்டாக்கப்பட்டதும், அதை நம் நாட்டுப் பார்ப்பனராகிய ஒரு கூட்டத்தாரே ஏகபோகமாய் அனுபவிப்பதுமான நிலைமை ஏற்பட்டது என்பதை யாராவது மறுக்க முடியுமா என்று கேட்கின்றோம்.

தேசீய இயக்கம் (காங்கிரஸ்) ஏற்படுவதற்கு முன் நிர்வாக சபை மெம்பர்கள் (மந்திரிகள்) இருவர்களும் ஐகோர்ட்டு ஜட்ஜிகள் ஐவருமாக இருந்தார்கள். தேசீய இயக்கத்தி (காங்கிரசி)ன் பயனாக இப்பொழுது நிர்வாக சபை மெம்பர்கள் (மந்திரிகள்) எழுவரும் ஐகோர்ட் ஜட்ஜுகள் பதினல்வரும் இருக்கின்றார்கள். இதுபோலவே கிராமத் தலையாரிவரையிலும் உத்தியோகங்கள் பெருகிக்கொண்டே வந்திருப்பதுடன் அவ்வுத்தியோகங்களுக்கு சம்பளங்களும் ஏராளமாய் பெருக்கொண்டே வந்து தேசீய இயக்கம் ஏற்படுவதற்கு முன் இந்தியாமுழுமைக்கும் 40 அல்லது 50 கோடி ரூபாய்க்குள் இருந்த சர்க்கார் வரியானது தேசீயம் ஏற்பட்டதின் பயனாகவும் அதனால் உண்டான உத்தியோகங்களின் பயனாகவும் அவைகளுக்கு உயர்ந்த சம்பளங்களின் பயனாகவும் இன்றையதினம் 150 கோடியாக வரி உயர்ந்து ஏழை இந்திய குடியானவர்கள் தலையிலும், வியாபாரிகள் தலையிலும், மற்றும் பொது ஜனங்கள் தலையிலும் பளுவு ஏற்றப்பட்டிருக்கின்றது. இதை நாளிது வரை எந்த 'தேசீய வாதி'யாவது தேசீய நிபுணராவது மறுத்தார்களா என்று கேட்கின்றோம்.

இம்மாதிரி வரிப்பளுவு 40கோடியில் இருந்து 150 கோடி ஆனதின் பயனாக இந்த "தேசீயத் தலைவர்"களுக்காவது மற்றும் அவர்கள் காலை நக்கிப்பிழைக்கும் வயிற்றுச் சோற்று 'தேசீய வீரா'களுக்காவது ஒரு புதுக்கோட்டை அம்மன் காசு பெறுமான நஷ்டமுண்டா என்று கேட்கின்றோம்.

இந்த பார்ப்பனத் தேசீயத்தின் பலனாகவும் அவர்களது கூலி தேசீயத்தின் புலனாகவும் ஏற்பட்ட உத்தியோகங்களில் அதன் செலவின் பளு முழுவதையும் பொறுக்கும் பார்ப்பனரல்லாதாரில் யாராவது சிலர் தங்கள் வகுப்பாருக்கும் சில உத்தியோகங்கள் ஏன் கொடுக்கப்படக்கூடாது என்று கேட்டால் அது பெரிய தேசத்துரோகம் என்று சொல்லப்பட்டு வருகின்றது. இது பார்ப்பனர்களால் மாதநிரமல்லாமல் அவர்களது கூலிகளாகிய பார்ப்பனரல்லாதார்களில் சிலராலும் சொல்லப்பட்டுவருகின்றது. இந்த அறிவிலிகள்—இனத்துரோகிகள்—தேசீயம் என்பதின் பொருள் தெரியாமல் உளறுகின்றார்கள் என்றருத்தமா, அல்லது தெரிந்தும் தங்கள் வயிற்றுப்பிழைப்புக்காக வேண்டி இப்படிச் சொல்லுகின்றார்களா? என்பதை பொது மக்களே யோசித்துக்கொள்ள வேண்டும் என்று வேண்டுகிறோம்.

நமது நாட்டின், நமது சமூகத்தின், சுயமரியாதைக்கு நிரந்தரவிரோதிகளாய் இருக்கும் பார்ப்பனர்களுக்கும் அவர்களை நத்தி தன் இனத்தைக் காட்டிக்கொடுத்து வாழும் சுயநலக்காரருக்கும் எப்படியாவது சுயமரியாதை உணர்ச்சி என்னும் தேசீயத்தில் கவலை இருக்க முடியுமா என்று கேட்கின்றோம்.

பார்ப்பனர்கள் "இத்தனையாம் தேதியில் உங்கள் தகப்பனருக்கு திதி வருகின்றது. தயாராயிருங்கள்" என்று சொல்வதில் நமது பெற்றோர்களைப்பற்றி எவ்வளவுதூரம் அவர்களுக்கு கவலை இருக்க முடியுமோ, ரயில்வேக்காரன் "இன்ன மாதம் இன்ன தேதியில் சிதம்பரத்தில் ஆருத்திராதரிசனம் வருகின்றது, எல்லோரும் போய்ப்பார்த்து மோக்ஷமடையுங்கள்" என்று ரயில்வே கய்டிலும் பணம் கொடுத்து வேறு பத்திரிகையிலும் விளம்பரப்படுத்துவதில், நாம் மோக்ஷமடைவதில் அவனுக்கு எவ்வளவு நம்பிக்கையும் கவலையும் இருக்குமோ அவ்வளவுகவலைதான் இந்தப்பார்ப்பனர்களுக்கும் அவர்களதுகூலிகளுக்கும் நமது தேசீயத்தைப்பற்றி பிரசாரம் செய்வதிலும்பத்திரிகைகளில் எழுதுவதிலும் இருக்கும் என்று நாம்நினைப்பதில் ஏதாவது கடுகளவாவது பிசகு உண்டா என்று கேட்கின்றோம்.

எனவே சிலரின் சுயநன்மைக்கும் வயிற்றுப்பிழைப்புக்கும் ஏற்படுத்திக்கொண்ட 'தேசீயத்திற்கு' இனியும் எத்தனை காலம் நமது மக்கள் ஏமாறுவது என்பது இப்போது முக்கியமாய் யோசிக்கத்தக்க விஷயமாகும். நமக்கு கடுகளவாவது சுயமரியாதை உணர்ச்சி வந்து இருக்கின்றது என்று நாம் சொல்லிக்கொள்ள விரும்பினல் நமது தேசத்தை விட்டு—குறைந்தது நமது தமிழ் நாட்டை விட்டாவது—தேசீயப் புரட்டை ஒழிகக முற்பட்டோமா என்பதை ஒவ்வொருவரும் தமதம் நெஞ்சில் கையை வைத்து பார்க்கவேண்டுமாய் விரும்புகின்றோம்.

பொதுவாக நமது நாட்டு மக்களின் உண்மையான தேசீயதிற்கு அதாவது சுயமரியாதைக்கு எமனாய் இருப்பது. இந்தப்போலி—நாட்டைக் காட்டிக்கொடுத்து வரும்—கூட்டத்தாரின் உத்தியோகசர்ப

திரு. ஆர். கே. ஷண்முகம் செட்டியாரும் திரு. ஸ்ரீனிவாசய்யங்காரும்

திரு. ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் இம்மாதம் 2-ந்தேதி இந்தியர் பிரதிநிதியாக பொதுமக்கள் சார்பாய்தெரிந்தெடுக்கப்பட்டு சர்க்காராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு ஜினிவா மகாநாட்டுக்கு செல்கின்றார்.

திரு. ஸ்ரீனிவாசய்யங்கார் வெயில் காலத்தில் சுகம் அனுபவிக்க உடல் நலம் பேணி இங்கிலாந்துக்குச்செல்கின்றார்.

ஆனால் தனது சுக வாசத்திற்குச் செல்லும் திரு. ஸ்ரீனிவாசய்யங்காருக்கு தேசீயத்தின் பேரால் வழி யனுப்பு உபசாரங்கள் பொது மக்கள் பேரால் சென்னையில் செய்யப்பட்டதே ஒழிய திரு. ஷண்முகம் செட்டியாருக்கு ஒரு உபசாரமும் நடத்தப்படவில்லை. இதன்காரணம் என்னஎன்பதைப்பற்றி நாம் அதிகம் சொல்ல வேண்டியதில்லை.

திரு. செட்டியார் பார்பபனரல்லாதார, திரு. அய்யங்கார் பாரப்பனர் என்பதைத் தவிர வேறு காரணம் இல்லை. இவ்வய்யங்கார் வழியனுப்பு உபசார திருவிழாவுக்கு போட்டி போட்டு செலவு செய்து தலைமை வகித்த திரு. வரதராஜுலு அவர்கள் திரு. அய்யங்காரைப் பற்றி பாடியிருக்கும் கவியை சற்று கவனிப்போம்.

" திரு. அய்யங்காரை முப்பதுகோடி மக்கள் பொது சொத்து என்று கருதுகிறார்கள்.

சுயராஜ்யப் பேரில் அய்யங்கார் தளகர்த்தராய் இருக்கிறார். தேக சௌக்கியத்தை முன்னிட்டு இங்கிலாந்துக்கு போவதாக

னையும் இனத்தை காட்டிக்கொடுத்து வாழும் ஒருசிலரின் தேசீய வேஷமுமேயாகும் என்று கோபுரத்தின்மீதிருந்தும் கூவுவோம். இந்த போலி சுயநல வயிற்றுப்பிழைப்பு தேசீயத்தை வெட்டி வீழ்த்தினுலல்லது மக்கள் சுயமரியாதை அடைந்து ஏழைகள் வாழமுடியும் என்பது ஒருக்காலும் முடியாத காரியம் என்றே சொல்லுவோம்.

'மோக்ஷமும்' 'பக்தியும்' 'மதமும்' எப்படி ஒரு சமூகத்தை பிரித்து சின்னபின்னப்படுதகி நிரந்தர முட்டாள்களாகவும் காட்டுமிராண்டிகளாகவும் மனிதத்தன்மை அற்றவர்களாகவும் செய்து விடுகின்றதோ அதுபோலவே இந்த 'தேசீயமும்' நாட்டையும் மக்களையும் பிரித்து ஒருவரை ஒருவர் காட்டிக்கொடுத்து ஏழைகளையும் குடியானவர்களையும் வதைத்து மீளாத்தரித்திரத்தில் ஆழ்த்தி மனச்சாக்ஷியை இழந்து சுயமரியாதையற்று வாழச் செய்கின்றது. எனவே நமது சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய கொள்கைகளில் இந்த போலி தேசீயத்தை வெளியாக்கி வயிற்றுப் பிழைப்பு தேசீய வாதிகளை ஒழிப்பதும் ஒரு முக்கிய கொள்கையாகக் கொள்ள வேண்டும என்பதை உண்மைச் சுயமரியாதை வீரர்களுக்கும் தொண்டர்களுக்கும் அறிவுறுத்துகின்றோம்.

அய்யங்கார் சொன்னாலும் சமயம் நேர்ந்தால் தேசவிடுதலைப் போரின் லக்ஷியங்களை எடுத்துச்சொல்ல பின் வாங்கமாட்டார். இந்த நாட்டில் ஜாதிச் சண்டை, சமூகவேற்றுமை, வகுப்புப் பிணக்கு உண்டுமானால் அதை மத்தியஸ்தம் செய்ய பிரிடிஷாருக்கு உரிமை இல்லையென்பதை திரு. அய்யங்கார் பிரிடிஷாருக்கு தெரிவிக்கவேண்டும்" (திரு. அய்யங்காருக்குத்தான் உண்டுபோலும். ப-ர்)

என்று பேசியிருக்கின்றார். பின்னர் திரு. வரதராஜுலுவின் சகாக்களாகிய திரு. ஷாபி முகம்மது சாயபும், திரு. குழந்தையப்ப, திரு. சத்திய மூர்த்தியும், திரு வரதராஜுலுவை விட ஒருபடி குறைவாகவே அய்யங்காரைப் பற்றிக் கவி பாடி உற்சவத்தை ஒருவாறு முடித்திருக்கின்றார்கள்.

திரு. வரதராஜுலுவைப் பற்றி திரு. அய்யங்காரும் திரு. அய்யங்காரைப் பற்றி திரு. வரதராஜுலுவும் இதற்கு முன் ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்ட வார்த்தைகள் "நாய் கூட குறுக்கே போகமுடியாது" என்று சொல்லும் பழமொழிபோல் அவ்வளவு கேவலமாக இருந்தது யாவருக்கும் தெரிந்த விஷயம்.

திரு. வரதராஜுலுவை காங்கிரசிலிருந்து விலக்கினால்தான் காங்கிரசு பரிசுத்தப்படும் என்று அய்யங்கார் சொன்னதும், மைலாப் அய்யங்காரை காங்கிரசை விட்டு ஒழித்து காங்கிரசைக் கைப் பற்றினால்தான் அது பார்ப்பனரல்லாதாருக்கு ஆபத்தில்லாமல் இருக்கும் என்றும், பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதாருக்கு கேட்டை விளைவித்து பார்ப்பன ஆதிக்கத்தை நிலை நிறுத்த காங்கிரசை ஆயுதமாக உபயோகித்துக் கொண்டிருக்கிறார்களாதலால் அவர்களை காங்கிரசை விட்டு ஒழிக்கவேண்டும என்றும் திரு வரதராஜுலு சொன்னதும் போய் இவர்கள் இப்போது ஒருவர்க்கொருவர் புகழ்ந்து கவி பாடிக் கொள்வதில் உள்ள இரகசியம் என்ன என்பதை பொது ஜனங்களே கண்டு கொள்ளட்டும். சென்ற வருடம் திரு வரதராஜுலுவை பார்ப்பனர்கள் காங்கிரசிலிருந்து வெளிப்படும்படியாய்ச் செய்ததற்காக பார்ப்பனரல்லாதார்களில் சிலரை கெஞ்சி கேட்டுக்கொண்டதின் பலனாகவும் "இந்த ஒரு தடவை பாருங்கள், இனிமேல் எனக்கு புத்தி வந்து விடும்" என்று சொல்லிக்கொண்டதின் பலனாகவும பார்ப்பனரல்லாதாரிலும சிலர், "இஷ்டப்பட்டவர்கள்-அதுவும காங்கிரசினால் பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதாருக்கு கெடுதி செய்யமுடியாமல் பார்த்துக்கொள்ள சக்தி உடையவர்கள்—காங்கிரசில் சேரலாம்" என்று அனுமதி கொடுத்தவுடன், யாரும் காங்கிரசிற்குள் நுழையாதபடி திரு அய்யங்கார் பந்தோபஸ்து செய்துகொண்ட காலத்தில், திரு வரதராஜுலுவின் ஊர் காங்கிரஸ் கமிட்டியையும் பார்ப்பனர்கள் சுவாதீனம் செய்துகொண்டு வரதராஜுலுவை வெளியாக்கியபோது ஸ்ரீவரதராஜுலு வெட்கப்பட்டு பலரூபாய் செலவு செய்து சேலத்தில் ஜில்லாகாங்கிரஸ் மகாநாடு கூட்டி "பார்ப்பனர்கள் என்னை மிக அவமானப்படுத்திவிட்டார்கள் ஆதலால் நாயக்கர்வாளே தாங்கள் வரவேண்டும! திரு சிதம்பரம்பிள்ளைவாளே! தாங்கள் வரவேண்டும்! திரு பனக்கால்ராஜாவே தாங்கள வந்துஎன் மானத்தைக் காப்பாற்ற வேண்டும்! திரு ராமசாமி முதலியாரே! தாங்கள் வரவேண்டும் திரு ஷண்முகம்செட்டியாரே தாங்கள்வரவேண்டும" என்று ஒவ்வொரு பார்ப்பனரல்லாதவர்களையும்கெஞ்சி அழைத்து மகாநாட்டை நடத்தியதும, அது சமயம திரு வரதராஜுலு அய்யங்காரையும பார்ப்பனர்களையும் வைத்தும் பார்ப்பனரல்லாதார்களை திருப்தி செய்ய காங்கிரசின் கொள்கையிலேயே ஜாதிவித்தியாசம் இல்லை என்கின்ற ஒருகுறிப்பை சென்னையில் கூடும் காங்கிரசில் சேர்த்து விடுவதாகவும் அது முடியாவிட்டால் தான் காங்கிரசை விட்டு மறுபடியும் வெளியில் வந்து விடுவதாக வீரம் பேசினதும் இதற்குள் யாரும் மறந்திருக்க முடியாது.

அப்படிப்பட்டநாயுடு இதே திரு அய்யங்கார் அழையாமலே காங்கிரசிற்குள் வலிய நுழைந்ததும் கூட்டம் திரு நாயுடு மீது சந்தேகபட்டு காங்கிரசில் திரு நாயுடுவை மேடையில் கூட உட்கார வைக்காமல் அவமானப்படுத்தியதும், இதற்காக திரு நாயுடு இதே திரு அய்யங்காரிடம் "காங்கிரசின் கொள்கையில் ஜாதி வித்தியாசத்தை ஒழிக்கவேண்டும் என்று சேர்க்க திரு ஷண்முகஞ் செட்டியார் கொடுத்திருக்கும் தீர்மானம வெளியானால் நானே அதை எதிர்த்துதோற்கடிக்க உதவியாய் இருக்கின்றேன்" என்று உறுதி சொல்லி தன்னைசேர்த்துக்கொள்ளும்படிசெய்துகொண்டதும் யாவரும் அறிந்த ரகசியமேயாகும். இந்த நிலையில் திரு அய்யங்காரை நாயுடு புகழ்வதும் திரு அய்யங்கார் நாயுடுவைப் புகழ்வதும் இருவரும சேர்ந்து இந்தியப் பிரதிநிதியாய் ஜினிவாவுக்குச்செல்லும் திரு செட்டியாருக்குவேறு சிலர் நடத்த இருந்த வழியனுப்பு உபசாரத்தைக்கூட தடுத்ததும் ஒரு அதிசயமல்ல.

எனவே தேசியம் என்பது என்ன என்பதை வெளிப்படுத்த இதை எழுதுகிறோமே ஒழிய செட்டியாருக்கு உபசாரம் இல்லை என்பதற்கு இதை எழுதவில்லை.

திருவண்ணாமலை கோயில் வழக்கு.

எதிரிகளுக்கு தண்டனை.

கண்ணப்பருக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டது.

(நமது நிருபர்)

30ந் தேதி எப்பொழுது வரும் வரும் என்று எதிர் பார்த்தபடி வந்தது. காலை 11-மணிக்குள் கோயில் வழக்கு முடிவைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு ஆயிரக் கணக்கான மக்கள் மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்குமுன்பு கூடிவிட்டார்கள். மாஜிஸ்டிரேட் அவர்கள் பகல் 12-மணிக்கு வந்தார். வந்து ஜட்ஜ்மெண்டு இன்னும் எழுதி முடிவாகவில்லையென்றும், 1-மணி நேரத்திற்குள் சொல்வதாயும் கூறினார். ஜனங்கள் முடிவைத்தெரிந்து கொள்வதற்காக அங்கேயே வெயிலையும் புழுக்கத்தையும் பொருட் படுத்தாமல் கூடியிருந்தார்கள். மாஜிஸ்டிரேட் எப்பொழுது வாய்திறந்து சொல்வார் சொல்வார் என்று அவர் முகத்தை பார்த்துக்கொண்டேயிருந்தார்கள். நேரம் ஆக ஆகக்கூட்டம் அதிகரித்துக் கொண்டே யிருந்தது. போலீசாரால்கூட கூச்சலை அடக்க முடியவில்லை. பகல் 3-மணிக்கு மாஜிஸ்டிரேட் எதிரிகளை கூப்பிடும்படியாய் உத்திரவிட்டார். எதிரிகள் கூப்பிடப்பட்டு கூட்டினுள் ஏற்றப்பட்டார்கள். மாஜிஸ்டிரேட் எதிரிகளைப்பார்த்து தமிழில் பின்வருமாறு தம் ஜட்ஜ்மெண்டின் சுருக்கத்தை கூறினார்.

"வாதி கண்ணப்பரை அருணாசலீஸ்வரர் கோயிலுக்குள் சுவாமி தரிசனம் செய்ய விடாதபடி நீங்கள் இருவரும் (ராமநாத சாஸ்திரி குப்புசாமி குருக்கள்) கதவுகளை இரண்டிடத்தில் பூட்டி தடுத்தீர்கள். அதற்கு அவர்பக்கம் கௌரவமான சாக்ஷிகள் சாக்ஷியம் சொல்லியிருக்கின்றார்கள். கண்ணப்பரின்சாக்ஷிகளுள் ஒருவர் தாலூகாபோர்டு வைஸ் பிரசிடெண்ட், ஒருவர் போலீஸ் பிராஸிகியூட்டிங் சப் இன்ஸ்பெக்டர், ஒருவர் ஒரு ஜமீன்தார், மற்றவர் ஒரு ஹைகோர்ட் ஜட்ஜி. உங்கள் பக்கமோ சாட்சிகளெல்லாம்பார்ப்பனர்களும், இன்சால்வெண்ட் பேர்வழிகளும், கேடிகளும், புரோகர்களும், கோயில் சேவகர்களுமாக இருக்கின்றார்கள். உங்கள் சாட்சிகள் முன்னுக்குப் பின் முரணாகச் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் இருவரும் 341-வது செக்ஷன்படி குற்றவாளி ஆகின்றீர்கள். ஆகையால், உங்கள் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 100 அபராதம் விதிக்கின்றேன். உங்கள் இருவரிடமிருந்து வசூலிக்கப்படும் ரூபாய் 200-ல் ரூ. 100 வாதி கண்ணப்பருக்கு நஷ்டஈடாகக் கொடுக்கப்படும்"

என்றார். இம்முடிவைத் தெரிவித்தவுடன் பார்ப்பனர்கள் முகம் வாடிற்று. அவர்கள் இருந்தயிடம் தெரியாமல் ஓடிவிட்டார்கள். எதிரிகள் தம் அபராத தொகையைக் கட்டிவிட்டார்கள். பார்ப்பனரல்லாதார் திரு. கண்ணப்பர் கோர்ட்டிலிருக்கும்வரை கூட்டமாய் மகிழ்ச்சிப் பெருக்குடன் கூடி நின்றார்கள். 2-வது எதிரி குப்புசாமிக் குருக்கள் ஆத்திரம் பொறுக்கமாட்டாமல் அபராதத் தொகையைக் கட்டும்போது "எங்களுக்கு என்ன நஷ்டம், கோயில் பணத்தைதான் கட்டுகிறோம்" என்றார். உடனே கோர்ட்டில் இருந்த ஒருவர் "யார்வீட்டு பணமாயினும். அபராதம் அபராதம்தானே" என்றார். திருவண்ணாமலை முழுதும், அக்கிரகாரம் தவிர கண்ணப்பர் சுயமரியாதைப் போரில் வெற்றி பெற்றதைப் பற்றி மகிழ்கின்றது.

ஆதிதிராவிடர்கள் ஒரு கூட்டம் அன்றிரவு 9-மணிக்கு கூட்டி, திரு. கண்ணப்பரை வாழ்த்தி, அவருக்கு பூமாலை சூட்டி ரயிலடிக்கு வந்து உபசரித்தார்கள். ரயிலடியில் திரு. கண்ணப்பருக்கு ஜே! பனக்காலுக்கு ஜே! நாயக்கருக்கு ஜே! என்ற கரகோஷத்தினிடையில் திரு. கண்ணப்பர் திருவண்ணாமலையினின்றும் புறப்பட்டார். (தி. ன்.

இறந்தோரின் வயிறெல்லாம் பார்ப்பனரின் வயிறுகளா!

ஆலயங்கள் இருக்கவேண்டுமா?

‘தெய்வங்களின் யோக்கியதை’.

ராமன்.

கட்டுரை 3.

(ஞானானந்த சுவாமிகள் எழுதியது)

சதாநந்த ரிஷியானவர் விஸ்வாமித்திரனைப்பற்றிய வரலாற்றை மேலும் கூறிக்கொண்டு போகையில், திரிசங்கு என்னும் ஒரு மன்னவன் தன் உடலோடு சுவர்க்கம் போக எண்ணித் தன் குருவான வசிட்டனையடைந்ததாகவும், வசிட்டன் அவனுடைய கருத்துக்கு ஆச்சமயம் இணங்க மறுத்து விட்டதாகவும், பிறகு திரிசங்கு விஸ்வாமித்திரனை நாடியதாகவும் அதற்காக வசிட்டன் திரிசங்குவை நீசனாகும்படி சபித்ததாகவும் கூறினார்.

இங்கு நாம் திரிசங்கு அனுப்பப்பட விருப்பிய சுவர்க்கத்தின் யோக்கியதையையும், அங்குள்ள ஆசாமிகளின் யோக்கியதையையும், ஷை இரு முனிவர், ராமன் இவர்களின் யோக்கியதையையும் கொஞ்சம் கவனிப்போம்.

சுவர்க்கத்தில் இருப்பவர்கள் யாவரெனில் இந்தியாவில் உள்ளவர்கள் மாத்திரம் அன்னியர்களை கொடுமை செய்து லக்ஷம், கோடியாகப் பணம் செலவிட்டு ஆபாசங்கள் செய்து மனித உயிர், மாட்டு உயிர், ஆட்டு உயிர் இவற்றைக் கொடுமையான முறையில், அதாவது கழுத்தை முறுக்கி, வாயைக் கட்டி, தொண்டையை நெறித்துக் கொலைகள் செய்து சிவனையும், விஷ்ணுவையும், பிரமனையும், அவர்களது பிள்ளை குட்டிகள், வேலைக்காரர்கள் முதலிய தெய்வங்களையும் திருப்தி செய்தவர்கள் ஒரு சாரார். ஒரு நதியில், ஒரு குளத்தில் ஒரு குறிப்பிட்ட நாளில் சென்று முழுகியவரும் பார்ப்பனர் சொன்ன பிராயச் சித்தங்களை செய்து பார்ப்பனர்களுக்கு மட்டும் கொள்ளை கொள்ளையாகப் பொருள் வாரி விட்டு விட்டு, லக்ஷாதி லக்ஷ ஏழைகளைக் கஞ்சிக்கும், குடிசைக்கும், கந்தலுக்கும் கூட தவிக்க விட்டவர் மற்றொரு சாரார். மற்றபடி யாக கோவில்கள் கட்டியவரும், ஷை மும்மூர்த்தி முதலியவர்களைத் தோத்திரங்கள் செய்தவரும், சமணர்களையும் புத்தர்களையும் கழுவேற்றத் துணை புரிந்தவர்களும் குறிப்பிட்ட நாளில் ஒவ்வொரு வேளை சாப்பிடாதிருந்தவரும், ஷை தேவார திருவாசக திருவாய் மொழிகளை ஒரு தரம்பாடியோ கேட்டோ உள்ளவரும்; அங்குள்ளவர்களில் மற்றொரு சாரார். இவர்கட்காக உள்ள தாசிகளும் அங்கு உள்ளார். நான் மேலே வாயைக் கட்டித் தொண்டையை நெறித்து உயிரைப் போக்கியவர் என்று குறிப்பிட்டதன் காரணம், யாகத்தில் எந்தப் பிராணியையும் கத்தியால் வெட்டினால் பலன் வாராதொழியும் எனவிருப்பதை உணர்த்தவே. இன்று கும்பகோணத்திலும் அப்படித்தான் யாகத்தில் கொலை நடந்திருக்கிறது. வீரபத்திரனும் அப்படித்தான் தக்க யாகத்தில் புரோகிதனது கழுத்தைத் திருகினான். இப்படிப்பட்ட கன்னெஞ்சக் கொலை பாதகர்களும், வஞ்சகர்களும் அநீதிக்காரர்களுமே ஷை சுவர்க்கத்தில் நிறைந்திருப்பவர். இச்செய்தியின் உண்மைக்கு ஏராளமான ருசுக்கள் நம் சகல சாஸ்திரங்களிலும் புராணங்களிலும் ‘வேத’ங்களிலும் உள்ளன. இவையாவும் சிவாஜி மகாராஜா காலம் முடியவும்—அவருக்குப் பின் ஆங்கிலேயர் வந்து நெடுநாளாகி இன்றும் நம்பப்பட்டு வருகிறது,

‘கடவுளின் அவதாரம்’ என்று கூப்பிடப்பட்ட நமது ஆசாமியான ராமன் சுவர்க்கத் ‘தேவர்’களது காரியங்களை நடப்பிக்க வந்தவனாதலால் அவன் ஆக்ஷேபிக்கமாட்டானென்பது திண்ணம். இங்கு நமக்குள் ஒரு செய்தி விவாதிப்போம். இன்றையத்தேதிக்கு ஒரு குடியரசாங்கப் போக்குடைய ஒரு வெள்ளைக்கார மன்னன் ஹிந்துவாக மாறி, இந்தியாது வரிப்பணம் யாவற்றையும் நூறு லக்ஷம், ஆயிரம் லக்ஷம் என்று அஸ்வமேதயாகங்கள செய்வதில் செலவிட்டால் அல்லது பௌண்டரீக யாகம் செய்வதில் செலவிட்டால், அவருக்கு சுவர்க்கம் உண்டா இல்லையா? சுவர்க்கம் இல்லையென்றால், எப்படி இல்லை? இதுவரைக்கும் நடந்ததெப்படி? சுவர்க்கம் உண்டுதானென்றால் எப்படி அது தரப்படலாம்? இப்படி நடத்துகிற யாகங்கட்கு வந்து நின்று வரமும் தரும் ‘கடவுள்களை’ நீங்கள் பேய்கள் என்று கூசாமல் சொல்லலாமன்றோ? கடவுள்கள் என்று கூறுவது தவறு என்றும், அத்தகைய மும்மூர்த்திகளையும் பேய்கள் என்றும் கூறிவிட வேண்டுமென்றால், அவர்கள் படைத்தவையாயும் அவதாரங்கள் சாங்ஷன் செய்து நம்பவைத்தவையாயும் உள்ள சுவர்க்கங்கள் காலித்தன உலகமும் திருடர் உலகமும் ஆகுமா, ஆகாதா?

சுயமரியாதையுடையவராய் சர்வஜன சமத்துவக் கொள்கை யுடையவராய் தீங்கில்லாத புண்ணிய காரியங்களைச் செய்து வெகு கோடி பேர் நலனடையச் செய்வார்க்கு அல்லவோ உயர்ந்ததரமானதாயுமுள்ள சுவர்க்கத்தை உண்மையான யோக்கியக் கடவுள் அமைக்க வேண்டியிருந்திருக்கும்!

100 மனைவிமாரைத் தீக்குளித்துச் சாகவைத்தவனுக்கு சுவர்க்கம் கிடைக்கிறதாயின், குற்றமற்றவனுக்கு அது கிட்டாதாயின், நாம் ராமன் முதலிய அவதாரங்களால் அயோக்கியர்களது சுவர்க்கங்கட்கு லக்ஷியம் வைக்கும்படி செய்யப்பட்டோமன்றோ? ஆகவே, நாம் ‘ராமன்’ என்று பார்ப்பனனை அழைத்ததுபோல், மனிதர்களை ஏமாற்றுவதில் கைதேர்ந்தவர்களை நாம் ‘கடவுள்கள்’ என்கின்றோம் என்பது ஏற்படுகின்றதன்றோ? ஏமாற்றும் ‘அவதாரங்கள்’ எடுப்பனவாய், பாவக்கார ஆசாமிகளாய் இந்தியரை மட்டும் வஞ்சிக்க வந்திட்ட ஷை யார்கட்கு நாம் எந்த விதத்திலேனும் ஏகாந்தத்தேனும் வாயில் மண்ணள்ளிப் போட்டோமா? பின்னர் ஏன் நமக்கு தற்போதைய தண்டின நிலைமை வாய்த்திடும்படி அவை நம்மை ஏமாற்ற நெறியில் செலுத்தின?

அடடா! ராமனே தன் நாளில் ஒரு அஸ்வமேத யாகமும் சிசுக்கொலைகளும் நடத்தி எல்லாரையும் ஏமாற்றமான வழியில் சுவர்க்க நம்பிக்கை கொள்ள வைத்திட்டானே! அந்யாயம்! ராமனும் அவனது குருமாரான ரிஷிகளாலும், வேதத்தினாலும், மதத்தினாலும், திருவாய்மொழி தேவாரங்களாலும், ரிஷிகளாலும், முனிவர்களாலும், அவதாரங்களாலும், கடவுளாலும் சொல்லப்பட்ட பௌண்டரீக யாகங்களையும் நரபலி யாகங்களையும் செய்ய வொட்டாமல் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் தடுத்து, நம் கடவுள்களின் மனுஷக் கறி தின்ற வாயில் மண் அள்ளிப் போட்டு வருகின்றனரா இல்லையா? ஆகவே ராமனும் பண்டைய ஷை ரிஷிகளும் ‘வேத’ முறையும் யோக்கியமா? ஐரோப்பிய நாகரீக பாடம் யோக்கியமா? நம் சுவர்க்க நிலைமையும் அங்குள்ள ‘தேவர்’ என்ற மூடப் பாவிமார்களும் யோக்கியமா? அல்லது நமது சர்வஜன சமாசக் குடியரசாங்க அரசியல் நிலை முறை யோக்கியமா? அவதாரப் போக்கிரித்தனம் கண்டீர்களன்றோ!

திரிசங்குவைத் தொடர்வோம். திரிசங்கு தான் அனுப்பப்பட இச்சித்த ஸ்தலமாகிய ஷை சுவர்க்கத்தை வசிட்டன், திரிச்சங்கு மாண்டபின் அநுபவிக்கலாமென்றான். விஸ்வாமித்திரனே உடனே யாகம்வளர்த்து தேவர்களைக் கூப்பிடவும் அவர்கள் வாராததால், தன் தபோபலத்தினால் திரிச்சங்குவை மேலே அனுப்பினான். அப்பொழுது அவன் இந்திரன்முதலியோரால், நீசன்என்று கீழே தள்ளப்பட்டான். நண்பர்களே, பௌண்டரீக யாகத்திற்கு வரம் தரும இந்திரனும் தேவரும் அரைக்காசு பெறுமான மதிப்புடையவரா? என்கிறேன். மனுஷக்கறியும் பாம்புக்கறியும் ஆமைக்கறியும் யாகத்தைக் காரணமாய்க் கொண்டு தின்னும் இந்திரனும் சிவனும் விஷ்ணுவும் இவர்களது பெண் ஜாதி பிள்ளை குட்டிகளும், நீசர்கள் ஆவாரா, மாட்டாராவென்று கேட்கிறேன். இச்சுவர்க்கத்தை நீங்கள் ஒரு பைசாவுக்கு மதிப்பீர்களா என்று கேட்கிறேன்.

திரிச்சங்கு கீழே தள்ளப்பட்டு விழுங்காலையில், விஸ்வாமித்திரன் கோபங் கொண்டு திரிசங்குக்கு ஆகாயத்தில் ஒரு தனி சுவர்கத்தையும் வேறு தேவலோகமும் படைக்கப் புகுகையில், சோமபான கட்குடியர்களான மும்மூர்த்திகள் அஸ்வமேதத்திற்கும் பௌண்டரீக யாகத்திற்கும் சுவர்க்கம் தரும் அம்மூர்த்திகள் (சிவன், விஷ்ணு, பிர்மா) விஸ்வாமித்திரனது முன்னிலையில் வந்து நின்று, தமது உண்மையான நீசத்துவ இழிகுண முறைமைகளை மறந்தவராய், திரிச்சங்கு நீசனே யென்றும், அவன் தேவருடன் வசிக்காது, தனி சுவர்க்கத்தில்தான் வசிக்கலாமென்றும், விஸ்வாமித்திரனின்காப்பளிக்கும் குணம்மட்டும் நன்றென்றும சொல்லினர்! வசிட்டனிட்ட அர்த்தமற்ற சாபத்தை இம்மும்மூர்த்திகள் ஒப்புக்கொண்டனறன்றோ? இந்திரனும் தேவரும தீண்டாமையை ஒப்புக்கொண்டனரென்றாயிற்று இல்லையா?

திரிச்சங்குவை நீசன் என்று அக்காலம் ஒப்புக் கொண்டவர்களான வசிட்டனும், சிவனும், விஷ்ணுவும், பிரமனும், அவர்கள

து மனைவிகளும், திரிச்சங்குவின் பொருளற்ற நிலைமைக்கு, சரிதான் என்று சாக்ஷன் தரும் அடையாளமாய் மௌனமாய்க் கேட்டுக்கொண்ட, வர்ணாச்சிரமப்படி ஆண்ட—ராமனும் ஐரோப்பிய ஆட்சி நாளில் அதிக கௌரவத்தை அடைவதை, கௌரவிக்கப் படுவதை—நாம் பார்க்கவே, சட்டென சிரிப்பு வருகிறதா இல்லையா? தம்மினும் சுத்தவானான 'திரிச்சங்குவை எவ்வண்ணம் நீசனென்பது' என ராமன் கேள்வி கேட்டானா? இதுதான் வசிட்டனால் ராமனுக்கு கற்பிக்கப்பட்ட 'நீச' தத்துவ பாடம்! நினைவில் மாத்திரம், அருசையில், பொறுமையில் கறுப்பு என்ற நிறத்து வேஷமாத்திரத்தில் கற்பிக்கப்படுகிற ஒரு நிலைமையை, உண்மையான நீசநிலையென்றும், என்ன சுத்தமும் நாகரிகமும் இருப்பினும் நீச நிலைமையே தானென்றும் பண்டைய வாயாடி வம்பர்களுட் மௌனம் சாதித்துவிட்ட மண்டுகளும் ஒப்புக்கொண்டனர்! இந்த மதிகெட்ட நடத்தையையும் மனுஸ்மிருதியையும் பின் பற்றியவனாய், ராமன் தன் நாளில், தான் பல விடங்களிலும் தன் வாயினால் ஒப்புக்கொண்டுள்ளபடி பசுக்களைக் கொன்று தேவகாரியங்களையும் யாகங்களையும் செய்து விட்டு இன்றையத் தேதிக்கு வெட்கமில்லாமல் கோவிலுக்குள் உட்கார்ந்துகொண்டு, போக்கியன்போல, புளியோதரையும் பொங்கலுமட்டின்று, நகைகளணிந்து, விழா அனுபவித்து, வழைகளது தயருக்கு இடம் வைக்கிறானே!

அவன் ஊரார் வயிற்றில் அடித்து அஸ்வமேத யாகத்தை நடத்தியும், சுதேசமாதர்களை காதுகள், மூக்குகள், ஸ்தனங்கள், இவற்றை அறுத்த அநாகரிகத்தைமறந்துவிட்டா அவன் கோவிலுக்குள் இருப்பது? அவன் முத்திக்குத்தவம் செய்த ஒரு பாப்பனனல்லாதவனை கொலைபுரிந்திட்டு ஐரோப்பிய அரசாங்கத்தில் யோக்கியன் போல பெருமை அனுபவிக்கிறானே! வெட்கம்வேண்டாமா? இவனது செயல்களை படக்காட்சியில் உள்ளது உள்ளபடி காட்டி இவன் நம் கடவுள் என்றும் ஐரோப்பியரிடம் சொன்னால் அவர்கள் நம்மை எவ்வண்ணம் அவமதிக்கும்படியும் சிரிக்கும்படியும் ஆகும்!

இனிநான் ராமாயணத்தினின்றும்பிரிந்து, சிலர் ராமனைப்பற்றி பிரியமுடன் கூறும் ஒருவகை வசனத்திற்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. அவன அக்கால வழக்கப்படி நடந்தான் என்கின்றனர். அப்படியானால், 'அவதாரத்திற்கு'ப் புத்தி யெங்கே போயிற்று? அவதாரத்துக்கும் மனுஷனுக்குமவித்தியாசம்எங்கே? அக்காலத்தில் லக்ஷாதிலக்ஷமாக வெகுவிடங்களில் பௌண்டரீக யாகம் கொண்டாடப்படாமலா இருந்தது? இவற்றைவேதவேள்வியென்றுராமன நடத்தவிட்டதற்குகூலிகாவிலா? அவன் ஏதேனும் ஒரே ஒரு தர்மமாவது நாட்டினான் என்று எவரேனும் சொல்ல முடியுமா? அவனை அவதாரம் என்று சொல்ல சிலருக்கு புத்தி எப்படி இடங்கொடுத்ததோ? அரக்கரைக் கொன்றான் என்று எழும்பும் நாக்கை என்னுடைய அடுத்த கட்டுரை முக்காலே மூன்று வீசம் அடக்கி விடும் என்று

மதிப்புரைகள்.

'அனுபவ ஆசான்.'

'அனுபவ ஆசான்' என்னும் தமிழ்மாத சஞ்சிகை யொன்று வரப்பெற்றோம். அதன் ஆசிரியரும் பிரசுர கர்த்தரும் ஈரோடு ஸ்ரீ சங்கர் பிரசின் சொந்தக்காரான ஸ்ரீமான் டி. சங்காலிங்கம் ஆவர்

இச்சஞ்சிகையில் வெளியிடப் பட்டிருக்கும் விஷயங்களெல்லாம் பெரிய பெரிய பட்டதாரிகளாலும் போதனாமுறை பயின்றவர்களாலும் அத்துறையில் நீடித்த அநுபவம் பெற்றவர்களாலும எழுதப்பட்டவைகளாகவேயிருக்கின்றன. இம்முதற் சஞ்சிகையில் சுகாதாரம், கணிதம், இலக்கியம், பூகோளம், சாஸ்திரம் முதலியவைகளைப் போதிக்கும முறைகளைப் பற்றியும் ஆரம்ப பாடசாலைகளிலுள்ள குறைகளைப் பற்றியும் கட்டுரைகள் மிளிர்கின்றன

ஆரம்ப ஆசிரியர்கள் போதனா முறையில் சித்தி அடைவதற்கு இது போன்ற நவீன சஞ்சிகைகள் இன்றியமையாதன.

தமிழின் போக்கும், விஷயத்தை விளக்கும்வாசகமும் வாசகர்களின் மனதைஈர்க்கும் என்பதிலையமில்லை.

இதுபோன்றசஞ்சிகைதற்சமயம்இதைத் தவிர வேறு ஒன்றும் தமிழில் இல்லை இதற்கு வருடசந்தா ரூ 1—4—0 தனிப்பிரதி 0—2—0. வேண்டுவோர் "திரு. T. சங்காலிங்கம், ஆசிரியர், 'அனுபவ ஆசான்' ஈரோடு" என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

டைய ஆராய்ச்சி பூராவும் முடிந்தவுடன் அன்னவர் என்னுடன் தான் சேர்ந்துகொள்வர் என்பது எனக்குத் தெரியும். ஆனால் ஒன்று சொல்வேன். ராமன் கொன்ற அரக்கரையும் அசுரரையும் கேட்பின அவர்கள் இந்த அரிய பௌண்டரீக யாகக் கார ஆசாமிகளை என்ன பேர் வைத்து கூப்பிட்டிருப்பர் என்று தெரியும்.

விப்வ வருடத்திய சுயமரியாதைப் பஞ்சாங்கம்.

திருச்சி மணிவாசகத் தமிழகத்தார் அன்பு கூர்ந்தெமக்கு அனுப்பிய சுயமரியாதைப் பஞ்சாங்கம் வந்தனத்துடன் வரப் பெற்றோம். இதில் ஸ்ரீமான் நாயக்கருடைய திருவுருவப் படமும், ஒவ்வொரு மாதத்துக்கு ஒவ்வொரு தாளாக பன்னிரண்டுதாள்களும், தமிழ்த்தேதி, ஆங்கிலத்தேதி, திதிகள், நட்சத்திரங்கள், விசேஷதினங்கள், அமிருதாதியோகங்கள், ராகு குளிகை காலங்கள், சுயமரியாதை வாக்கியங்கள், தலைவர்களைப் பற்றிய புகழுரைகள் முதலியன பொன்னாபரணத்தில் மணிகள் விளங்குவது போல் மிளிர்கின்றன.

இப் பஞ்சாங்கம் உயர்ந்த கடிதத்தில் மதராஸ சோல்டன் கம்பெனியில் அச்சடிக்கப் பட்டு குறைந்த விலையாகிய இரண்டணாவுக்கு வெளியிடப் பட்டிருப்பதை நோக்குமிடத்து திருச்சி மணிவாசகத் தமிழகத்தார் லாபங்கருதி இப்பணி செய்யவில்லை என்றும் சுயமரியாதைப் பிரசாரத்தை முன்னிட்டே செய்தனரென்றும் உறுதி கூறுவோம். அன்னவர்க்கு மற்றுமோர் முறை எமது மனமார்ந்த வந்தனம்.

ஆநந்த குணபோதினி.

மூன்றும் வருடம்.

இது போன்ற நவீன மாதாந்தர சஞ்சிகை இது வரை வெளிவரவில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கிலமாத சஞ்சிகைகளை யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகிறது. எல்லாம் கருத்து, எல்லாம் களிப்பு, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய, செவிக்கினிய அலங்கார வசன மழை. ஒவ்வொரு மாதமும் 56 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிக்கை இது ஒன்றேதான். 5000—சந்தாதார்கள்உள்ளது. வருடசந்தா ரூ. 1, வெளி நாடு ரூ. 1—4—0 மாதிரி இனாம். இது பெரிய ஆஸ்தி. உடனே எழுதுங்கள்.

'ஆநந்த குண போதினி' ஆபீஸ்
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

ஐந்து (5) குடும்ப ஔஷதங்கள்.

சுயமான கஸ்தூரி தோலா 1-க்கு விலை 1-ம் நெ. ரூ. 75.
2-ம் நெ. ரூ. 50. 3-ம் நெ. ரூ. 40. 4-ம் நெ. ரூ. 35.
குங்குமப்பூ தோலா 1-க்கு விலை ... ... ரூ. 4.
கோரோஜனை ,, ,, ... ரூ. 19.
பச்சை கற்பூரம் ,, ,, ... ரூ. 4.
காபூல் பெருங்காயம் 10 தோலா டப்பி 1-க்கு ரூ. 1.
காசி வயிரவர் பிரசாதக்கயிறு 100-க்கு விலை 1-ம் நெ. ரூ. 3.
2-ம் நெ. ரூ. 2½. 3-ம் நெ. ரூ. 2.

உத்திராக்ஷ ஜெபமாலைகள், கண்டிகள், கெவுடு தனி மணிகள், பித்தளைப் பாத்திரம், பட்டு தினுசுகள் சகாய விலைக்கு அனுப்பப்படும். விலை ஜாபிதா இனாம்.

மானேஜர், **பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.**

கடவுளை வணங்க பார்ப்பனத்தரகர் வேண்டுமோ

மதிப்புரைகள்.

(1) திரிசிரபுரம் உறையூர் சைவ சித்தாந்த பிரசாரம் திருவாளர் தே. பெரியசாமி பிள்ளையவர்களால் இயற்றப் பட்ட ஸ்ரீசமச்சிவாய மூர்த்தி நான்மணிமாலை என்னும் புத்தகம் ஒன்று வரப் பெற்றோம். அது சைவ சமயத்திற்குரிய நூல்களின் நுண்ணிய அரும் பெரும் கருத்துக்கள் சொற்சுவை பொருட்சுவைகள் மிளிர படிப்போர் மனதை ஈர்க்கும்படியான பாக்களாக ஆக்கப் பட்டிருப்பதோடு அன்னை, பிதா, குரு, தெய்வம், என்கிற கோடியில் மூன்றுவதான குருவையே தெய்வமாக வழிபடும் மார்க்க மாகிற ஆசார்ய நிஷ்டையை அநுஷ்டான பூர்வகமாக தமதனுபவ விதத்தை ஒவ்வொரு சைவ சமயத்திலும் நன்கறிந்து அநுபவிக்க தக்கதாகவும் இருப்பதால் ஒவ்வொரு சைவ அபிமானிகளுக்கும் இது இன்றியமையாததாகும். விலை புத்தகம் 1க்கு 6 பைசா.

வேண்டுவோர் "திரு. தே. பெரியசாமி பிள்ளையவர்கள், சித்தாந்த சைவப் பிரசாரகர், மீனாக்ஷி சுந்திர வித்யாசாலை தலைவர், உறையூர், திருச்சி" என்ற விலாசத்துக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

சோளர் சரித்திரம் முதற் பாகம், கள்ளர் சரித்திரம்.

(2) ஷை இரண்டு புத்தகங்களும் வரப்பெற்றோம். இவைகளையியற்றினர் திருவாளர் பண்டிதர் மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள். இவரது கல்வி திறமையும் பழந்தமிழ் ஆராய்ச்சி திறமையும் நந்தமிழ் உலகத்தில் அறியாத மக்கள் இரார். அன்னவர் தற்காலம் நமது அருந்தமிழ் மக்களுக்கு ஆற்றுந் தொண்டினியல்பும் நமது பண்டைநூல்களினியல்பும் நமது தமிழரசர் தமிழ்மக்கள் இவர்களின் இயல்பும் இன்ன தன்மைஎன்பது அதை வாசித்த மக்களுக்கே தெற்றனவிள்ளும். ஆகையாலிவைகளை யறிந்தொழுக எண்ணும் ஒவ்வொரு தமிழ் மக்களும் இவைகளை அவசியம் வாங்கிப் படிப்பதற்குறியதாகும். கிடைக்கும் இடம்:- மு. வேங்கடசாமி நாட்டார், தலைமைதமிழாசிரியர், பிஷப்ஹீபர் காலேஜ், திருச்சி.

அறிக்கை.

எங்களிடம் பிரான்ஸி நல்ல ரகதுள்ள வெள்ளி ஜரிகை மராக்குகளும், பாம்பே குவாலட்டி மேல் கண்ட மராக்குகளும், நூரத் மாராக்குகளும் கைவசமிருக்கிறது. உள்ளூர் ஜவுளி தினுசுகளும் இருக்கிறது. விலைஜாப்தா வேண்டியவர் எழுதினால் அனுப்பித்தருகிறோம்.

சி. லிங்கி செட்டி,
எஸ். வெங்கிட்டராம செட்டி,
ஜவுளி அண்டு ஜரிகை வியாபாரம்,
கோயமுத்தூர்.

மூன்றுவது வருஷம்! மூன்றுவது வருஷம்!!
தமிழ் மாத சஞ்சிகைகளில் முதன்மை பெற்றதும், பல்லாயிரக்கணக்கான சந்தாதார்களுடையதும், தமிழ் தலைவர்கள் எல்லோரும் போற்றி வருவதுமான

ஆனந்த விகடன்

இதற்கு மூன்றும் வருஷம் பிறந்து விட்டது. இதில் மாதா மாதம் பல பெரிய மேதாவிகளால் எழுதப்படும் அரிய கட்டுரைகள் வெளிவரும். தேச நன்மைக்காகவும், தமிழரின் சுயமதிப்புக்காகவும் அரும்பாடுபட்டு எவருக்கும் அஞ்சாமல் தனது அபிப்பிராயத்தை சுயமே வெளியிடும் தமிழ் மாதப் பத்திரிகை இது ஒன்றேயாகும். இன்னும் விநோதமான விஷயங்களும், விகடப்பேச்சுகளும், வாழ்க்கையின் மர்மங்களும், வியாபாரக்குறிப்புகளும், வைத்திய விவசாயாதிகளும் அனுபவசாலிகளால் வரையப்பட்டு இப்பத்திரிகையில் இடங்கொள்கின்றன. இந்தியா, பர்மா, சிலோன் முதலிய விடங்களுக்கு வருட சந்தா தபால் கூலியுள்பட ரூ.1-0-0 வெளி நாடுகளுக்கு முன்பணம் ரூ 1-4-0. மாதிரி காப்பி இனும்!

விலாசம்:— 'ஆனந்த விகடன்' ஆபீஸ்,
244, தங்கசாலை வீதி, மதராஸ்
தந்தி விலாசம்:— "விகடன்" சென்னை. டெலிபோன் 3311.

கவனியுங்கள்! நல்ல லாபம்!

PHOTO HAND CAMERA



ரொம்பவும் குறைந்த விலை ரூபா. 2—15—0

நண்பர்களே! மேலே சொல்லிய காமிரா லண்டனில் புதிதாகச் செய்யப்பட்டது. எக்காலத்திலும் தெளிவான போடோபிடிக்கலாம். இந்த காமிராவை வாங்கி நூறுநூறாகப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டனர். போடோவின் அளவு 3½ X 2¼ ஆகும். காமிராவைச் சேர்ந்த எல்லா சாமான்களுடனும் அனுப்பப்படும். சிறிது நாளைக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை ரூ. 2—15—0 குக் கொடுக்கப்படும். உடனே எழுதுங்கள்.

கானடியன் வாட்சு பீபிள், ஜி. டி. மதராஸ்

போட்டோ ஆல்பம்.



நேயர்களே! இந்த ஆல்பத்தில் பன்னிரண்டு விதமான ப்ரெஞ்சு லேடிகளின் படுக்கையறைப் போட்டோக்கள் பார்க்க வெகு சுந்தரமாக வைககப்பெற்றிருக்கின்றன. பாரிஸ் மா நரின் லீலா விநோதமும் ஒப்புயர் வற்ற ரூபலாவண்யமும் பலதினுசு சாயல்களில் கண்டு ஆனந்திக்கலாம். ஒரு ஆல்பம் தருவித்தவர் உடனே திரும்ப ஆறு ஆல்பங்கள் அனுப்புங்கள் எனக் கடிதம் எழுதுகிறார்கள். நீங்கள் உடனே முந்துங்கள். விலை ரூ 2-12-0

தி. கிருஷ்ணா எஜன்சி, 26 வெள்ளாளத்தெரு, வேப்பேரி மதராஸ

கக்குவானுக்கு.

ஹரிதாசர் செய் மிகவும் கைகண்டதும், பிரசித்தி பெற்றதும். 4-5 நாளில் சுகமாகும். 3 மாதம் கஷ்டப்பட வேண்டியதில்லை. விலை ரூ. 1. தபால் வி. பி. 5 அணா.

காலராவுக்கு.

வாந்திபேதி, விஷபேதி, அஜீர்ணபேதி முதலிய வியாதிகளுக்கு ஹரிதாசர் காலரா துளி மருந்து 20 வருஷமாக அநுபோகப்படி மிகவும் கைகண்டது; தவறாதது. புட்டி ரூ. 1-4.

டாக்டர் எச். தாசர், பி. எ., எல். டி., எம். டி. எஸ்ஸி,
தாசர் சித்த வைத்தியசாலை, தின்னனூர் R. S.

7-ம் பக்கத் தொடர்ச்சி.

ஒரு பார்ப்பனக் கூலிக்கு திவான் பகதூர் கிருஷ்ண நாயரைப்பற்றி குறை கூற என்ன யோக்கியதை இருக்கின்றது? முன்பொருகால் டாக்டர் நாயர் ஒருவரைப்பற்றி கூறியதுபோல், திவான் பகதூர் கிருஷ்ண நாயரின் மிதியடி அவிழ்க்கும் யோக்கியதையாவது இந்த மின்சார வைத்தியருக்கு உண்டா? 18 ஆண்டுகளுக்குப் பிற்பாடு ஒரு பார்ப்பனரல்லாதார் அதுவும் மிக கௌரவம் வாய்ந்த ஒருவர், நாணயத்தில் சிறந்த பெரியார் ஒருவர், சட்டமெம்பர் உதிதியோகம் பெற்றதற்காக மகிழ்ச்சியுறுகின்ற காலத்து இவ்வைத்தியர் பார்ப்பன வெறிபிடித்துக் கண்டபடி உளறினால் நாம் பொறுத்துக் கொண்டிருக்கமுடியுமா? எனவே இத்தகைய பார்ப்பனக்கூலிகளின் பிரசாரத்தை ஒடுக்கவேண்டியது நம்மனோரின் கடமையாகின்றது. ஆகையினாற்றான் நாம் இன்று இத்துணை எழுத நேர்ந்தது என்பதை அறிவுறுத்துகின்றோம்.

சென்னை மாகாண

9-வது ரெட்டிகுல மகாநாடு ஒசூர்.

20—4—28-உ ஒசூர் கோவாபரேடிவ் யூனியன் ஆபீசில் கூடிய ரெட்டிகுல வரவேற்பு கமிட்டி மீட்டிங்கில் ஷை மகாநாட்டை ஒசூரிலேயே கூட்டுவதெனறும் இந்த மகாசபையை கூட்ட சீக்கிரம் பணம் வசூல் செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் தீர்மானித்து அதற்காக ஒரு கமிட்டி நியமனம் செய்தும் மகாநாடு கூடும் தேதி பின்னால் தெரிவிக்கப்படுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

நஞ்சா ரெட்டிகாரு,
பிரசிடெண்டு.

நாலு தலைமுறை பரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழனி சித்தவைத்தியசங்க அமைச்சர்!! தமிழ் சித்தவைத்திய கான்பரன்ஸ்களில் முதல் தர தேவ ஔஷதங்களென முதல்தர தங்கமெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்!!! முப்பு சேர்ந்த மருந்துகள்.

பழனி. சி. எம். சாமி

குரு தாளகபஸ்பம்-இருமலுக்கு

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சரி 9 வித காசமும் அவசியம் தீரும். 48 நாள் பஸ்பம் ரூ. 32. 24 நாளைக்கு ரூ 16. 6 நாள் புட்டி ரூ. 4. வி. பி. சார்ஜ் வேறு

ஒரு பிரபல டாக்டர் சொல்வதைக் கவனியுங்கள்,

நான் தங்களிடமிருந்து தாளக பஸ்பம் அரை தோலாவும், அயச்செந்தூரம் அரைத் தோலாவும் தருவித்து அதைசுவாசகாச முடையவர் ஒருவர் இவ்வியாதியில் ரொம்பவும் கஷ்டப்பட்டுக்கொண்டு இனி பிழைப்பது அரிது என்று அழுதார். அவருக்குத் தங்களின் தாளக பஸ்பத்தைக் கொடுத்ததில் சுவாசகாசமென்னும் வியாதி தொலைந்து விட்டது. வியாதி சொஸ்தமான பின்பு அயச்செந்தூரம் பலம் உண்டாவதற்காகக் கொடுத்து வந்தேன். மேற்படியாருக்கு பூரணபழையபலம்ஏற்பட்டுவியாதியஸ்தர் ரொம்பவும் தங்கள் மருந்துகளின் பெருமையையும அருமையான குணத்தையும் சொல்லி சந்தோஷப்படுகிறார். தங்கள் மருந்துகள் சித்தவைத்திய முறைப்படிக்கு முடித்த பெருமுறை மருந்துகள் என்று ரொம்பவும் சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்

ஆயுள்வேத டாக்டர் எம். கிருஷ்ணசாமி நாயுடு,
அலங்கம் (வட ஆற்காடு) 16—3—27

பழனி சி. எம். சாமி குரு அப்ரேக் செந்தூரம் நீரிழிவுக்கு கைகண்டது புட்டி 15ரூ

„ „ நாகபஸ்பம் மூலத்திற்கு புட்டி 1க்கு 4. ரூ.

பிரமேக நிவாரணி வெள்ளை வெட்டை வியாதிக்கு புட்டி 1க்கு 2. ரூ.

பினங்கு முதலிய அன்னிய தேசவாசிகள் ரூபாய் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.

ஏராளமான நற்சாட்சிகளை கேட்லாக்கில் பார்க்கலாம்.

சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்

C. மலையப்பசாமி நித்தியானந்த வைத்தியசாலை
பழனி, S. I.

சென்னைபிராஞ்சுஆபீஸ்:—முருகன் ஏஜன்ஸி43அரமனைக்காரத் தெரு ஜி.டி.சென்னை

டிடக்டாவ்

அல்லது

துப்பு இரகசியம்

அறியும் கருவி.



இதன் உபயோகம் யாதெனில் இருப்பிடத்திலிருந்தே உம்முடைய காதலியையும் அவள் செய்யும் காரியங்களையும் அவள் அறிந்து கொள்ளாமலேயே இதன்மூலமாய்ப் பார்க்கலாம். உம்முடைய பின்னும் உமக்குத் தெரியாமல் நடக்கிறதை ஏககாலத்தில் இரண்டையும் இதன் மூலமாகக் கண்டுகொள்ளலாம். உமக்குத் தெரியாமல் உம்மைப்பின்தொடர்ந்து வருபவரை நீர் திருப்பிப்பார்க்காமலே இதன் மூலமாய்க் கவனித்துக்கொள்ளலாம். இனனும் பலவித இரகசியங்களை இதன் மூலமாய் ஒருவரும் தெரிந்துகொள்ளாமல் கண்டு பிடிக்கலாம்.

இத்துடன் பல கலர்களால்தயாரித்த படுக்கை அறையின் 4 அழகிய போட்டோ படங்களுடன் ஷை கருவி விலை ரூபா 2 தான்.

மலாய் நாடுகளுக்கு முன்பணம் வந்தாலன்றிக் கண்டிப்பாய் வி. பி. யில் அனுப்பமுடியாது.

பாரிஸ் எம்போரியம் ஜி, டி, மதராஸ்.

ஒருமணி நேரத்தில் குணம்! ஆச்சரியமானது!!

மன்மத ஸ்தம்பன குளிகை.

குணம் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனாமாகக் கொடுக்கப்படும்.

நேயர்களே! இந்த ஸ்தம்பனக் குளிகையானது முறையாகச் செய்யப்பட்டு பல பிரமுசர்களாலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. பலர் பலபெயரிட்டு விளம்பரப்படுத்தியிருக்கும் மாத்திரையை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம். ஆனல் சொல்லியபடி நீங்கள் குணத்தைக் கண்டிருக்கமாட்டீர்களென்பது நிச்சயம். எங்கள் ஸ்தம்பனக்குளிகை அப்பேர்ப்பட்டதல்ல. அநுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். இந்த மாத்திரையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், ரோஜா புஷ்பம்போன்ற முக தேஜஸும், அழகும், தைரியமும் உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்துவதில் இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை. உத்தரவாதம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூ. 2. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். வெளிநாடு நேயர்கள் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும்.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி, தபால்பெட்டி 119, ஜி. டி. மதராஸ்.

ஞான திருஷ்டி.

இப்புத்தகத்தில் இறந்தவர்களுடன் பேசுதல், காணமல் போனதைக் கண்டெடுத்தல், இருக்குமிடமிருந்தே தூர தேசங்களைப் பார்த்தல், மனிதர்களின் திரிகால வர்த்தமானங்களை அறிதல் முதலியன எழுதப்பட்டுள்ளன. "ஞான திருஷ்டிக் கண்ணாடி" என்னும் உபயோகிக்கும் கருவியுடன் விலை ரூ. 1—8—0. தபால் கூலி பிரத்தியேகம். பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளியூர் வாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும். ஆரியன் ஸைகிக் இன்ஸ்டிட்யூட், சௌகார்பேட்டை, மதராஸ்.

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

மிஸ் மேயோ எழுதியுள்ள "இந்தியத்தாய்" என்ற அவதூறுப் புஸ்தகத்திற்குநேர் மறுப்பு நூல் தமிழில் வெளிவந்துவிட்டது.

மாயா மேயோ

(வ. ரா. எழுதியது).

மிஸ் காதரைன் மேயோ எழுதிய "இந்தியத்தாய்" என்ற நூலுக்கு "மாயா மேயோ' சரியான மறுப்பாகத் தமிழில் எழுதப் பெற்றுள்ளது. மேயோவின் நூலை "சாக்கடைப் பரிசோதகரின் யாதாஸ்து" என்று மகாத்மா காந்தி சொன்னார். கவி ரவீந்தி நாத் டாகூர் அவளுடைய நூலைப் "பொய்க்களஞ்சியம்" என்று கூறினர். டாக்டர் அனிபெசண்டு "இழிந்த கருத்துடன் இந்தியரைத் தூற்றும் கெட்ட நூல்" என்றுரைத்தார் ஸ்ரீ டாக்டர் பி. வரதாராஜுலு நாயுடு "இந்தியத்தாய்" எழுதியவரைக் "குப்பக்காரி" என்றும் "நாடோப்பெண்" என்றும் அழைத்தார். மேயோவின் அவதூறுக் களஞ்சியத்தில் காணப்படும் பொய்களும், வஞ்சக எண்ணங்களும், பாதி உண்மைகளும், மற்றுமுள்ள ஏனைய ஆபாசங்களும் "மாயா மேயோ"வில் எடுத்துக் காண்பிக்கப்பெற்று, தக்க மறுப்புகளும், நேர்மையும் நேர்த்தியும், உண்மையும் கொண்ட சமாதானங்களும் அளிக்கப் பெற்றிருக்கின்றன. மேனாட்டின் நாகரீகமும் உலகப்போக்கும் "மாயா மேயோ"வில் நன்கு ஆராயப்பட்டிருக்கின்றன. உயர் வாழ்வுக்கும், விடுதலைக்கும் ஏற்ற சாதனங்களும் இந்நூலில் விவரமாகக்கூறப்பட்டிருக்கின்றன. மறுப்புகளுக்குத் தக்க சான்றுகள் காண்பிக்கப் பெற்றிருக்கின்றன. நகைச்சுவையும், ஆராய்ச்சியும் விடுதலைத் தத்துவங்களும் சூத்திரங்களும் இந்த நூலில் மலிந்துகிடக்கின்றன. அடிமைத் தனத்தினின்றும் விழிப்புற்று விடுதலைபெற்ற உலக நாடுகளைப்பற்றிய வரலாறுகள் பலவற்றை இந்நூலில் காணலாம். தன் மதிப்பையும் தேச பக்தியையும் ஊட்டி மிஸ் மேயோவுக்கு ஒவ்வொரு விஷயத்திலும் சாட்டையடி கொடுத்து அவளுடைய அவதூறு நூலுக்கு சரியான மறுப்பாக பக்ஷபாத மில்லாத ஸ்ரீ வ.ரா. அவர்களால் எழுதப்பெற்ற இந்த "மாயா மேயோ"வை ஒவ்வொரு இந்தியரும் வாங்கி வாசித்தல் வேண்டும்.

சுமார் 400 பக்கங்கள் கொண்ட பெரிய புஸ்தகம், நேர்த்தியான அச்சு. விலைரூபாய் 2—0—0 தபால் செலவு வேறு.

இந்த நூல் உங்கள் ஊரிலுள்ள புஸ்தக ஷாப்பில், இருக்கிறதா வென்று பாருங்கள். இல்லாவிட்டால் கீழ்க்கண்ட விலாசத்துக்கெழுதுங்கள்.

வாலன் புஸ்தகசாலை, 244, தங்கசாலை வீதி, மதராஸ்.

தந்தி விலாசம்:—"விகடன்" சென்னை. டெலிபோன் நெ. 3311

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ரவர்களின் சொற்களால் அறியலாம். நடுநிலைமை தவறிய மனத்தவர் சொற்களில் நன்மை அமைந்து கிடக்கும். இதனை "சொல்லில் குற்றமில்லாமலிருப்பது நடுவு நிலைமையாகும். அதுவும், மனத்திற்குற்ற மில்லாமலிருந்தால்தான் உண்டாகும்," என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

இன்னும் நடுவு நிலைமைதவறாததன்மை வணிகர்களுக்கு மிகவும் இன்றியமையாததாகும் வணிகர்களே நாட்டின் செல்வவளத்திற்குக் காரணர்களாயிருப்பினும், சிலர் பகற்கொள்ளைக்காரர் என்று சொல்லுவதற்குத் தகுதியுடையவர்களாயிருக்கின்றார்களென்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். சிலர் மற்ற வணிகர்களிடம் இல்லாத பொருள் தம்மிடம் மிகுதியாகத் தங்கியிருக்குமாயின், அப்பொழுது இதுதான் காலமென்றெண்ணி கொள்ளைவிட, மூன்று நான்கு மடங்கு விலையேற்றி ஏழை மக்கள் பால் விற்றுப் பொருள் திரட்டுவதைக் காண்கின்றோம். இது வணிகத்தின் திறமை யென்றாலும் நடுநிலைமையாகாது. மற்றுஞ் சில வனிகர் தாங்கள் வாங்கும் போது கொடுப்போரை ஏமாற்றி, நிறையில் மிகுதியாகவும், விலையிற் குறையாகவும், வாங்குகின்றனர். பிறரிடம் விற்கும்போது வாங்குவோரை ஏமாற்றி, நிறையிற் குறைவாகவும், விலையில் மிகுதியாகவும் கொடுக்கின்றனர். இவ்வாறு செய்வதும் நடுநிலைமை தவறிய செயலாகும். இங்ஙனம் நடு நிலை தவறி நடக்கின்றவர்களின் வணிகம் நீடித்து நில்லாதழியும் நடு நிலை தவறாத வணிகர்களின் வாணிகமே மேலும் வளர்ச்சியடையும். ஆகவே வணிகர்கள், பிறர் பொருளையும், தம் பொருளைப்போலக் காப்பாற்றிக் கொள்ளுவதும் மிகுதிப்படாமல், கொடுப்பதும் குறைவுபடாமல் வாணிகம் செய்தலும்வேண்டும். இதனை "பிறர் பொருளை தமது பொருளைப்போலக் காப்பாற்றிச் செய்வாராயின் வாணிகஞ்செய்வார்க்கு வாணிகம்பெருகும்." என்று திருவள்ளுவர் வணிகர்களுக்கென்று தனியாகக் கூறியிருக்கிறார்.

ஆகவே மேற்கூறியவற்றால், எந்த நிலையிலிருப்பவர்களும் நடுவு நிலை தவறாமல் நடக்கக் கடமைப்பட்டிருக்கின்றார்கள் என்றும், நடுவு நிலையில் நடப்பதனாலேயே நன்மை யுண்டாகுமென்றும், நடுவு நிலை தவறி நடப்பவர்கள் தீமை யடைவார்களென்றும், எத்தகைய உயர்வுவந்த காலத்திலும் நடுவு நிலைமை தவறாமலிருப்பதே அறிவுடைமையும், பெருந்தன்மையும், பெறுதற்கரிய பெருஞ் சிறப்புமாகுமென்றும் அறிகின்றோம்.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

புகழ்ந்தாலும் சமயம் வந்தகாலத்துச் சரியானபடி அவருக்குப் பூசனைகள் செய்யப் பிரம்பை ஊறப்போட்டு வைத்திருக்காமலிரார் என்பதை உணரட்டும். அப்பூசனைக்குரிய காலம்சேய்மையில்லை; நெருங்கி வந்துவிட்டதென்றே நாம் நினைக்கிறோம். (தி—ன்.)

பிரயாணத்துக்கு வேண்டிய கம்பளி, போர்வை, ரட்டுகள்.

எங்களிடத்தில், டிராவலிங் (Rugs) ரட்டுகள், சிங்கிள், டபிள் கலரில் திக்காயும் பார்ப்பதற்கு பான்சியாயும், 60 X 90 அங்குல சயிசில் ரூ. 6—8—0 முதல் ரூ 25 விலை வரையில் இருக்கின்றன. மலை கூலியாள்களுக்கு வேண்டிய கருப்பு கம்பளிகளும் இருக்கின்றன. வேண்டியசாக்குகளுக்குக்கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதுங்கள்.

ஷா. தஞ்சிஜாவர்சந்த்,
தாரிவால் ஏஜன்ஸி,
சிக்கபேட்டை, பெங்களூர் சிட்டி.

மதுரை இராமநாதபுரம் ஜில்லா முதலாவது இளைஞர் மகாநாடு.

மேற்படி மகாநாடு, மதுரையில், நாளது-௵ மே-௴ 19, 20-உ களில், நம் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை முதன் முதல் ஸ்தாபித்தவரும், சென்னை கார்ப்பொரேஷன் கௌன்சிலருமான ராவ் பகதூர் டாக்டர் ஸி. நடேச முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெறும்

திருவாளர் எஸ். இராமச்சந்திரன் சேர்வை அவர்கள். பி. ஏ., பி. எல். (பிரசிடெண்டு, தாலூகாபோர்டு, சிவகங்கை) வரவேற்புக்கழகத் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

வரவேற்புக்கழக அங்கத்தினர் கட்டணம் ரூ. 2—0—0 ஆகவும், பிரதிநிதிக் கட்டணம் அணா 0—3—0 ஆகவும் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.

மகா நாட்டுக்கு பிரதிநிதிகளாக வர விரும்புவோர் 'மதுரை, மணி நகரம், பார்ப்பனரல்லாதார் வாலிபர் சங்கக் காரியதரிசி' அவர்களுக்கு மே-௴ 10-ம் தேதிக்குள் அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மகாநாட்டில் கொண்டு வரப்போகும் தீர்மானங்களையும், விஷயங்களையும் மே-௴ 12-ம் தேதிக்குள் வரவேற்புக் கழகத்தலைவருக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேற்படி தேதிக்குப் பின் வரும் விஷயங்கள் கவனிக்கப்படமாட்டா.

கே. ராமசாமி, காரியதரிசி.

நமது வைத்தியசாலை பழனியில் ஸ்தாபித்து 26-வருஷமாகிறது. பழனியில் முதன் முதல் ஸ்தாபிக்கப்பட்டு
உலகமெங்கும் நல்ல பேர் எடுத்த வைத்தியசாலை இதுவேயாகும்.
வைத்திய சாஸ்திரத்தில் மகாநிபுணர், முப்புவைக் கண்டுபிடித்தவர்.

ரிஜிஸ்டர்
TRADE MARK

இம்மருந்துகள் முதல்தரமான தேவ ஔஷதங்களென்று 1923-ல் திருநெல்வேலியில் கூடிய சித்தர் ஆயுள் வேத மெடிகல் கான்பரன்சிலும் 25—8—23-ல் சென்னையில் நடந்த மேற்படி கான்பரன்ஸ் அண்டு எக்ஸிபிஷனிலும், தங்கமெடலும் "வைத்திய ஆசிரியர்" என்று பட்டமும் பெற்றவர். ஒவ்வொரு மருந்துக்களுக்கும் கணக்கற்ற நற்சாக்ஷிப்பத்திரங்கள் வந்தவண்ணமாயிருக்கின்றன. அவற்றுள் சில அடியில் காண்பன.

தாளகபற்பம்.

இருமலுக்கு அனுபத்தில் கைகண்டது.
உத்திரவாத முள்ளது. புகையது.

நமது பற்பம் முப்புவால் செய்ததால் நெருப்புக்கு ஓடாது, மற்றவர்கள் பற்பத்தை நெருப்பில் வைத்தால் புகைந்து ஓடிவிடும்.

எவ்வளவு நாட்பட்ட ரத்தகாசம், க்ஷயம், ஈளை, இருமல், கஷ்டசுவாசம், கோழை, கபக்கட்டு, பீனிசம், ஜுரம் இருந்தாலும் சரி 8 வித காசமும் இதில் அவசியம் தீரும். 20-நாள் மருந்து அனுபான சூரணத்துடன் விலை ரூ. 25—0—0 ஏழைகளுக்கு ரூ. 12—8—0.

நற்சாக்ஷி:—நமது தாளகபஸ்பம் 6 நாளைக்குள் ரத்தகாசத்தால் உயிரைக் காப்பாற்றியதாக சொல்வதை கவனியுங்கள்.

நான் 8 மாதகாலமாய் ரத்தகாச வியாதியால் கஷ்டப்பட்டு ஒவ்வொரு நாளும் சாயந்திரம் 6 மணிக்கு இருமல் வந்துவிடும். ராத்திரிகளில் சாதம் சாப்பிட்டால் அதிக உபத்திரவத்துடன் வாந்தியாய்விடும். உடனே வீசம்படி ரத்தம் விழும். அதுமுதல் விடியும் வரைக்கும் இமைகொட்டும் நேரங்கூட இடைவிடாது இருமிக்கொண்டே கபம், கோழையாக வந்து வெளியேறிக்கொண்டே அழுகிய கோழி முட்டையைப்போல் துர்வாடையுடன் வரும். காலையில் பார்த்தால் ஒருபடி கடம் இருக்கும். தலை சாய்த்து தூங்கி 8 மாதம் ஆகிறது. சரீரம் நாளுக்குநாள் மெலிந்து விட்டது. நடக்க சக்தியில்லை. இந்த நிலைமையில் மதுரை ஆஸ்பத்திரியில் மருந்து சாப்பிடலாமென்று போனேன். நெல்மிஷன் செட்டியார் நான்படும் கஷ்டத்தைப்பார்த்து, தானும் இந்தப்படியே கஷ்டப்பட்டதாயும், தங்களுடைய தாளக ஸ்பம் சாப்பிட்டு சொஸ்தமடைந்ததாயும் சொல்லி தங்கள் விலாசத்தைக்கொடுத்தார். அந்தப்படியே தங்களுக்கு எழுதி 6 நாள் மருந்து சாப்பிட்டேன். ஏழாம்நாள் நல்ல எண்ணை தேய்த்து தலைமுழுகியதில் அந்த ராத்திரி நன்றாய் தூங்கினேன். ரத்தம் விழுவதும், இருமல், வாந்தி; கபம்விழுவதும், துர்வாடை வீசுவதும் அன்றே நின்றுவிட்டது. அதிலிருந்து எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். நல்ல பசி எடுக்கிறது. ஆகாரம் நன்றாய்ச் சாப்பிடுகிறேன். சரீரம் நல்ல திடத்துடன் நல்ல நிலைமையிலிருக்கிறேன். தூக்கம் நன்றாய் தூங்குகிறேன். இப்படியுள்ள வியாதியில் போன உயிரைக் காப்பாற்றிய மகான் யாரோ அவரை நேரில் போய் தரிசித்து நல்ல வாக்கு வாங்கிக்கொண்டுவா என்று இவ்விடத்திலுள்ளவர்கள் சொன்னார்கள். அந்தப்படி நான் நேரில் வநது தரிசித்தேன். ப. வீரமலை செட்டியார், சிங்கம்பிடாரி, ராமநாட்: 10—12—24.

ஆஸ்தமா என்பது தீராத ரோகம். அப்படியுள்ள ரோகத்திற்கு நமது தாளபஸ்பம், வகையரா சேர்த்து 20-நாள் சாப்பிட்டு பூரா சொஸ்தமாகி புகழ்ந்து எழுதியதைக் கவனியுங்கள்:— அகண்ட பரிபூரண மண்டலகார சர்வ பரிபூரண சச்சிதானந்த மயமாய் விளங்கும், கதிர் வேலுக்கு எதிர் வேலில்லை என்கிற வாக்கியம் தங்களுக்கே தகுதியானது. என் சம்சாரம், கமலத்தம்மாளுக்கு 10 வருஷகாலமாயிருந்த ஆஸ்தமா என்ற வியாதி தங்களுடைய மருந்தினாலும் பழனி ஆண்டவர் அருளாலும் மேற்படி வியாதி படாபஞ்சாக பறந்துவிட்டது. (அதாவது) சூரபத்மனுடைய சைமன்யங்களும், சிம்ம மகா சூரனென்ன, தாருகா சூரனென்ன, பானுகோப சூரனென்ன, இவர்களை தன் சக்தி வேலாயுதத்தினால் அந்த அசுரர்களை வென்று தேவர்களுக்கு அபயம் கொடுத்தார். அந்த வேலை நீங்கள் "தெய்வம் மானுஷ ரூபேண," என்கிற பிரகாரம் தங்களை தன்னுடைய அடிவாரத்தில், பக்தனாக வைததுக்கொண்டு உலகப்பிரசித்தியாக்கி எங்களைப் போன்ற ஏழை எளியதுகளுக்கு தங்களை ஒரு சிரோரத்தினமாக வைத்திருக்கிறார். ஏதோ இப்படிக்கெல்லாம் ஸ்துதிசெய்து எழுதினேனென்று வருத்தப்படக்கூடாது. நான் பட்ட அவஸ்தை அந்த பகவானுக்குத்தான் தெரியும். தாங்கள் அந்த அவஸ்தையை நீக்கியதால் நான் ஆனந்த கடலில் மூழ்கி ஆனந்த கண்ணீர் பெருகி இந்த கடிதத்தை எழுதினேன். தங்களை தெய்வமாக நம்பியிருக்கிறேன். ஆர் கைலாச சாஸ்திரி, பிராமண சங்க உபாத்தியாயர், 38 தெரு, 29-ம் நெம்பர் வீடு, ரங்கூன். 15—7—26.

வைத்திய ஆசிரியர்,

ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை சித்த வைத்தியசாலை, பழனி.

தந்தி விலாசம் "சித்தர்" பழனி

நமது பிராஞ்சு வைத்தியசாலை 29, பிராட்வே மதராஸ்.

நமது வைத்தியசாலை பழனியில் ஸ்தாபித்து 26-வருமாகிறது. பழனியில் முதன் முதல் ஸ்தாபிக்கப்பட்டு உலக மெங்கும் நல்ல பேர் எடுத்த வைத்தியசாலை இதுவேயாகும்.

வைத்திய சாஸ்திரத்தில் மகா நிபுணர், மூப்புவைக் கண்டுபிடித்தவர்.

ரிஜிஸ்டர்
TRADE MARK

இம் மருந்துகள் மூதன்தரமான தேவ ஔஷதங்களென்று 1923-ல் திருநெல்வேலியில் கூடிய சித்தர் ஆயுள் வேத மெடிகல் கான்பரென்ஸிலும 25-8-23-ல் சென்னையில் நடந்த ஷை கான்பரென்ஸ் அண்டு எக்ஸிபிஷனிலும், தங்க மெடலும் "வைத்திய ஆசிரியர்" என்று பட்டமும் பெற்றவர். ஒவ்வொரு மருந்துகளுக்கும் கணக்கற்ற நற்சாக்ஷிப்பத்திரங்கள் வந்த வண்ணமாயிருக்கின்றன. அவற்றுள் சில அடியில்காண்பன

தாதுபுஷ்டியில் மன்மதனுக் கொப்பாவர்.

பலனில்லாவிடில் பணத்தை திருப்பிக்கொடுக்கப்படும்.
நீங்கள் என்றுமழியாத இளமைப் பருவத்தை அடைய வேண்டுமானால்,

பழனி ஆர். எம். கே.

த ங் க ப ஸ் ப ம்

நரசிங்க லேகியத்தில் சாப்பிடுங்கள்.

இது ஒரு கற்பத்திற்கு சமானமானது. உலகப்பிரசித்தி பெற்றுவிட்டது.

தாது புஷ்டிக்கு இதற்கு நிகரான மருந்து ஒன்றுமேயில்லை! இது பிரபுக்கள் சாப்பிடவேண்டிய மருந்து! மற்றவர்கள் சாப்பிட்டு தாங்கமுடியாது.

இதிலமைந்திருக்கும் ஓர் அபூர்வசக்தி உபயோகித்தவர்களுக்குத்தான் இதனருமை தெரியும். இதைக் காலை மாலை நோய்பலம்போல் 1, மண்டலம் உட்கொண்டால் வெகு சீக்கிரத்தில் வீரியத்தையும், பலத்தையும் கொடுத்து இழந்து போன ஆண்மைத்தனம் முழுமையும் திரும்பிவரும்படி செய்கிறது. இக்குணம் இதிலமைந்திருப்பது மகா ஆச்சரியமாயிருக்கிறது. இப்படியும் ஒரு மருந்துண்டாவென்று பிரமிக்கச்செய்கிறது. தாதை கட்டுவதில் அபாரசக்திவாய்ந்தது. இதின் பெருமையை எழுதி முடியாது. நீரிழிவு, பிளவை, குன்மம், காசம், க்ஷயம், ஈளை, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு, குஷ்டம், சூலை, கிரந்தி, கருமேகம், செம்மேகம், வெள்ளை, வெட்டை, கடுப்பு, எரிச்சல், மூலம், பவுத்திரம் சகலவித கர்ம வியாதிகளையும் நிவர்த்தி செய்து, தாதுபுஷ்டியை உண்டாக்குவதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை. பத்தியமில்லை: 100 நாளைக்கு தங்க பஸ்பமும், நரசிங்க லேகியமும் ரூபாய .00. 50 நாளைக்கு ரூபாய் 50. 25 நாளைக்கு ரூபாய் 25.

மேகரோகம் கொடிய வியாதியில்லாதவர்கள் தாதுபுஷ்டி சரீரநிடம் அடைய தங்கபற்பத்தை அனுபானம் மகா மன்மத கேசரி அல்வாவில் சாப்பிடவும். காமகேசரி அல்வாவும் தங்கபற்பமும் 100 நாள் மருந்து ரூபாய் 50. 50 நாளைக்கு ரூபாய் 25. 25 நாளைக்கு ரூபாய் 12—8—0.

நற்சாக்ஷி:— 1-9-24ல் கோலாசெலங்கர் டிஸ்டிரிக்ட் ஹாஸ்பிடல் அஸிஸ்டெண்ட் ஸர்ஜன் நமது தங்க பஸ்பத்தைப் பற்றி புகழ்வதை கவனியுங்கள்:— அன்பார்ந்த வைத்திய ஆசிரியர் ஆர். எம். வேலுசாமி பிள்ளை அவர்களுக்கு அதிக பக்தியுடன் எழுதுவது யாதெனில், தங்க பஸ்பமும், சாலாமிசிரி லேகியமும இரு நோயாளருக்கு 50 நாட்களாக கொடுக்கப்பட்டது. இருவரும் தங்கள் குறைகள் நீங்கி நல்ல சவுகரியத்துடனிருக்கிறார்கள். தாங்கள் அருமையாகச்செய்த பஸ்பமும், லேகியமும் யாவாலும் கொண்டாடத்தக்கதே. இன்னும் 100 நாளைக்கு தங்க பஸ்பமும், சாலாமிசிரி அல்வாவும் ரூபாய் 50 க்கு வி. பி. செய்யவும். ஷை டாக்டர் அவர்களே 19-1-25ல் எழுதுவதை கவனியுங்கள்:— தங்களின் அருமையும் பெருமையுமான தங்க பஸ்பமும், சாலாமிசிரி லேகியமும் எனது நோயாளி ஒருவருக்கு கொடுத்தேன். அவரின் எத்தனையோ விதமான நோய்கள் பஞ்சுபோல் பறந்து போய்விட்டது. இப்போது அவர் நல்ல திடதேகியாயிருக்கிறார். ஆகையால்; அடியிற்கண்ட மருந்துகளை அனுப்பவும். தாம்பர பஸ்பம் 80-வேளை தாளிசபத்திரி சூரணம் 40-வேளை ஒருமாதம் சாப்பிடக்கூடிய நரசிங்க லேகியம், தங்க பஸ்பம் ரூபாய் 50. செலவு ரூபாய் 2. ஆக ரூபாய் 97-க்கு வி. பி. செய்யவும்.

ஷை டாக்டர் அவர்களே 2-6-25-ல் எழுதுவதை கவனியுங்கள்:— ஸ்ரீமான் வைத்திய ஆசிரியரவர்களுக்கு தங்களின் மருந்துகள்யாவும் நோயாளர் யாவருக்கும் சுகத்தையும், மனத்திருப்தியையும் கொடுத்திருக்கின்றது. தங்கள் மருந்துகளின் அருமையையும், பெருமையையும் நான் அனேகருக்கு அனுபவமாக அத்தாக்ஷியுடன் எடுத்துக் காட்டியிருக்கிறேன், தங்கள் மருந்துகளுக்கு சர்டிபிகேட் தேவையில்லை. மருந்து ... தாமே தங்கள் பெயரை எங்கும் விளங்கச்செய்கின்றது. ஆகையால் தாம்பர பஸ்பம், நரசிங்க லேகியம், ... இவைகளை வி. பி. செய்யவும். (ரூபாய் 238-க்கு வி. பி. பார்சலில் அனுப்பியிருக்கிறது.) P- Nagalingan Hospital C/o Disrict Hospital Kualaselenger.

வைத்திய ஆசிரியர்,

ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,

சித்த வைத்தியசாலை, பழனி

தந்தி விலாசம்:— "சித்தர்" பழனி.

நமது பிராஞ்சு வைத்தியசாலை 29, பிராட்வே மதராஸ்.

8-ம் பக்கத் தொடர்ச்சி.

ங்கள் தப்பாக நினைக்கும்படி நாங்கள் எழுதினதை மாற்றிக்கூறுவது ஞாயவிரோதம். லாலாஜியை என்ன கேட்டார்கள், என்ன சொன்னார், என்பதை திரித்துக்கூறும் பேப்பர்களிலிருந்து அறிவது கஷ்டம். அவர் எப்படி சொன்னாலும் மனுதர்ம சாஸ்திரத்திலிருக்கிறதா இல்லையா? என்பதே தெரிய வேண்டியவை. புஸ்தகத்திலுள்ளதை அப்படியே அத்தியாயம், சுலோகம், வரி, பக்கம் தவறாமல் குறித்து[illegible]ிருக்கிறோம். நம் நாட்டில் வடமொழியும் தென்மொழியும் படித்தவர்கள் இருப்பதையும் இல்லாததையும் சொல்லட்டும். கனம் ஷண்முகம் செட்டியார் அவர்களே புஸ்தகத்தில் இருப்பதும் இல்லாததும் சொல்லிவிட்டால் அதிவிசேஷமே. மனுச்சட்டமான பழய குப்பையை ஏன் கிண்டிக் கிளறி தலையில் போட்டுக்கொள்ளுவானேன் என்று எங்களுக்குச்சொல்லுவது போல் பாப்பார் பக்கம் பேசி அவர்களால் பெருமையடையும் சிலர் மறைந்திருந்து மறுப்பெழுதுகிறார்கள். அவை ஒழுங்குக்கு விரோதம். பழங்கதையை நாங்கள் எழுதுகையில் ராஜகோபாலாச்சாரி வியாக்யானம்செய்ய ஏன் வருகிறார். அந்த இடத்தில் தான் பாப்பான் அரசாக்ஷியின் சாவி இருக்கிறது.

1818-ம் வருடச் சட்டம் பழங்கதைதான்; புதிதாகப்படித்து வந்த வக்கீல்களுக்கு அவை படக்கம் போலவே யிருக்கும் சட்டசபை மெம்பர்களில் சிலருக்கு அதைப்பற்றித் தெரியாது. சிலருக்கு மறந்திருக்கும்; சிலருக்கு அலட்சியத்தால் தோற்றுது. தங்களுக்குக் குறைவில்லாத பெருமையின் புகழ்ச்சியால் எது எப்படிப்போனாலும் போகட்டுமென்னும் அறிவீனத்தால் தோற்றுது. ஆனால் தன் ஆதிக்கம் நிலைத்து நிற்கவே நினைத்துக்கொண்டிருக்கும் அதிகாரிவர்க்கம் அந்த சட்டத்தை மறந்துவிடவில்லை. தங்கள் காரியத்திற்கு பின்னம் வருமென்று நினைத்தால் யார் கழுத்திலும் அவை வந்து மாட்டிக்கொள்ளும். அதுபோலவே மனுச்சட்டமும் சமூக வாழ்க்கையில் யாராயிருந்தாலும் பாப்பானின் ஆதிக்கத்திற்கு பங்கம் வருமென்றிருந்தால் அவனுடைய கழுத்திலும் வந்து மாட்டிக்கொள்ளும். திருவனந்தபுறத்துப் பார்ப்பார்கள் வேத ஸ்ருதிகளின் படியாவது தர்ம சாஸ்திர ஸ்மிருதிகளின்படியாவது நடக்கும் பார்ப்பார்களன்று. அதிலும் தமிழ்நாட்டுப் பாப்பார்களில் கெட்டுப் போன பாப்பார்கள் திருவனந்த புறத்து ஊட்டுப்புரைச்சோற்றுக்கு அங்கு போய்க்கிடக்கிறார்கள். இவர்களுக்கு சோறு திருடி விற்பதே பெரிய வேலை. சோற்றை விற்பவன் பாப்பாரத்தன்மையினின்று நீங்கினவனாவான் என்பது ஸ்மிருதி விதி. சோறு திருடி விற்கிற பார்ப்பானைவிடச் சண்டாளனில்லை. இந்தப்பார்ப்பார்கள் கொடுமையினாலே தான் எல்லா நாட்டையும்விட திருவனந்தபுரத்தில் இந்துக்கள் கிறிஸ்தவர்களாவதும் மகமதியர்களாவது மதிகம். இந்து மதம் சுருங்கக் காரணமாயிருக்கும் இப்பாவிகள் நிறைந்து மூக்குச்சளியும், வயிறு பெருக்க தின்று செரியாமல் படும் கஷ்டத்தால் விடும்அபானவாயுவின் சத்தமும், அதனால் உண்டாகும் துர்நாற்றமும், மூக்குப்பொடியோடு கூடிய சளியின் அசிங்கமும் நிறைந்து கிடக்கும் பத்மனாப சுவாமி கோவிலுக்குள் லாலாஜியை விடாதது மனுச்சட்டமல்லவென்று யாராவது சொல்ல முடியுமா? இந்து மதத்திலிருந்து அன்னிய மதத்திற்குப் போகாதபடியும் போனவர்களை இந்துவாக்கியும் உலகமெல்லாம் மதிக்கும் மேதாவியைக் கோவிலுக்குள் விடாது தடுத்தது இந்து மதமல்லவா? அந்த இந்து தர்மத்திற்குத்தான் ஸ்மிருதி என்று பெயர். இப்பேர்ப்பட்ட இந்து தர்மம்கெட்டுப்போனால் பாப்பான்உயிர் விடுவதற்கு முன் 'தமிழ்நாடு' பத்திரிகை உயிர்விட்டுவிடுவதாகச் சொல்லுகிறது.

வியாபாரிகளே! கவனியுங்கள்!!

வியாபாரத்தின் நிலைமையை அடிக்கடி அறிந்து லாபகரமான வழியைத்தெரிந்து அவ்வழியில் தொழிலை நடத்துவதினாலேயே வியாபாரம் ஓங்கி வளரும்

லாபகரமான வழியை அறிவதெப்படி?

உங்கள் தொழிலுக்குத் தகுந்தாப்போல் சரியான கணக்குகள் வையுங்கள்

உங்களுடைய கணக்கு முறைகளை ஒழுங்காக வைத்துக்கொள்வதற்காக

வர்த்தகக்கணித நூல்

என்ற புதிதாக வெளிவந்த புத்தகத்தை வாசித்துப் பாருங்கள்

ஒரு தரம் பார்த்தவுடனேயே நமக்கு வரவேண்டிய தெவ்வளவு, நாம் கொடுக்க வேண்டியதெவ்வளவு, லாப நஷ்டமெவ்வளவு, முதல் தொகை எவ்வளவு வியாபாரத்தில் போடப்பட்டிருக்கிறது, எவ்விதமான தொழில் லாபத்தைக்கொடுக்கிறது என்று சுலபமாகப் பிறருடைய உதவியில்லாமலே ஆங்கிலேயர் எப்படித் தெரிந்து கொள்ளுகிறார்களோ அதே முறையில்தான் ஷை புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது. மேலும், எல்லா வியாபாரிகளும் எவ்விதமான தொழிலுக்கும் ஷை புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற முறைப்படி கணக்குகள் வைத்துக்கொள்ளலாம். படிப்பதற்குக் கஷ்டமில்லாதபடி தெளிவான நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை ரூ 2

வாசன் புஸ்தகசாலை.
நெ. 244, தங்கசாலை வீதி,
தபாற் பெட்டி நெ. 119, சென்னை

மதுரை எலெக்ட்ரிக் கம்பெனி Ltd

ஷேர் 1-க்கு ரூ. 10.

தயவு செய்து ஷை கம்பெனியில் பங்குகள் எடுத்துக்கொள்ளுங்கள். மிகவும் லாபகரமானது. பிராஸ்பக்டஸ்களுக்கும் விண்ணப்ப பாரங்களுக்கும் எழுதுங்கள்.

பார்த்தீர்களா! இரகசிய நூல் படித்தீர்களா!!

ஹிப்னுடிஸ மெஸ்மரிஸமென்னும்

மனோவசிய ரகசிய சாஸ்திரம்.

இப்புத்தகம் ஆங்கில நாட்டார் செய்து அனுபவ மடைந்தது. இதில் தூங்காமல் தூங்குதல், தூக்கத்திலிருப்பவனைப் பலவித வேலை செய்வித்தல், பிறரை வசியப்படுத்தல், புலி முதலிய மிருகங்களைத் தன் வசப்படுத்தல், தூர சங்கதி அறிதல், மருந்தில்லாமல் நோய் தீர்த்தல் முதலிய பல ரகசிய மெஸ்மரிஸ சாஸ்திரம் சித்திரப் படங்களுடன் அடங்கியிருக்கிறது. விலை ரூ. 1—8—0. ஸ்ரீ பானுமதி புஸ்தகசாலை, சூளை போஸ்டு, மதராஸ்.

திரிமூர்த்தி உண்மை

அல்லது

விலை அணா 12 தேவர்களின் இரகசியம் விலை அணா 12

மூல முதற் கடவுள் மூன்றாகி, மூன்று முப்பத்திமூன்று கோடியாக பெருகின அற்புத இரகசியத்தை அறிய விரும்பாதவரும் உண்டோ? தமிழ்நாடு இதுவரையில் கண்டிராத அற்புத நூல். சத்தியார்த்தப் பிரகாச ஆசிரியர் ஸ்ரீ எம். ஆர். ஜம்புநாதன் எழுதினது.

சூடன் அண்டு கோ.,
14, பள்ளியப்பன் தெரு,
சௌகார்பேட்டை, சென்னை

செந்தமிழ் பயிலுவோருக்குத் தீஞ்சுவைப் பொக்கிஷம்!
அருங்கலா விநோதருக்கு ஆராவமுது.

அவ்வை அருந்தமிழ்.

வரகவி திரு. அ. சுப்ரமணிய பாரதி இயற்றியது.

தெய்வப் புலமை வாய்ந்த அவ்வையார் பாடிய சுவை மிகுந்த தனிப் பாடல்கள் யாவும் ஒருங்கு திரட்டப்பட்டு வெளிவருவது இதுவே முதன்முறை. ஒரு பாட்டேனும் இன்பம் விளைவியாமல் இராது. எல்லாம் நெட்டுருச் செய்யத்தக்கவை. இவற்றைக் கற்போர் தமிழ்ச் சுவையை இனிதுணர்வர். தமிழ்ப் புலவராக விரும்புவோரும் சபையில் உபந்நியாசம் செய்வோரும் சல்லாப வல்லவர்களாகத் திகழ விழைகின்றவர்களும் இவற்றைக் கற்றால் அவர் எல்லாராலும் விரும்பப்படுவர் என்பது உண்மை. இந்நூலை படிப்பவர் ஒரு சபையை ஒரு கணப்பொழுதில் அலங்கரித்து விடலாம். சோம்பி இருப்பவரை ஒரு செய்யுளைக் கொண்டு எழுப்பி உற்சாகப்படுத்தி விடலாம். இதில் யாவரும் கற்றுணர வேண்டிய பல நீதிமொழிகளடங்கியிருக்கின்றன.

சில முக்கிய அபிப்பிராயங்கள்.

நவசக்தி.............."இந்நூலில் ஔவையார் பாடிய பாடல்கள் பலவும் ஒருங்கே திரட்டப்பட்டு, விரிவுரையுடனும், விசேஷ வியாக்கியானத்துடனும், தக்க மேற்கோள்களுடனும் வெளியிடப் பட்டிருக்கின்றன............ நீதிக் களஞ்சியம் என்று சொல்லப்பட வேண்டிய "ஔவை அருந்தமிழ்" என்னும் இந்நூல் ஒவ்வொரு மாணவரிடத்திலும், ஏன்? ஒவ்வொரு தமிழரிடத்திலும் இருக்கவேண்டுமென்பதை வற்புறுத்திக் கூற விரும்புகிறோம்."

தமிழகம்............"இந்நூலானது கற்றாரும், மற்றாரும், பெண்டிரும், பாலரும் பன்முறையும் பயிலத் தகுந்தது."

இந்து சாதனம்..........."இந்நூல் கற்குந்தோறும் களிபேருவகை பயக்கும் பான்மையது. அருந்தமிழ் அறிந்தோரொவ்வொருவரும் இவ்வரிய நூலை வாங்கிப் படிப்பது நலமாகும்."

விலை அணா 12. தபாற்கூலி வேறு.

கந்தபுராணம். (வசனம்)

முருகப் பெருமான் திருவவதாரத்தைப் பற்றி உரைக்கும் நூல்கள் யாவற்றினும் சிறந்தது கந்த புராணமே ஆகும். அதுவே முருகவேள் வரலாற்றை முற்ற முடிய நவரசம் பொருந்த இனிய தமிழ்ச் செய்யுட்களால் சைவ சித்தாந்த நெறிதிறம்பாமல் கூறிச் செல்கின்றது. கந்த புராணத்தைச் சைவர் படனஞ் செய்தலோடு அமையாது பூசித்தும் வழிபாடு செய்கின்றனர். பிற சமயத்தாரும் முருகனை வழிபட்டும் அவன் அற்புத மான்மியம் நனி விளங்கும் திருப்புகழ்ப் பாடல்களை இசையுடன் ஓதியும் இன்புற்று வருகின்றனர். ஆதலால் கந்தன் அருமை பெருமைகளை அனைவரும் அறியவேண்டுவது இன்றியமையாததாகும். கந்த புராணம் செய்யுள் வடிவத்திலே யிருந்து இருத்தலின் அதனைப் பயிலுவோர் இலக்கண இலக்கியப் பயிற்சி உடையவராக இருந்தால் அன்றி அது மிக்க பயன் விளைக்கமாட்டாதாகும். இப்போதுள்ள வசன நூல்களும் மிக விரித்தும் செய்யுட்களின் போக்கைத் தழுவாமலும் எழுதப்பட்டிருக்கின்றன. இக்குறையெல்லாம் நீங்கும் பொருட்டும் கந்தர் சஷ்டி விரதம் அனுட்டிப்போர் ஆறு நாட்களில் முழுதும் பாராயணம் செய்து முடித்துச் சித்தியடையும் பொருட்டும் பொருத்தமாக இந்நூல் தெள்ளிய இனிய செந்தமிழ் நடையிலே கந்தபுராணச் செய்யுட்களின் கருத்துக்களையும் முறைமையையும் தழுவிச் சுருக்கமாகத் திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் மடாலயத்து மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் மாணவர் வித்துவான் ஸ்ரீ. முத்துக்கிருஷ்ண ரெட்டியார் அவர்களால் எழுதப்பட்டுள்ளது. இதனைப் படிப்போர் மனமுருகி அன்புவயப்பட்டு முருகதாசர்களாக விளங்குவார்கள் என்பது திண்ணம். இத்தகைய அரிய நூலிலே கண்ணுக்கினிய திருவுருவப்படங்கள் சிலவற்றையும் சேர்த்திருக்கிறோம். இதனைப் பெண்பாலரும், சிறுவரும், முதியோரும் எளிதில் படித்து உணரலாகும். இது தமிழழகு பூத்துச் சைவசித்தாந்த நறுமணம் வீசி, பக்தித் தேன் சொட்டி ஞானக்கனிந்து நிற்றலைக் கண்டு அன்பர் களி துளும்புவார்களாக.

ரப் பேப்பர் கலிக்கோ பைண்டு விலை ரூ. 2 0 0
கிளேஸ் பேப்பர் கலிக்கோ பைண்டு „ ரூ. 2 8 0

தபால்கூலி வேறு.

கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி,
புத்தக வியாபாரிகள், திருவல்லிக்கேணி, சென்னை.

குறிப்பு:—ஒரே தடவையில் கந்தபுராணம் வசனம் ஒன்றும் அவ்வை அருந்தமிழ் ஒன்றும் ஆர்டர் செய்தால் 14 அழகிய தேவதா படங்கள் அடங்கிய இந்துசமயக் காலண்டர் ஒன்று (எட்டணா விலையுள்ளது) இனாமாக சேர்த்து அனுப்பப்படும்.

அநேக
ஜமீன்தார்,
பிரபுக்களால்
தங்க மெடல்கள்
பரிசுபெற்ற
டாக்டர்
S. P. மருந்துகள்.



12 GOLD MEDAL
TO
Dr. S. PALANIYAPPA MUDALI.

அநேக
ஜட்ஜுகள்,
டாக்டர்கள்,
வக்கீல்களால்
நற்சாக்ஷிகள் பெற்ற
டாக்டர்
S. P. மருந்துகள்.

அமிர்தம்

உடலைப்பற்றிய

எல்லா வியாதிகளையும் போக்கும் தேவாமிர்தம்.

பித்தம், மயக்கம், பசியின்மை, சோகை, காமாலை, பாண்டு, வயிற்றுவலி, குன்மம், அரோசிகம், வெட்டை, பித்த வாய்வு, கால்வாய்வு, மார்வலி, மண்டைஇடி, ஒத்தை தலைவலி, மேகம, வாதம், கில்வாய்வு, ஓடுவாய்வு, கிள் பிடிப்பு, கில் [illegible]ம் முழங்கால் வாய்வு, சுவாசகாசம், பாரிச வாய்வு, மலபந்தம், மலச்சிக்கல், மூலாதார உஷ்ணம், மூல மூளை, மூலத்தில் ரத்தம் விழுதல், நாள்பட எல்லா வியாதிகளையும் போக்கும். எல்லோரும் சாப்பிடலாம். பத்தியமில்லை.

குறிப்பு:—அபீசர்களுக்கும் அதிகமாய்-உட்கார்ந்து வேலை செய்பவர்களுக்கும், அலைச்சல் உள்ளவர்களுக்கும், முக்கியமானது. அன்றாடம் மல நிவர்த்தி கிரமமாய் செய்து, தேகத்தை தங்கமயமாக வைத்திருக்கும்.

ஒரு சோடின் விலை ரூபா 2—0—0 வி. பி. வேறு.

தங்கரேக்

மன்மத குளிகை.

20 நாள் சாப்பிட்டுப் பாருங்கள். இதன ஆச்சரியமான குணமும் பலமும் தெரியும்.

பிரபுக்களுக்கென்றே தயாரித்தது

தங்கரேக், கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ சேர்ந்தது. அபாரமான தாதுபுஷ்டியையும், நீடித்த சுகத்தையும் கொடுக்கும். தாது உடைதல், மேகவியாதி, நீர் அழிவைப் போக்கும். 20 நாள் உபயோகம் 40 குளிகை ரூபா 7-8-0. 10 நாள் 20 குளிகை ரூபா 4. வி. பி. வேறு.

பிரமேக நிவாரணி.

வெள்ளை, நீர்க்கடுப்பு, இரத்த வெள்ளை, மஞ்சள் வெள்ளை, தந்தி வெள்ளை முதல் சகல வியாதிகளையும் மூன்று தினத்தில் குணப்படுத்தும். புட்டி 1க்கு ரூ. 2 வி. பி. வேறு.

மகாமன்மத சிந்தாமணி லேகியம்.

தாது விர்த்தி, ஜீரண சக்தி, மனோ சக்தி, புத்தி கூர்மை, பரமானந்தமும் அளிக்கும்.

No. 1. சேர் டின் ரூ. 2—4—0 No. 2. ரூ. 1—8—0 வி. பி. வேறு. பினாங்கு, சிங்கப்பூர், கோலாலம்பூர், நெட்டால், முதலிய அன்னிய நாட்டார் தபால் செலவு ரூ. 2-8-0 சேர்த்து முன்பணம் அனுப்பவும்.

முக்கியமான நற்சாக்ஷிகள்!!

TESTIMONIALS.

முக்கியமான நற்சாக்ஷிகள்!!

"Dr. S. P. மருந்துகள் அநேகமாய் குணத்தைக் கொடுக்கிறது. மற்ற சில மருந்துகளைப்போல் எவ்வித கெடுதலும் செய்கிறதில்லை. அடியிற்கண்ட நாங்கள் Dr. S. P. மருந்துகளையே வாங்கி எல்லோரையும் உபயோகப்படுத்தும்படி சிபார்சு செய்கிறோம்.

ம-௱-௱-ஸ்ரீ ஸர். பி. எஸ். சிவசாமி அய்யர் அவர்கள், கே. சி. எஸ். ஐ. சி. ஐ. இ. மதராஸ்.
,, டி. ரங்காச்சாரியார் அவர்கள், ஹைகோர்ட்டு வக்கீல், மதராஸ்.
,, கே. இராஜாக் கவுண்டர் அவர்கள், ஜமீன்தார், இளநகர்.
,, என். இராஜாக் கவுண்டர் அவர்கள், ஜமீன்தார், மானத்தி.
,, எஸ். எஸ். சுப்பையா கவுண்டர் அவர்கள், ஜமீன்தார், முசிரி.
,, சி. எம். ரங்கராவ் அவர்கள், வக்கீல், நாமக்கல்.
,, வி. எஸ். சேதுராமராவ் அவர்கள், டாக்டர், நாமக்கல்.
,, எம். வீரப்ப பிள்ளை அவர்கள், மிராசுதார், தாலூக்கா போர்டு டிஸ்டிரிக்ட் போர்டு மெம்பரும் அண்டு யூனியன் சேர்மன், பாண்டமங்கலம்.

ம-௱-௱-ஸ்ரீ எ. கந்தசாமி பிள்ளை, போஸ்டு கிளார்க்கு, செரம்பான் F. M. S.
,, ஜே. சிவராமய்யர், நேட்டிவ் டாக்டர், பாண்டமங்கலம்.
,, சபாபதி முதலியார், ஜோவலியம் அண்டு வைத்தியம், காட்டுப்புத்தூர்.
,, கே. ஆர். முத்துசாமி செட்டியார் அவர்கள், மிராசுதார், (யூனியன் சேர்மன், வேலூர்).
,, பழனி செட்டி, நேட்டிவ் டாக்டர், கோலாலம்பூர் F. M. S.
,, கே. வி. ரங்காச்சாரியார் அவர்கள், சப் ரிஜிஸ்டரார், வேலூர்
,, சி. எஸ். வி. எஸ். சர்மா, போஸ்டு மாஸ்டர், வேட்டைக்காரன் புதூர்.
,, எஸ். மகாலிங்க சர்மா, சுதேசமித்திரன் ஆபீஸ், மதராஸ்.
,, எஸ். சுப்புரத்னமய்யர், போஸ்டு கிளார்க்கு, வேலூர்.

வள்ளி வைத்தியசாலை,
வேலூர் போஸ்டு (சேலம் ஜில்லா)
Via புகலூர் (S. I. Ry.) S. India.

நமது பிராஞ்சு வைத்தியசாலை,
என். தண்டபாணி பிள்ளை, மானேஜர்,
நெ. 292, சைனாபஜார்ரோடு, மதராஸ்.

[illegible] "உண்மை விளக்க" பதிப்பகத்தில் [illegible]